1055

உமா

ஆசிரியர்: ஜி. உமாபதி

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
4 - MAR 1957
MADRAS
1055
1-57

சரும வியாதிகளுக்கு
சிராய்ப்புகள்,
வெட்டுகள், படை,
சொரி, கரப்பான்,
கட்டிகள், கடி,
விஷக்கடி, சதைத்
தடிப்பு, முகப்பரு
போன்ற இதர சரும
உபாதைகளுக்கு
எக்ஸிமா
கட்டிகள்
பருக்கள்
வெட்டுக்காயம்.
புண்கள்
OINTMENT
Germex
ஜெர்மெக்ஸ்
குளோரோபில் கலந்தது
லிட்டில்ஸ் ஓர்யண்டல் பாம் & பார்மசூடிகல்ஸ் லிட்., மதராஸ்-1

For

QUALITY DIAMONDS

EXQUISITE JEWELLERY

ARTISTIC SILVER WARES



M/s. T. GOVINDARAJULU NAIDU

DIAMOND MERCHANTS & JEWELLERS

28, NETAJI ROAD :: MADRAS-1.

★

Phone: 4818 **T. G. N.** Grams: "ALANKAR"

Uma March—57.

சென்னையில்

பாரகன்—பிராட்வே—சயானி

மற்றும் தமிழ்நாடெங்கும்

விநியோகஸ்தர்கள் :

சென்னை : ஸ்ரீ சிவாஜி பிலிம்ஸ் (பிரைவேட்) லிமிடெட், சென்னை-14.
வட-தென் ஆற்காடு. சித்தூர், பாண்டி : ராஜா பிலிம்ஸ், மதராஸ் 2.
மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி. திருச்சி, தஞ்சாவூர், செட்டிநாடு :
வீயார் பிலிம்ஸ் (பிரைவேட்) லிமிடெட், புதுக்கோட்டை.
சேலம், கோயமுத்தூர், நீலகிரி : ஈரோடு பிக்சர்ஸ் சர்க்யூட், ஈரோடு.
மலபார் : ஜியோ பிக்சர்ஸ் (பிரைவேட்) லிமிடெட்.
எப். எம். எஸ். : பஸல் இலாஹி & கோ சிங்கப்பூர்.
மைசூர் ஸ்டேட் - விஜயா டாக்கி டிஸ்ட்ரிப்யூட்டர்ஸ், பெங்களூர்.

எனது இனப்பெயர்—தமிழன்
எனது கொள்கை—சமதர்மம்
எனது தாய்நாடு — தமிழ்நாடு
எனது குடும்பம்—இந்திய சமுதாயம்
எனது கோரிக்கை—தமிழரசு
எனது பண்பு—தெய்வீகக கலாசாரம்
எனது சமரசநெறி—சர்வதேச
சகோதரத்துவம்

துணை ஆசிரியர்:
பூவை எஸ். ஆறுமுகம்

செடி 4 மலர் 11	மார்ச், 57	துன்முகி ஹூ பங்குனி-மீ

பொருளடக்கம்

யார் சொல்லுகிறுர்கள் என்று பார்க்காமல், என்ன சொல்லுகிறுர்கள் என்று பாருங்கள்! (தலையங்கம்) 7
இலங்கைத் தமிழர் பிரச்சினை 9
ஜனநாயகத்துக்கு ஆபத்து! 10
உங்களுடன் ஒரு கணம் 11
தம்பிக்கு (கடிதம்).... 12
எங்கள் இதயங்கள் பேசுகின்றன 14
இலக்கியப் பட்டி மண்டபம் 15
ஜாதி ரோஜா (தொடர் கதை) 19
கொத்தமங்கலம் சுப்பு (பேட்டி) 26
ஞானஸ்னனம் 35
பேயும் நாயும்! 43
காதலுக்கும் அடி சறுக்கும்! 44
நான் விரும்பும் எழுத்தாளர் 50
வாடா விளக்கு (தொடர்கதை).... 53
காதலா, உறவா? (போட்டிக் கதை) 63
படைத்தவனுக்குப் பரீட்சை! 64
நல்ல சிபாரிசு தேவை! 65
பாசம் இங்கே 70
மதிப்புரை 75
வாழ்க்கையோ வாழ்க்கை! 76
எங்கள் வீட்டு மகாலக்ஷ்மி 78

'உமா'வில் வெளியாகும் கதைகளில் உள்ள
பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே.
சம்பவங்களும் கற்பனையே

நான்கு நன்மைகள்
ZAMA INHALER
ஜாமா இன்ஹேலர்
ஜலதோஷத்திற்கு
ZAMA RUB
ஜாமா றப்
ஜலதோஷம் தலைவலி முதலியவைகளுக்கு
ஜாமா ஆயில்
ஜலதோஷம் தலைவலி முதலியவைகளுக்கு
AMARCOSE
அமர்கோஸ்
அசல் குளுகோஸ பவுடர்
அமர்சந்த் சோபாசந்த்
தபால் பெட்டி 518 - - சென்னை-3
போன் 2182
தந்தி "ஜாமா"
197220

யார் சொல்லுகிறார்கள் என்று பார்க்காமல் என்ன சொல்லுகிறார்கள் என்று பாருங்கள்!

மற்ற எல்லா மாகாணங்களையும்விட காங்கிரஸ் என்று சொன்னவுடன் ஒரே முகமாக நூற்றுக்குத் தொண்ணூறு சதவிகிதம் ஓட்டளித்து உயர்வு தேடித்தந்த நமது மாகாணத்திலேதான் இப்பொழுது ஓட்டை யாருக்குத் தருவது என்ற குழப்பநிலை உருவாகி விட்டது. இதே நிலை பிற மாகாணங்களிலே இருந்தாலும், இப்படி ஒரு பெரிய குழப்பமான சூழ்நிலை அங்கெல்லாம் ஏற்படவில்லை. இதற்குக் காரணம் என்ன என்பதை யோசிக்கவேண்டும். இன்றைய தமிழ்நாடு காங்கிரஸ் சரித்திரத்தின் கடந்தகால நிகழ்ச்சிகளை நாம் நினைவுபடுத்திக் கொண்டால், காரணங்கள் தெளிவாகப் புரியும்.

ஆம்; இத்தகைய ஓர் இக்கட்டான கட்டம் உருவாகுமென்று எண்ணித்தான் தலைவர் ம. பொ. சி. அவர்கள் காங்கிரஸில் இருந்த அன்றே அறிவால் உணர்ந்து முன்கூட்டியே எடுத்துச் சொன்னார்கள். ஆனால், அன்றைக்கு அவரை எதிர்த்தவர்கள், இன்றைக்கு அதே தமிழ்நாடு காங்கிரஸ் நடவடிக்கைகளை அனுபவபூர்வமாக அறிந்து, எதிர்த்து, இன்று வெளியேறி இருக்கிறார்கள். இத்தகைய சூழ்நிலையில் சீர்திருத்தத்தை உண்மையாக விரும்பிய இவர்கள், அன்றே தலைவர் ம. பொ. சி. யோடு ஒத்துழைத்திருந்தால், அவரும் அவரைச் சார்ந்த வீர ஊழியர்களும் அங்கிருந்து வெளியேறாமலேயே, உள்ளேயே இருந்து குறைகளைக் கண்டித்துத் திருத்தி, சுமுகமான சூழ்நிலையை ஏற்படுத்தியிருப்பார்கள். தமிழகம் இப்படிப்பட்ட அவலநிலைக்கு இன்று ஆளாகி யிருக்காது. போகட்டும்; இன்றாவது அவரின் தீர்க்க திருஷ்டியை உணர்ந்திருக்கிறார்களே என்று ஓர் ஆறுதல் ஏற்படுகிறது.

பாவம்! இன்றையத் தமிழ் நாட்டின் காங்கிரசிற்கு அறிவுக்குப் பொருத்தமான வாதத் திறமையோடு சொற்பொழிவாற்ற மாபெரும் தலைவர் ம. பொ. சி. கிடையாது; அவரைப் பின்பற்றும் அன்பும் பண்பும் வீரமும் விவேகமும் கொண்ட ஊழியர்கள் கிடையாது. ஆதலால், சினிமாப் படம் எடுத்து, அதன் மூலமாகப் பிரசாரம் செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள் ஆட்சியாளர்கள். அத்துடன், நமது தேசியக் கொள்கைக்கும், தெய்விகக் கலாசாரத்திற்கும், இந்திய ஐக்கியத்திற்கும் எதிரிகளானவர்களின் இரவல் பிரசாரத்திலே இன்றைய தேர்தல் விழா இயங்கி வருகிறது. இந்நிலையைத்தான் சிலர் பகிரங்கமாக எடுத்துக் காட்டிக் குற்றஞ் சாட்டியும், வேறு சிலர் தைரியக் குறைவினால் மழுப்பியும் வருகிறார்கள்.

இனி, இந்நாடு எந்நிலை அடையப் போகிறது, எவ்விதமான மாற்றம் கண்டால், தமிழ் நாடும் தமிழ் மக்களும், தமிழ்ப் பண்பும் நலம்பெற முடியும் என்பதைச் சிந்தித்துச் செயல்பட்டால்தான்,

வருங்காலத்திலாவது நல்ல காலம் பிறக்க முடியும். இதற்கான வழி வகைகளை மக்கள் மன்றத்திலே நாம் எடுத்துச் சொல்லும் போது, யார் சொல்கிறார்கள் என்று பிரித்துப் பார்க்கிறார்களே தவிர, என்ன சொல்கிறார்கள் என்று உணர்ந்து பார்க்கத் தவறி விடுகிறார்கள்!

தமிழகம் இதுவரைக் கண்டிராத வகையில், தெய்விகப் பண்பும் தேசப் பற்றும் மிகுந்த கலாசார வாதிகளும் – கண்ணிய சீலர்களும் சேலத்திலே ஒருமுகமாகக் கூடினார்கள். அந்தச் சரித்திரப் பிரசித்தி வாய்ந்த மாநாட்டின் சம்பவத்தை மற்றவர்கள் நன்றாகப் புரிந்துதான் இருக்கிறார்கள். அப்படி நமது மகத்தான சக்தியை உணர்ந்து கொண்டதாகப் பகிரங்கமாக அவையிலே பேசினால், பத்திரிகைகளிலே தீட்டினால், ம. பொ. சி-யின் கழகம் இன்னும்பலம் பெற்றுவிடுமோ என்ற அச்சம் அவர்களுக்கு! அப்படி நம்மைப் போன்ற நல்லவர்களைத் தட்டிக் கொடுக்கத் தயங்கும் காரணத்தினால்தான், அனுச்சாரக் கும்பல் அதன் உள்ளே புகுந்து, தடி எடுத்தவன் தண்டல்காரனாக மாறியதுபோல், இன்று தமிழகத்தின் தலையெழுத்தையே மாற்றி விட்டார்கள் சில சுயநலவாதிகள்!

தமிழ் நாட்டிலே மற்ற மற்றக் கட்சிகள் அகில இந்திய அமைப்பில் இயங்கி வருவதால், தம் சொந்த இனம் உயரவும் உய்வு பெறவும் ஆவன செய்ய முடியாத சூழ்நிலையில் அவை நிலவி வருகின்றன, ஆனால், நமது தமிழரசுக் கழகம் ஒன்றுதான் இந்தியன் என்ற பிரஜா உணர்வோடு–தமிழன் என்ற இனப் பாசத்தோடு அதன் உயர்வுக்கும் நாட்டின் மேன்மைக்கும் வழிகோலி வருகின்றது. இந்த உண்மையை உணர்ந்தும் உணராதது போல இருக்கின்ற பத்திரிகைகளும், எழுத்தாளர்களும், கலைஞர்களும், அறிஞர்களும் ஒரு நாள் பாராட்டத்தான் போகிறார்கள். அந்நாள் விரைவில் வரப்போகும் திருநாளாகும்.

திரு சின்ன அண்ணாமலை - திரு எச். டி. ராஜா

நம் நாட்டின் விடுதலைக்காக சிறையிலே நலிந்தவர். தமிழன் பெருமைகளை விளக்க தமிழ்ப்பண்ணை அமைத்தவர். நாட்டிற்கு நல்லறிவு வளர்க்கும் நல்லவர்களை அவைக்குக் கொண்டு வந்தவர். தனக்கே உரித்தான பொருள் பொதிந்த நகைச் சுவைச் சொற்பொழிவில் பல வீரர்களை உருவாக்கியவர். இவை யாவற்றையும்விட, தமிழினத்திற்கு விழிப்பு ஏற்படச் செய்த தமிழரசுக் கழகத்தின் தனிப்பெரும் தலைவர் ம. பொ. சியின் ஆசி பெற்றவர். இத்தனை நற்பண்புகளுக்கும் பாத்திரமான அண்ணார் சின்ன அண்ணாமலை அவர்கள் சென்னை, திருவல்லிக்கேணி தொகுதியில் தமிழ்நாடு சட்டசபைக்கு அபேட்சகராக நிற்கின்றார். அவருடைய சின்னமான பூப்பெட்டியில் வாக்களித்து, அவரை வெற்றி பெறச் செய்ய ஒவ்வொரு தமிழ் மகனும் தமிழ் மகளும் பாடுபட வேண்டுகிறேன். குறிப்பாக, தமிழரசுக் கழக ஊழியர்கள் சென்னையில் உள்ள அத்தனை பேர்களும், முடிந்தால் வெளியூரிலிருந்து வந்தும் அவருடைய வெற்றியிலே பங்கெடுத்துக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

லோக சபைக்கு தென் சென்னை அபேட்சகராக நிற்கும் பழம்பெரும் தேசபக்தர் திரு எச். டி. ராஜா அவர்களுக்கும் அன்னாரது பூப்பெட்டியிலே ஓட்டளித்து ஆதரிக்கக் கோருகிறேன்.

ஜி. உமாபதி,
தலைவர், சென்னை ஜில்லா தமிழரசுக் கழகம்.

ஜனநாயகத்துக்கு ஆபத்து!

அண்மையில் திரு ஜெயப்பிரகாச நாராயண் அவர்கள் பொது மக்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்திருக்கிறார். அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் அடங்கியிருக்கும் கருத்து, தேர்தலில் காங்கிரஸ் எதிர்ப்பாளர்களுக்கே வோட்டு போடவேண்டும் என்பதாகும்.

"காங்கிரசுக்கு வோட்டு போட்டால் ஜனநாயகத்துக்கு ஆபத்து; ஒரே கட்சியின் சர்வாதிகாரத்தை இனியும் தொடர்ந்து நீடிக்க விடக்கூடாது. இத்தகைய பயங்கரமான நிலை தொடருமேயானால், நல்ல அரசாங்கம் ஏற்பட முடியாது. அதனால் பொது மக்களின் நலனுக்கும் ஆபத்து வந்துவிடும்," என்றும் அவர் குறிப்பிட்டிருக்கின்றார்.

அன்றாடச் செய்தித் தாள்கள் பெரும்பாலும் தேர்தல் விழா பற்றிய விவரங்களைத்தான் தாங்கி வந்து கொண்டிருக்கின்றன. சில இடங்களிலே மேள தாளத்தோடு தேர்தல் பிரசாரம் நடக்கிறது; வேறு ஓர் இடத்தில் அபேட்சகரின் சின்னம் சிங்கம் ஆதலால், சிங்கத்தையே வரவழைத்துப் பிரசாரம் நடைபெறுகிறதாம். ஆளும் கட்சியினர் 'நம் கடமை' என்ற தலைப்பிட்ட திரைப்படம் ஒன்றையும் காட்டி வருகின்றனர். பின்னர், வேறு யாருக்கு இத்தகைய வசதிகள் இருக்கின்றன? அப்படியிருந்தாலும், இம்மாதிரிப் பிரசாரங்களைத் தனி மனிதர்கள் தயாரித்து வெளியிடத்தான் அரசினர் அனுமதிப்பார்களா? அல்லது தியேட்டர் உரிமையாளர்கள் படங்களைக் காண்பிக்கத்தான் முற்படுவார்களா?

காந்தி மகாத்மா அன்று கண்ட காங்கிரஸ் ஸ்தாபனம் இன்று பல்வேறு வழிகளிலும் மாசடைந்து வருகிறது என்பதைப் பொது மக்கள் உணரத் தலைப்பட்டு விட்டார்கள். ஆகவே, தன்னுடைய சுய நிர்ணய உரிமையைப் பாதுகாப்பதில் ஒவ்வொரு தனி மனிதனும் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டியது அவசியமேயல்லவா?

'காங்கிரஸ் ஸ்தாபனம்தான் காரியம் சாதிப்பது; தனி நபர்களல்ல. ஆகவே காங்கிரசுக்கு வோட்டு போடுங்கள்!' என்று நேருஜி அறிவுறுத்தி வருகின்றார். ஆனால், பொது மக்கள் விழிப்படைந்து விட்டார்களென்பதை நம் பாரதத்தின் தலைமை அமைச்சர் அறியார் போலும்!

எனவே, நல்லதொரு சந்தர்ப்பத்தில்தான் ஜெயப்பிரகாஷ் அவர்கள் அறிக்கை விடுத்திருக்கின்றார்.

இதே கருத்தைத்தான் நம் தலைவர் ம. பொ. சி அவர்கள் வெகு நாட்களுக்கு முன்னிருந்தே தமிழகத்திற்குத் தெரிவித்து வருகிறார். இன்றைய காங்கிரஸ் ஸ்தாபனம் வெறும் பழக்கூடு என்றும், தேசிய சக்திதான் பழச்சுளை என்றும், ஆகவே பழச்சுளையான தேசிய சக்தி படைத்த காங்கிரஸின் எதிர்ப்பாளர்களுக்குத்தான் வோட்டு போட வேண்டுமென்றும் கூறி வருகின்றார்.

தமிழ்நாடு காங்கிரஸ் தலைமைக்கு ஆட்சேபம் தெரிவிப்பதற்கு அதை எதிர்த்து ஓட்டளிப்பதே வழி என்றும், அப்போதுதான் தென்னாட்டில் காங்கிரஸில் ஏற்பட்டுள்ள சீர்கேட்டையும், திராவிட கழகத்துடன் கூடா நட்பு கொண்டுள்ளதன் காரணமாக மக்களின் நம்பிக்கையை இழந்துவிட்டதென்பதையும் நேருஜி தெரிந்து கொள்ள முடியும் என்றும் திரு ம. பொ. சி. குறிப்பிட்டார்.

ஆதலால், இந்த இரு பெருந்தலைவர்களின் ஒன்றுபட்ட அபிப்பிராயங்களை ஆராய்ந்து, நாட்டின் தலையெழுத்தை நிர்ணயிப்பதில் பொதுமக்கள் தங்கள் பணியை உரிய முறையிலே செய்து முடிப்பார்களென்று நம்புகிறோம்.

இலங்கைத் தமிழர் பிரச்சினை

இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைகளில் ஒன்றைக்கூடத் தீர்த்து வைத்து, சுமுகமான சூழ்நிலையை உண்டாக்கவில்லை இலங்கை ஆட்சியாளர்கள் யென்பதை நினைக்கும் பொழுது, யாரும் ஆத்திரப் படாமல் இருக்கவே முடியாது.

இலங்கையின் சுதந்திர தினம் கொண்டாடப்பட்ட போது, தமிழ் மக்கள் தங்கள் ஆத்திரத்தையும் மனக் கொதிப்பையும் வெளிப் படையாகக் காட்டிச் செயற்பட்டார்கள். இதன் விளைவாக, திருகோண மலையில் நடந்த துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒரு தமிழன்பர் உயிரைத் தியாகம் செய்தார். பின், வேறு யார் உயிர் துறப்பார்கள்? பலர் காயமடைந்தனர்.

மோட்டார் வண்டிகளிலே சிங்கள எண் பதித்த தகடுகள் தொங்க விடப்பட வேண்டுமென்று சட்டம் பிறப்பிக்கப் பட்டுள்ளதல்லவா? இதை எதிர்த்துப் போராடி வரும் தமிழர்களின் இயக்கத்திற்கு மறுப்பாக சிங்கள ஜாதிகா – பெரமுன ஸ்தாபனம் ஓர் எதிர்ப்பு அணியை நடத்த யிருப்பதாகவும் செய்திகள் கூறுகின்றன.

இலங்கை இந்தியர் பிரஜா உரிமைப் பிரச்சினைக்குத் தீர்வு காண நேருஜியுடன் தற்சமயம் பேச்சு நடத்தப் போவதில்லை யென்று அண்மையில் திரு பண்டார நாயகா கூறியிருக்கின்றார்.

இனியும், காலத்தைத் தள்ளிப் போட்டுக் கொண்டே போகாமல், உடனடியாக இப்பிரச்சினையைத் தீர்த்துவிட வேண்டுவது நேருஜியின் தலையாய கடமையாகும் என்பதையும் நினைவு படுத்த விரும்புகின்றோம்.

கடைசி நிமிஷக் கோரிக்கை!

என். ஜி. ஓ. தூது கோஷ்டி முன்னர் புதுடெல்லிக்குச் சென்ற போது, அவர்களுக்கு பேட்டியளிக்க பாரதப் பிரதமர் மறுத்தார். இப்போது நேருஜி சென்னைக்கு வருகை தந்திருக்கையில், கௌரவப் பதிவில்லாதவர் தூது குழுவினருக்குப் பேட்டி தந்து, ஆறுதல் மொழிகள் கூறினார். நம் தமிழ் நாடு இந்த ஒரு நல்ல மாற்றத்தையாவது நேருஜியின் மனத்திலே உண்டாக்கியதே என்று நாம் பெருமைப்படத்தான் வேண்டும்.

ஆனால், தங்களின் சம்பள உயர்வுப் பிரச்சினை இன்னமும் ஒரு விடிவு பெறாமல் இருக்கிறதென வேதனைப்பட்ட என். ஜி. ஓ. கள் ஒன்றுகூடி ஒரு முடிவுக்கு வந்திருக்கிறார்கள். இது சம்பந்தமாக, சென்னை செக்ரடேரியட் ஊழியர்கள் சங்கம் ஓர் அறிக்கையை வெளியிட்டிருக்கின்றது. தேர்தல் காலத்தின் எல்லை தாண்டி விட்டால் தங்கள் தொல்லைகள் கவனிக்கப்பட மாட்டாதென்பதை உணர்ந்ததன் விளைவே இச்செயலாகும். பிப்ரவரி 25-ம் தேதிக்குள் மத்திய அரசாங்க அமைப்பின் விகித அளவில் சம்பளம், பஞ்சப்படி முதலியனவற்றை அளிப்பதாக சென்னை ஆட்சிபீடம் வாக்குறுதி தந்து, இடைக்கால நிவாரணமும் செய்ய வேண்டுமென்று அறிக்கை குறிப்பிடுகிறது. தங்கள் வேண்டுகோள் கவனிக்கப் படாவிடில், துக்கச் சின்னங்கள் அணிவதுடன் மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சுட்டிக் காட்டப்பட்டது.

ஆதலால், திரு ஜகஜீவன்ராம் அவர்களைப் பின்பற்றியாவது இவர்கள் விஷயத்தில் நல்ல செயலைச் செய்யவேண்டியது நம் நிதி மந்திரியின் முக்கியமான அலுவலாகும் என்பதைக் குறிப்பிட்டுக் காட்டுகின்றோம்.

உங்களுடன் ஒரு கணம்...

ஓவியர் திரு ரெஸாக் அறிமுகப்படுத்தியிருக்கின்ற கிராமியக் காதலர்கள் உதிர்க்கும் கள்ளமிலாப் புன்னகையுடன் ஆரம்பமாகும் இவ்விதழ் 'உமா' வழக்கம் போலவே உங்கட்கெல்லாம் தமிழ் விருந்தளிக்கிறது. இந்தத் தமிழ் விருந்தில் இலக்கியமும் இருக்கிறது; கதைப் பகுதியும் நிரம்பியுள்ளது. எங்கள் கருத்தை நீங்கள் உணருவீர்கள்.

அட்டைப்படக் காதல் ஜோடியைப் பற்றி இப்போது உங்களுக்குச் சொல்ல வேண்டும்.

அவன் தனிக் காட்டு ராஜா; அவளோ தனிக் காட்டு ராணி. காட்டு ரோஜாவுக்குக் கட்டழகன் கிடைத்தான்; அவள் அவனுக்குக் கட்டாணி முத்து. இந்த மாமன் மகனும் அத்தை மகளும் அயராத உழைப்பில் நம்பிக்கை கொண்டவர்கள். மண், பொன்னைப் பரிசாகக் கொடுத்தது. தம்பதியின் மகிழ்ச்சிக்குக் கேட்கவே வேண்டாம். உடனே ஆணழகன் பாடுகிறான்:

'நாத்துப் பிடுங்கியே
நட்ட கைக்கு
நல்லவளை வாங்கிப்
போடப் போறேன்;
கூத்துக்கும் கூடவே
கூட்டிப் போறேன்—குட்டி
கொண்டைக்குப் பூவும்
சொருகப் போறேன்!'

கிராமியப் பாடல்களென்றால், கொத்தமங்கலம் திரு சுப்பு அவர்களுக்கு ஓர் ஈடுபாடு; அதுவே அவரது தனித் திறமை. இம்முறை அன்னாரைப் பேட்டி கண்டு, கட்டுரை தயாரித்து வெளியிட்டிருக்கின்றோம்.

தமிழ்ப் பேராசிரியர் திரு ம. ரா. போ. குருசாமி அவர்கள் தொடங்கியிருக்கும் இலக்கியப் பட்டி மண்டபக் கட்டுரையில் சிந்தனை நயமும் கருத்தாழமும் விரவிக் கிடக்கின்றன. 'பண்பாடு' என்ற மகுடமிட்ட இக்கட்டுரை அடுத்த இதழ்வரை வளர்கிறது.

சிறுகதை விருந்தில் இடம் பெறும் பெயர்கள்: அ. வேதாசலம், வேணி, எம். கே. சீனிவாசன், க. இராமமூர்த்தி — ஒவ்வொன்றும் தனிச்சுவை தரவல்லது. 'நான் விரும்பும் எழுத்தாளர்' பகுதி பலருக்குப் பிடித்தமான தொடர்.

'வாடா விளக்கு' புயலா, தென்றலா என்ற கேள்விப் புதிருடன் சுவையாகச் செல்லுகிறது.

'ஜாதி ரோஜா'வில் பயங்கரமான கட்டம் இது. கதை நாயகி அழகி சொல்லயிருக்கும் முடிவுதான் கதைக்கு 'சுபம்' போட வேண்டும்.

பிப்ரவரி இதழ் அட்டைப்படப் போட்டிக்குக் கதைகள் வந்து கொண்டிருக்கின்றன. முடிவு பற்றிய விவரங்களை அடுத்த இதழில்தான் தெரிவிக்க இயலும்.

மே இதழ் புதுமைகள் பலவற்றை ஏந்தித் திகழும் என்பதை மறுபடியும் நினைவு படுத்த ஆசைப்படுகின்றோம். வணக்கம்.

— ஆசிரியர்.

'பூவை'யின் **வசந்த பைரவி** விலை எட்டு அணா

விவரங்களுக்கு: 'உமா' — சென்னை-1

தம்பிக்கு

'பதி'

உறுதி கொள்வோமாக!

அன்புள்ள தம்பி!

எல்லாக் கழகத்திலும் கட்சியிலும் உள்ளவர்களைவிட, நாம்தான் எதிர்காலத்தில் நிறைய ஆக்க வேலைகள் செய்யவேண்டிய நிலையில் இருக்கிறோம். ஆதலால், இந்தத் தேர்தல் நமக்கு ஒரு முக்கியப் பிரச்னை அல்ல. அதை மனத்தில் வைத்துக் கொண்டு எல்லா நண்பர்களிடத்திலும் இப்போது நடந்து கொள்வது போலவே கட்சி பாகுபாடோ, மதப் பிரிவோ இல்லாத மனப்பான்மையிலேயே மேலும் நமது இன உணர்வை நெறியோடும் நேர்மையோடும் வளர்க்கும் வகையில் நடந்து வரத் தவறிவிடாதே. அதுதான் நம் கழகத்தின் கவசம்.

இந்தத் தேர்தலில் தகுதியும், திறமையும் மக்களிடத்தே செல்வாக்கும் பெற்ற நாம் நிற்காமல், செல்வாக்கோ தகுதியோ திறமையோ இல்லாதவர்களெல்லாம் இன்று தேர்தலில் நிற்பதைக் கண்டு, உன் மனம் வேதனை அடையத்தான் செய்கிறது. இதை உன் விவரமான கடிதம் மூலமாக நான் நன்றாகப் புரிந்து கொண்டேன். அதற்குத்தான் தம்பி, நமது அன்புத் தலைவர் ம. பொ. சி. அடிக்கடி நம்மை மக்களே அழைக்கும் நாள் வெகு தூரத்தில் இல்லை; அதற்கு இன்னும் நாம் நமது சேவைகளை எங்கெந்தத் துறையிலே செலுத்த வேண்டுமோ அதிலெல்லாம் இறங்கி இன்னும் அதிகமாக உழைக்க நம்மை ஆளாக்கிக் கொள்ள வேண்டும் என்று அடிக்கடி ஞாபகப்படுத்தி வருகிறார்.

இந்நாட்டிலே பிறந்து இந்நாட்டிலேயே வளர்ந்து புதுமைப் பூங்காவாக மாற்றியமைத்த புத்துலகச் சிற்பிகளெல்லாம் புழுதியிலே புரளுகிறார்கள். கல்வித் துறையிலே கடந்த காலத்திலேயே காவியங்களைப் படைத்துத் தந்த இந்நாட்டிலே எழுத்தறிவு பெற முடியாமல் நமது தமிழ்ச் செல்வங்கள் அல்லல் படுகின்றன.

இதைவிடக் கொடுமை, பெற்ற செல்வங்களைப் பேணி வளர்க்க முடியாமல், பிள்ளையோ பிள்ளை யென்று விற்கிறாள். பசிதாள முடியாது மயக்க முற்று விழும் போது, நம்மோடு அந்தச் சிசுவும் மடிந்து போகக் கூடாதே என்று தான் மற்றவர்களிடத்திலே விற்கிறார்கள். இலவசமாகக் கொடுத்தால், அந்த மாணிக்கத்தை வாங்கி வளர்க்க யாரும் முன்வர மாட்டார்கள். பத்துமாதம் சுமந்து பெற்று, பிறக்கப் போகும் குழந்தைக்கு எந்தவித நோய்களும் வரக் கூடாது என்று பத்திய விரதம் இருந்து, பிறந்த பிறகு அந்தப் பேசும் செல்வத்திடத்தில் எப்படி யெல்லாம் கொஞ்சிக் குலவி மகிழப் போகிறோம் என்று மனக் கோட்டைகள் கட்டி மகிழ்ந்திருந்த அந்தத் தாயின் சேய்க்கு ஐந்தோ பத்தோ விலை கொடுத்து விட்டால் அது நமக்குச் சொந்தமாகிவிடும் என்ற நிம்மதியோடு வாங்கத் துணிவார்கள். இந்த வறுமைக்குக் காரணம், தன் கணவன ஏதோ ஒரு தொழிற்சாலையிலே நாணயமாகத் தொழில் செய்து வறுமையைக் காட்டிக்கொள்ளாமல் ஒருவேளை உண்டோ உண்ணமலோ, மானத்தோடு வாழ்ந்து வந்திருப்பான். அந்தத் தொழிற்சாலையிலே சிலர் ஒன்றுகூடி 'நாமெல்லாம் இன்ப புரிக்குச் செல்ல வேண்டுமானல், வேலை நிறுத்தம் செய்யவேண்டும்' என்று தூண்டி, பின்னே அந்தத் தொழிற்சாலை மூடப்பட்டு விடுகிறது. இப்படித் தூண்டித் தூண்டி இதையே தொழிலாக மேற்கொண்டவர்களுக்குப் பல தொழிற்சாலைகள் உண்டு. ஆனல் ஒரு குறிப்பிட்ட தொழிலிலேயே பழகிப் பண்பட்டிருந்த அந்தத் தொழிலாளிக்கு வேறு எங்கும் வேலை கிடைக்காமல் போய்விடுகிறது. பின்னே, அமைதியாக வாழ்ந்திருந்த அந்தக் குடும்பத்திற்கு இந்த அவல நிலை.

கிராமச் சுற்றுப்புறங்களிலே விவசாயிகளின் வாழ்க்கைத் தரம் இன்னும் அப்படியேதான் இருக்கிறது. அவர்கள் குழந்தைகளுக்குப் படிக்க வசதியோ, அப்படிப் படிக்க வசதியிருந்தால் பாதை வசதியோ கிடையாது.

இன்றையப் பதவியாளர்கள் பட்டணங்களிலேதான் பளபளக்கும் வீதிகளும் கண் கூசும் மெர்குரி–மின்சார விளக்குகளும் வாகன வசதிகளும் ஓரளவு செய்து தருகிறார்கள். காரணம், இங்கே தட்டிக் கேட்க படித்தவர்களும் பகுத்தறிவாளர்களும் இருக்கிறார்கள். கிராமத்திலோ, பாவம், நமக்கு உண்ண உணவு அளிக்கும் அந்த வாயில்லாப் பாமரர்கள் பதட்டமாகக் கேட்கவும் மாட்டார்கள். அவர்கள் தேவையெல்லாம் குடிக்கக் கூழும் கட்டக் கந்தையும் உறங்கக் கூரையும் இருந்தால் போதும் என்ற பொன் செய்யும் மனம்படைத்தவர்கள். அந்த மகத்தான தியாகிகளுக்குதான் காலமெல்லாம் ஆயுடகால தண்டனையைப் போல சிறை என்ற பெயர் இல்லாமல் அல்லல் படுகிறார்கள். அவர்கள் குறை தீர்க்க முற்படவேண்டும்.

நமது தமிழ் மண்ணிலே கிடைக்காத மூலப் பொருள்கள் கிடையாது. அப்படிக் கிடைக்கவில்லையென்று யாராவது சொன்னால், புதுமையோடு ஏற்பட்டிருக்கும் பூகற்ப ஆராய்ச்சியைப் புரிந்து கொள்ளாதவர்கள். அக்கறை இல்லாமலேயே ஆராய்ச்சி செய்து நவலோகம் கிடைக்கிறது இங்கே, நவரத்தினம் கிடைக்கிறது இங்கே, நவமணிகள் விளைகிறது இங்கே. நெய்வேலியிலே இங்கே கருப்புத் தங்கம் கிடைக்கிறது! அந்த நிலக்கரியை வெட்டி எடுக்க இன்னும் ஐந்தாண்டுகளுக்கு முன்னமயே ஆரம்பித்திருந்தால் இந்நேரம் முடிந்திருக்கும்–மூடிவைத்தார்கள். இன்று நமது எச்சரிக்கையின் குரலோசைக்குப் பிறகு முற்பட்டு முனைந்தார்கள். எதிர்பார்த்ததைவிட ஏராளமாகக் கிடைக்க ஆரம்பித்திருக்கிறது. இப்படி நம் நாட்டிலே எங்கெங்கு என்னென்ன கிடைக்கிறது, அங்கே எத்தகைய தொழிற் சாலைகள் நிறுவ வேண்டும் என்பதை எல்லாம் எடுத்துக் காட்ட முனைய வேண்டும். அப்போதுதான் இந் நாட்டிலே வேலையில்லாக் கொடுமை நீங்கி, உண்மையான வாழ்வு வாழ முடியும்.

ஆட்சிமொழி தமிழாக்கப்பட்டும் இன்னும் அது பரிபூரணத்துவம் அடையாமல், தேர்தல் கோஷத்துக்குப் பயன்பட செய்துகொண்டதை மாற்றி, உண்மையாகச் செயல்பட முனையவேண்டும். வீதி வீதியாக, பேட்டை பேட்டையாக, கிராமம் கிராமமாக நமது கழகங்கள் தோன்ற வேண்டும். தோன்றிய பிறகு, பொறாமையோ பூசலோ நமக்குள்ளே உருவாகாமல், அதைப்பாதுகாத்து வளர்க்க வேண்டும். நாட்டின் நலனுக்கும் நமது முன்னேற்றத்துக்கும் வழிகோல முனைய வேண்டும். அப்படித் தோன்றிய கழகங்களிலே நம்மைப் போன்றவர்கள் பங்கெடுத்துக் கொள்ள வேண்டும். பேசும் திறமை வளர, அந்தப் பேச்சிலே பொருள் பொதிந்திருக்கப் போதனை செய்ய வேண்டும். அப்போதுதான் நமது கழகத்தின் சேவையையும் அதன் லட்சியங்களையும் நாடு பூராவும் பரப்ப முடியும். இப்படி நல்ல ஒரு அமைப்பு கொண்ட கழக வீரர்கள் வந்து நமக்கெல்லாம் உற்சாகம் தரவில்லையே என்று எத்தனையோ ஊர்களிலே இளைஞர்கள் எதிர் பார்த்து ஏங்கி நிற்கிறார்கள். அவர்களை யெல்லாம் ஊக்குவிக்க நாமே அங்கு சென்று வழிகாட்டிகளாக நிற்கவேண்டும். இல்லாவிடில், வந்தவர்களுக்கெல்லாம் வாரி இறைத்த இந்த நாடு இன்னும் வறுமை சூழ ஏதுவாகிவிடும். எச்சரிக்கையோடு நாம் இருந்தால்தான், எதிர்காலத்தில் தமிழகம் ஓங்கி உன்னத நிலை அடைய முடியும் என்று உறுதி கொள்வோமாக.

உன் அன்புள்ள தமையன்.

எங்கள் இதயங்கள் பேசுகின்றன

'உமா' மாசி இதழைப் புரட்டினேன். ஆசிரியர் ஜி. உமாபதி அவர்கள் அன்புத் தம்பிக்கு வரையும் மடலில் மகாநாட்டை அழகுற வடித்துள்ளார். இம்மடல் மூலம் எம்மவர்களை சேலத்தில் நடந்த மாநில மகாநாட்டிற்கே அழைத்துச் சென்று விடுகிறார். நன்றி.

மு. பாரூக், கண்டி, சிலோன்.

....தேர்தல் காலத்திலே மட்டுமல்ல; எக்காலத்திலுமே தமிழ் இனத்தைப் பொறுத்த மட்டில் நன்கு ஆராய்ந்து அன்றாட நிலையையும், அதற்கேற்ப தமிழினம் எங்ஙனம் நடக்கவேண்டும் என்பது பற்றியும் தமிழினத்திற்கு யோசனைகள் சொல்லத் தகுதி படைத்தது தமிழரசுக் கழகம் ஒன்றுதான் என்று ஆணித்தரமாகக் கூறும் தலையங்கம் மிக அருமை.

சேலத்தில் நடந்த மாநாட்டிற்கு நான் வர இயலாவிடினும், தங்கள் 'உமா'வின் மூலம் மாநாட்டு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டேன். அரு. ராமநாதன் பேட்டிக் கட்டுரை படிக்கப் படிக்கத் தெவிட்டாமல் இருந்தது. வழக்கம்போல 'வாடாவிளக்கு' 'ஜாதிரோஜா' இரண்டும் நன்றாக இருக்கின்றன.

உமாவின் நான்காண்டுப் பூர்த்திக்கும் ஐந்தாம் ஆண்டு ஆரம்பத்திற்கும் என் வாழ்த்துக்கள்.

ந. சீனிவாசன், திருச்சி-6.

'சேலத்தில் தமிழ் வீரர்கள்' என்ற ஆசிரியரின் கட்டுரை அவண் நிகழ்ந்தனவற்றைப் படம் பிடித்துகாட்டுவதாக அமைந்திருக்கிறது. 'கலைக் கண்கள்' என்ற கதையை உள்ளமுருக்கும் வகையில் படைத்த அதன் ஆசிரியைக்கு என் உளமார்ந்த வாழ்த்து.

மா. நாச்சிமுத்து, ஈரோடு.

....சேலத்தில் நடந்த தமிழரசுக் கழக மூன்றாவது மாநில மாநாட்டின் செய்திகளும், விசேஷப் படங்களும் ரொம்பவும் அருமையாக இருக்கின்றன.

ரா. சிவஞானதாசன், வேலூர்.

....'நாணயத்தின் விலை' கருத்தோவியமாக – உள்ளத்திலே ஊடுருவிப்பாயும் உணர்ச்சிச் சித்திரமாக அமைந்துள்ளது.

சக்கரதாரி, மதுரை.

....காகித விலை உயர்வைக் கருதாமல் மாநாட்டு நிகழ்ச்சிகளை அருமையாக அச்சிட்டு எம் முன்னே அதை நிறுத்தினீர்; பெருமையுற்றோம். அரு. ராமநாதனின் பேட்டி உமாவிற்கே உரித்தான ஒளி வீசும் அணிகலன். 'சக்கரவர்த்தித் திருமகளி'ல் உபாயங்களை விவரித்திருப்பது நடுநிலைமை, நியாயம். 'ஜாதிரோஜா'வில் நிலாவிற்கு உவமேயம் பெண் என்று இல்லாமல், பெண்ணின் முகத்திற்கு நிலா உவமானம் என்று எழுதியது புதுமையிலும் புதுமை. 'உமா'வின் தலையங்கம் தமிழர்களைத் தட்டி எழுப்புகிறது; உண்மை உணர்த்துகிறது; நாம் உய்ய வழி காட்டுகிறது; ஒட்டுக்கு மதிப்பு கூறுகின்றது. நன்றி.

வனஜா கிருஷ்ணய்யன், தஞ்சை.

உங்களுக்கு எங்கள் நன்றி!

பண்பாடு

ம. ரா. போ. குருசாமி

மனித வாழ்க்கையை மதிப்பிடும் பெரியோர் மூன்று நிலைப்பட அதனை எடுத்தோதுவர். உலகியல் என்பது முதல் நிலை; உள்ளத்தின் இயல் இரண்டாம் நிலை; உயிரோடு சார்ந்த பண்பினைச் சுட்டும் இயல் மூன்றாவதாகிய முடிநிலை. உலகியல் என்னும் லௌகிகம் உணவு, உடை, உறையுள் என்ற மேற்போக்கான தேவைகளோடு அமைவது. உணவு, உடை, உறையுள் ஆகியவை இல்லாமல் மனிதன் வாழ்தல் இயலாது; இவை அடிப்படைத் தேவைகள். உணவு இவற்றுள் மிக மிக இன்றியமையாததாகும். உணவாகிய அடிப்படைத் தேவை நிறைவுறாவிடின் எத்துணை அவலங்கள் விளையும் என்பதை விளக்க 'மணிமேகலை'க் காப்பியம் ஒன்றே போதுமானது. உலகியல் நிறைவு பெறாத வாழ்க்கை அவலத்தின் விளைநிலம்.

இத்துணை இன்றியமையாச் சிறப்பினதாகிய உலகியல்—ஊண், உடை, எச்சம் முதலாயவற்றால் அமையும் உலகியல்—தன்னளவில் சிறப்புடையதாயினும், உலகியல் நிறைவு மட்டுமே வாழ்வின் முற்ற முடிந்த நிலையைக் காட்டுவது ஆகாது; ஆக முடியாது. உணவாலும் உடையாலும் இன்னோரன்ன பிறவற்றாலும் பெறும் வசதிக்கும் அப்பால்தான் மானிட வாழ்வு மாண்புறுகின்றது.

ஊண்உடை எச்சம்
உயிர்க்கெல்லாம் வேறுஅல்ல
நாண்உடைமை மாந்தர்
சிறப்பு

என்பது வள்ளுவர் வாய்மொழி. உலகியல் தேவைகள்—அதாவது உடலொடு பொருந்தி மண்ணிலே வாழும் உலகியல் வாழ்க்கைக்கு வேண்டியவை எல்லா உயிர்களுக்கும் ஒரு நிலையினவே. ஆனால், மானிட வாழ்வுக்கு என்று அமையக் கூடிய தனிச் சிறப்பு ஏதேனும் உண்டோ? ஆம், பிற உயிர்களைப் போலவே 'பசி தீர உண்பதும் உறங்குவதுமாக' முடிந்துவிட்டால், மாண்புறு மானிடனின் வாழ்வுக்கும் மாக்களின் வாழ்வுக்கும் வேறுபாடு இல்லையே! மாக்களையும் மக்களையும் பிரித்துணர வைப்பவை, மனத்தகத்தே தோன்றி மாண்பினை அருளும் சில பண்புகளே யாகும். அத்தகைய பண்புகளிலே ஒன்றைத்

தான் 'நாண்' என்று வள்ளுவர் குறித்தார். தகாதன செய்வதில் தயங்கிக் கூசுவதும், கூச்சத்தின் விளைவாகத் தகாதது செய்யாமல் தவிர்வதும் மனிதனுக்கு மாண்பு தருவனவாகும்.

வாழ்க்கையிலே ஒவெனப் பிறர் வியக்குமாறு செல்வமும் செல்வாக்கும் பெற்றுச் சிலர் வாழ்வார்கள்; பலரை ஏவல் கொள்ளும் பெருநிலை இருக்கும்; விரைந்து செல்லும் ஊர்திகள் பல பெற்றிருப்பர். இவை உலகியற் செல்வங்களாகும். ஆனல், வாழ்வின் தத்துவம் உணர்ந்த பெரியோர் இவற்றை உண்மைச் செல்வங்கள் எனக் கொள்ளமாட்டார்கள். பின்னே, உண்மைச் செல்வம் என்பதுதான் எது ?

நெடிய மொழிதலும்
கடிய ஊர்தலும்
செல்வம் அன்று தம்
செய்வினைப் பயனே

ஆம். இப்பாடல் பாடிய சான்ருேர் உலகியல் வளத்துக்குக் காரணம் கூறுகின்ருர். அவரவர் வினைத் திட்பத்திற்கு ஏற்ப நெடுமொழி ஆணை பிறப்பித்தலும் விரைந்து செல்லும் வாகனங்களை ஏறிச் செலுத்துதலும் வாய்க்கும்; வினைத் திட்பத்தின் விளைவாகிய இவற்றையே செல்வம் என எண்ணி மருள்வது சாதாரண மக்களின் செயல். சான்ருேர்கள் எதனை உண்மைச் செல்வம் எனக் கொள்ளுவார்கள் என்பதையும் இப்பாடல் அருளிச் செய்கின்றது.

சான்ருேர் செல்வம்
என்பது சேர்ந்தோர்
புன்கண் அஞ்சும்
பண்பின்
மென்கட் செல்வம்
செல்வர்என்பதுவே.

தம்மை வந்தடைந்தோரின் துன்பங் கண்டு, 'இவ்வளவு துயர் நிறைந்ததோ வாழ்க்கை' என்று அஞ்சி, அவர்களிடத்து மென்மையான கண்ணேட்டம் (தாட்சணியம்) செலுத்துதல் வேண்டும். அத்தகைய அருளினையே உண்மையான செல்வம் என்பர் சான்ருேர்.

ஆகவே நாணயம், அருள் போன்ற நெஞ்சத்துப் பண்புகளே உண்மையான சிறப்புத் தரக்கூடியவை என்பதை உணரலாம்.

கேடில் விழுச்செல்வம்
கல்வி ஒருவற்கு
மாடுஅல்ல மற்றை
யவை

எனவும்,

செல்வத்துட் செல்வம்
செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்து ளெல்லாம்
தலை

எனவும்,

பொருளற்ருர் பூப்பர்
ஒருகால் அருளற்ருர்
அற்ருர் மற்றுஆதல்
அரிது

எனவும், பிறவாறும் உள்ளத்து மாண்புகளையே பெரியனவாகத் திருக்குறள் சுட்டிச் செல்வதையும் நினைவிலே கொள்ளுதல்வேண்டும். 'பொருட் செல்வம் பூரியார் கண்ணும் உள' என்னும்போது உலகியற் செல்வத்தை அற்பர்களிடமும் காணலாகும் என அதனைப் புறக்கணித்து ஒதுக்குவதே சான்ருண்மை காட்டும் நெறி.

இதுவரை கூறிய சில கருத்துக்களிலிருந்து, வெறும் உணவாலோ உடையாலோ பிறபிற உலகியல் செழிப்பாலோ ஒருவனை உயர்ந்தவன் என்று கொள்ள முடியாது யென்று அறிந்தோம். மேலும், உள்ளத்துப் பண்பிலே சிறந்தோங்கிப் பொலிபவனே மாண்பு பெற்றவன் எனவும் அறிந்தோம்.

இந்த இடத்தில் இரண்டு சொற்களைப் பற்றி ஓரளவு அறிந்து கொள்ளுதல் நலம். நாகரிகம், நாகரிகம் என்று நாம் அடிக்கடி கூறுகின்ருேம். 'பழங்கால மனிதன் நாகரிகம் அற்றவன்; நாமே நாகரிகம் பெற்றவர்' என்று கூறி, நாம் அடைந்துள்ள முன்னேற்றங்களைப் பற்றி அடிக்கடி பெருமை படப் பேசிக் கொள்கின்ருேம். 'நாகரிகம்' என்னும் சொல் எத

னக் குறிக்கின்றது என்பதைப் பற்றி நமக்குத் தெளிவு இல்லை என்றே சொல்ல வேண்டும்.

பெயக்கண்டும் நஞ்சுண்டு
அமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு
பவர்.

என்ற குறளிலே 'நாகரிகம்' என்ற சொல் இடம் பெற்றுள்ளது.

முந்தை இருந்து
நட்டோர் கொடுப்பின்
நஞ்சும் உண்பர்
நனிநா கரிகர்.

என்று அதே காட்சியைத் திட்டிக் காட்டுகின்றது நற்றிணைச் சொற்கோவை. இவ்விரண்டு இடங்களிலும் 'நாகரிகம்' என்ன பொருளில் வந்துள்ளது எனக்கருதுதல்வேண்டும். 'வெள்ளைக்காரன் நாகரிகம்', 'இந்தியர் நாகரிகம்' என்று நாம் வழங்கும் பொருளிலே திருக்குறளும் நற்றிணையும் அந்தச்சொல்லை வழங்கவில்லை. நாகரிகம் என்ற சொல் தமிழ்ச் சொல்லா, வட சொல்லா என்ற ஆராய்ச்சியிலே நான் இப்போது ஈடுபட விரும்பவில்லை. ஆனால், ஒன்று மட்டும் உறுதியாக உணர்த்த விரும்புகின்றேன். நாம் 'நாகரிகம்' என்று சொல்வதெல்லாம் உணவுப்பழக்க வழக்கங்களையும் நடையுடை பாவனைகளையும்தான். வேறு வகையிலே சொன்னல், வாழ்க்கையின் புறக் கோலங்களையும் புறக் கூறுகளையுமே நாகரிகம் எனக் குறிக்கின்ருேம். திருக்குறள், நாகரிகத்தை வெறும் புறக் கூருகச் சுட்டவில்லை. மற்றவரின் இதயம் புண்படுதல் கூடாதே என்னும் உணர்ச்சியால், தம் கண்ணெதிரே நஞ்சினைப் பெய்து கொடுத்தாலும் அதனை உண்டு விடுவர்; அதோடு நில்லாமல், எதுவுமே நடவாதது போலவும் இருப்பர்–யார்?–விரும்பத்தக்க நாகரிகத்தை விரும்புகின்றவர்கள். இந்த நாகரிகத்தை நாம் இழந்து விட்டோம்–அதாவது நாகரிகம் என்னும் சொல்லுக்கு வள்ளுவர் வழிப்பட்ட இந்தப் பொருளை இழந்து விட்டோம். உள்ளத்து நாகரிகத்தை, அகத்தின் அழகை அவர் சுட்டினர்; நாம் உலகியலின் நடையுடையை, உணவின் செழிப்பை, புறக்கோலத்தை நாகரிகம் என்று ஆக்கி விட்டோம். வள்ளுவர் வழியில் இனிமேலாயினும் நாகரிகம் என்ற சொல்லை நாம் கையாள வேண்டும் என்று நான் கருதவில்லை. ஒரு மொழியில் தோன்றும் சொற்கள் கால அடைவிலே சார்வினுக் கெல்லாம் தகத் தக மாறி வேறு வேறு விளக்கங்களைத் தருவது இயல்பே. வள்ளுவர் சொன்ன நாகரிகம் வேறு; நாம் கொள்ளும் நாகரிகம் வேறு.

வள்ளுவர் நாகரிகம் என்று சொன்னபோது, என்ன கருத்தினைக் கொண்டாரோ, அதே கருத்தினைச் சுட்டுவதற்கு நாம் இப்போது வேறு ஒரு சொல்லினை வழங்கி வருகின்ருேம். அதுவே பண்பாடு என்பது. பண்பாடு என்ற இந்தச் சொல் எப்போது பிறந்தது, எந்த நூலிலே முதன் முதலில் வருகின்றது என்ற ஆராய்ச்சிகள் வேண்டுவனவே; ஆனல், இப்போதைக்கு இங்கே அவை தேவை இல்லை. சங்க நூல்களில் இச்சொல் இருப்பதாக நினைவில் இல்லை. 'சிந்தாமணி'யில் பண்பாடு என்ற சொல்லின் எதிர் மறைச் சொல் என்று குறிக்கத் தக்க ஒன்று உள்ளது. நிலை குலைந்தது என்னும் பொருளில், 'பண் விட்டது' (சிந். 676) என்று ஒரு தொடர் வருகின்றது. நிலை குலைதலுக்கு நேர் மாருக, நெஞ்சிலே நல்ல நினைவும் நிலையும் உலைவுரு வகையில் ஊன்றுவதே பண்பாடு ஆகும்.

பண்பட்ட உள்ளம் பண்பட்ட வயல் போன்றது. 'காடு கெடுத்து நாடாக்கி, குளந்தொட்டு வயல் பெருக்கினன்' என்று கழனி பெருக்கிய சோழனைப் பற்றிக் காவியங்களிலே காணுகின்ருேம். நிலத்தைப் பண்படுத்தினல்தான் பயிர்த் தொழில் பயனுற நடைபெற முடியும். கழனி திருத்துதலையே பண்படுத்துதல் என்று

உழவியல் வழங்குகின்றது. காடும் மேடுமாய் காடும் முரடுமாய்க் கிடக்கின்ற நிலத்தைச் சரிசெய்து, சமன் செய்து உழுதுழுது இழு தாக்கிப் பண்படுத்துகிறான் உழவன். அவன் பண்படுத்திய பிறகே நிலத்திலே பயிர் தழைக்கிறது; பசுமை பரவுகிறது. நெஞ்சத்திலும் எத்தனையோ மேடு பள்ளங்கள் உண்டு; காடு முரடுகள் உள்ளன; வம்பும் துன்பும் செறிந்துள. இத்தகையவற்றையெல்லாம் சரி செய்து சமன் செய்து சான்றாண்மை தழைக்கச் செய்வதே 'பண்பாடு' என்பது. நாகரிகம் என்று வள்ளுவர் குறித்தது இப்பொருளில்தான்; நற்றிணையின் குறிப்பும் இதுவே.

இன்று நாகரிகம் என்பதும், பண்பாடு என்பதும் முறையே Civilization, Culture என்ற ஆங்கிலச் சொற்களுக்கு நேர்ப் பதங்களாக நிலவுகின்றன.

பண்பாடு என்றால் என்ன, அதற்கு வேண்டிய சூழ்நிலை யாது என்றெல்லாம் இலக்கணச் சூத்திரங்களாக வகுத்துச் சொல்வது சற்றே கடினமான வேலை—எனக்கு மட்டுமன்றி இதனைப் படிப்பவர்களுக்கும். எனவே, சூத்திரங்கள் வகுத்து, பண்பாட்டின் இயல்பு இது காண் என்று சொல்லப் போவதில்லை. தமிழ் இலக்கிய அரங்கிலும், வாழ்க்கை அரங்கிலும் நான் கண்ட ஓரிரு காட்சிகளை மட்டும் இங்கே வகுத்துச் சொல்ல நினைக்கின்றேன். அந்தக் காட்சிகளே பண்பாடு என்பது எதுவெனக் காட்டி விடும்.

அக்காட்சிகளை அடுத்த 'உமா'வில் காணலாம்.

(அடுத்த இதழில் நிறைவுபெறும்)

8. அழகி! இதோ, எரிமலை... புயல்... பூகம்பம்!

மனம் ஒரு நீதி மன்றம். நீதிபதி இந்த மனச்சாட்சி. இதயத்திற்குள்ளே ஓர் இதயம் உண்டு. இதற்கு மாத்திரம் நாக்குகள் இரண்டு. நீதி, அநீதிகளுக்கு வழக்காட வேண்டாமா? விந்தை மிகுந்ததுதான் இந்த நீதிமன்றம்....!

மனச் சாட்சியின் தீர்ப்புக்குக் காத்திருந்தாள் அழகி. உயிர்த் துடிப்பு நின்று விடுமோ என்று ஒரு பயம் ஏற்பட்டது. இதயம் பூராவுமே பாழ்வெளியாகி விட்டதோ என்று ஒரு சந்தேகம் எழுந்தது. இனம் பகுத்துப் பார்க்க முடியாத வேதனை அவளை ஆட்டிப் படைத்து அலைக்கழித்துக் கொண்டிருந்தது. ''மாமா........மாமா!'' என்று அலறிப் புடைத்துக் கொண்டு மாடிப் படியிலிருந்து கீழ்த் தளத்துக்கு ஓடி வந்தவள் பேய் பிடித்தவள்போல அப்படியே நின்று விட்டாள். கடைசிப் படி தாண்டினால், நடை. அவளை வரவேற்கத் தவியாய்த் தவித்துக் கொண்டிருந்தது அது. ஆனால், அவள் தவித்த தவிப்பை அது அறிய முடியாது. முடியவே முடியாது—நிச்சயமாகத்தான்!

இமைகளின் சங்கமத்தலத்தில் கண்ணீர் ஈரம் பாய்ந்திருந்தது.

தேய்ந்த லாடங்களாயின, ஒரு சில நிமிஷங்கள்.

அழகி அப்பொழுதுதான் தன் வயப்பட்டாள். கண்களை மூடி மூடித் திறந்தாள். இதயத்தின் இதயம் திறந்து திறந்து மூடிக் கொண்டது. எண்ணினாள்; எண்ணினாள். மூளை நரம்புகள் அறுந்தன. உதிரம் சொட்டியது. மனத்தில் அச்சடிக்கப்பட்ட கடுதாசி ஒன்று கிடப்பதைக் கவனித்தாள் அவள்.

தீர்ப்பு கிடைத்தது:

''அழகி, ஓடு... உன் மாமாவிடம் விஷயத்தைச் சொல்... உன் கணவனைக் காப்பாற்று... இதுவே உன்னுடைய கடமை...ஓடு, அழகி, ஓடு!....சீக்கிரம் ஓடு!''

அழகி, 'தெய்வமே...!' என்று விம்மியவாறு, கடைசிப் படியையும் கடந்து, கூடத்தை அடைந்து

நாற்காலியில் உட்கார்ந்தாள். வெங்காய வெடியை யாரோ தன் தலையில் வீசிவிட்ட மாதிரி அவள் துடி துடித்தாள். 'கணவர்....என் கணவர்!...' என்று பித்துப் பிடித்தவள் போன்று தனக்குத் தானே பிதற்றினள். 'கடமை... என் கடமை!' என்ற வார்த்தைகள் உதடுகளின் பிளவிலிருந்து நழுவி விழுந்தன. கைகளைப் பிசைந்தாள்; தலைமயிரைப் பிய்த்தாள்; பேயாகச் சிரித்தாள்!

பூதலம் சுழன்றது. அதிலே அழகி ஓர் ஆடும் பம்பரம்!

இருபது, இருபத்தைந்து நிமிஷங்களுக்கு முன்பு இருந்த அழகியை எண்ணிப் பார்த்தாள். தன் கணவனுக்கு—அதாவது அழகேசனுக்கு ஆபத்து என்று டிரைவர் சொல்லக் கேட்டதும், அவள் அடைந்த பதட்டம் கொஞ்ச நஞ்சமல்ல; அவளது நெஞ்சத்தில் தஞ்சமடைந்த திகிலுணர்ச்சிக்கு அளவு சொல்வது சாத்தியமல்ல; அவள் கண்கள் துடித்த துடிப்பிற்கு ஒன்று, இரண்டு என்பதாக எண்ணிக்கை கூற முடியாது; எல்லாவற்றையும் விட, அவளுடைய மங்கல நாண் அழுத அழுகையை இட்டு நிரப்பப் பெரிய தோண்டிகூடப் பற்ருது. அவளுக்கு நிழல் தந்து, கண்ணில் விளக்கெண்ணெயை ஊற்றிக் கொண்டு அவளுடைய நிழலைக் காத்து வந்த அன்பு மனிதர்—அவளது மாமனரிடம் தான் கேள்விப்பட்ட தகவலைச் சொல்லி, அழகேசனுக்குக் கைக்கு மெய்யாக உதவி செய்யவேதான் அவள் அப்படி 'மாமா....மாமா' என்று இளைத்துக் களைத்து ஓடி வந்தாள்.

அந்த அழகி இப்போது எங்கே? முதல் அழகி எங்கே ஓடி மறைந்தாள்? எங்கே அழகி?

இரண்டாவது அழகிக்கு மூளை வலித்தது. மனச்சாட்சியின் நீதி நெஞ்சில் நெருப்பை வைத்தது. ஏவுகிறவனுக்கு வாய்ச் சொல்லோடு சரி; இயற்றுகிறவனுக்கல்லவா தலைச்சுமை....?

'திருடர்கள் ஜாக்கிரதை' என்ற எச்சரிக்கைப் பலகைகளுக்குப் பதிலாக பங்களாக்களிலே நாகரிகமான ஓர் உபாயம் கையாளப்படுவது உண்டு. அதாவது, அங்கே ஆஜானுபாகுவான கூர்க்கா ஒருவன் நின்று கொண்டிருப்பான். இங்கே, அழகேசன் பவனமும் அதற்கு உடன் பட்டதுதான். அந்தக் காவலாளியையும் ஏமாற்றிவிட்டு, கேள்வி முறையில்லாமல் உள்ளே நுழைந்து விட்டாள் நிலவுப் பெண். நுழைந்த சுட்டிப் பெண் வாய் பொத்திக் கண் பொத்தி இருந்திருக்கக் கூடாதா? அதுதான் இல்லை. கன்னங் குழியச் சிரித்தாள். விம்மி வெடித்துக் கொண்டிருந்த அழகியிடம் 'கிச்சு கிச்சு தாம்பாளம்....' பாடினள். அழகி சிரிக்கவில்லை; சிந்தித்தாள். அவள் திருமதி அழகேசனுக மாறிய—அல்ல, மாற்றப் பட்டதற்குப் பின்னர் உருவாகியிருந்த சோகசரிதையின் பக்கங்கள் அவளுக்குக் கதை சொல்லிக் கொண்டிருக்கையில், அவள் எப்படிச் சிரிப்பாள்? இல்லை, சிரிக்கத்தான் அவளால் முடியுமா?....அதனல் தான் அவள் சிந்தித்தாள்; அது மட்டுமல்ல; சீறினள். அவள்தான் இந்தப் புது அழகி. அன்புக்கு அப்பாற்பட்டவளாக மாறியவள், இப்போது கடமைக்கும் அப்பாற்பட்டவளாக மாறி விட்டாள்!

'....என் கணவராமே? உடல் தீண்டித் தாலி பூட்டி, ஆனல் நெஞ்சைத் தீண்ட முடியாதவராயிற்றே அந்த மகராஜன்...? அவருக்கு உதவுவதுதான் என் கடமையாமே?...மனம் கணத்துக்கு கணம் மாறும் ஒரு பச்சோந்தி; மனச் சாட்சி, பலூன் கண்ட இடத்தில் செருமும் கைக் குழந்தை. இவை இரண்டும் என்னை ஏவுவதா?...அழகேசன் கட்டிய தாலியை நான் ஏந்திக் கொண்டிருக்கும் தோஷத்திற்குத் தான் நான் கண்ணீரைப் பரிகாரமாக்கிக் கொண்டிருக்கிறேனே, அது போதாதா? மாமாவிடம் நான் ஏன் இதைப் போய்ச் சொல்ல வேண்டும்? அவர்தான்

அழகேசன் பேரில் ஆத்திரமாக இருக்கிறாரே?...அழகேசனின் நாடகத்தைவேறுபுரிந்துகொண்டதாகவும் சொன்னாரே? விடியட்டும் பொழுது....!' என்று மனம் குழம்பினாள் அவள்.

அழகி எங்கோ மிதந்தாள். உலகங்கள் ஒவ்வொன்றாக வழி விட்டன. உயர உயரப் பறந்தது பருந்து; ஊர்க் குருவியானது. உச்சி முகட்டில் நிலைத்தது. எங்கும் இன்பம்; காணும் பொருளில் எல்லாம் ஆனந்தம்; நோக்கும் திசை முழுதும் கள் வெறியின் ஆரவாரம்.

அழகியின் மார்பகம் ஏறியது; இறங்கியது.

சுட்டெரித்த விண்மதி தட்டி அழைத்தது.

போதையை போதத்திலே ஒளித்து வைத்து, தூய மதுக்குடம் ஏந்தி நின்ற புத்தம் புதிய ரோஜாப்பூ நிலவைச் சுட்டெரித்துச் சபித்துக் கொண்டிருந்தது!

கண்களைத் துடைத்தபடி அழகி எழுந்தாள். கூடத்துக்கு நடந்தாள்.

சோமநாதன் எதிர்ப்பட்டார்.

"என்ன அம்மா, சாப்பிடவில்லை?'' என்று விசாரித்தார்.

''உங்களுக்குச் சாப்பாடு பரிமாறத்தான் வந்தேன்...'' என்றாள் அழகி.

''என்னைப் பற்றியே நாளெல்லாம் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறாயே, அழகி? உன்னைப் பற்றியே நீ கவலைப்பட மாட்டேன் என்கிறாயே?'' என்று கேட்டார் பெரியவர்.

''என்னைப் பற்றித்தான் நீங்கள் வினாடிக்கு வினாடி கவலைப்படுகிறீர்களே, மாமா? அது போதாதா?'' என்று சிரித்தாள் சின்னவள்.

''முகஸ்துதிக்கு வேண்டுமானால், அல்லது ஒப்பனைக்குவேணுமானால் நீ இப்படி என்னை உயர்த்திப் பேசலாம். ஆனால் நான் பாவி, அழகி நான் மகாபாவி....கொடும்பாவி!'' என்று விம்மினார் சோமநாதன்.

''மாமா, அப்படியெல்லாம் சொல்லாதீங்க. நீங்க பெரியவங்க. என் அதிர்ஷ்டம் இப்படி.... நீங்க என்ன செய்வீங்க?....நீங்க எதுக்கு அழணும்....? என் தந்தை மாதிரியிருக்கிற நீங்க தானே எனக்கு இப்போது ஆதரவு....! கண்ணைத் துடைச்சுக்கிட்டு வாங்க, சாப்பிடலாம்....அதோ, வள்ளி வெள்ளித் தட்டைக் கழுவி வந்து விட்டாள்....'' என்று நிதானம் பிறழாத தொனியில் வார்த்தைகளை வெளியேற்றினாள் அவள்.

பெரியவர் அவளை ஏற இறங்கப் பார்த்தார். பிறகு, ''எனக்கு சாப்பாடு வேண்டாம், அழகி!'' என்று தீர்மானமாகச் சொன்னார்.

மின்னல் துவளும் நேரத்திற்குள் அழகி துவண்ட கொடியானாள். ''மாமா, இப்போதுதான் உடம்பு கொஞ்சம் தேறி வருது. இராச் சாப்பாட்டை தள்ளக் கூடாதுன்னு நீங்களே எனக்குப் புத்தி சொல்லுவீங்களே?....வாங்க, தக்காளி ரசம் இருக்கு...ரசஞ் சாதமாச்சும் சாப்பிடுங்க.... அப்புறம் பால் சாப்பிட்டு நிம்மதியாகப் படுத்துக் கொள்ளுங்கள்....'' என்று மறுபடியும் கெஞ்சினாள்.

விரக்தியுடன் சிரித்தார் – அழகேசன் ஸில்க் எம்போரியத்தின் சொந்தக்காரர். ''உன்னுடைய நிம்மதியைப் பறித்துக் கொண்ட என்னை நிம்மதியாகத் தூங்கச் சொல்லுகிறாயா?.... வேடிக்கையான விண்ணப்பம்தான். அழகி, என்னைத் தயவு பண்ணி மன்னித்து விடு....'' என்று அவளை நெருங்கி, அவளது கைகளைப் பிடித்துக் கொண்டு கெஞ்சினார்.

''மாமா, நான் உங்கள் மருமகளாயிற்றே? நான் மன்னிப்பதா?.... நீங்கள் ஒன்றும் தவறு செய்யவில்லையே?....''

''எங்கோ பிரகாசிக்கவேண்டிய குலச் சுடரை இந்த வெறும் வீட்

டில் அடைத்து வைத்துவிட்டேனே, இந்தப் பாவத்துக்கு எனக்கு ஏழேழு பிறப்புக்கும் மன்னிப்பு கிடைக்காதே அம்மா! உன் கல்யாணத்தை முடிவு செய்தவன் அழகேசன். அந்தச் சமயம் பார்த்து எனக்கு மலேரியா காய்ச்சல் வந்தது. சாகப் பிழைக்கக் கிடந்தேன். இல்லையென்ருல், நான் உன் சம்மதத்தைக் கேட்காமல் இருந்திருப்பேனு? அழகேசனுடைய உண்மை சொரூபத்தை அவனைப் பெற்ற அப்பனுன என்னுலேயே புரிந்துகொள்ள முடியாமல் போய் விட்டதே? இந்தக் கல்யாணம் உன் அப்பாவின் உயிரைக் குடித்து, உன் உயிரையும் அணு அணுவாகச் சாகடித்துக் கொண்டிருக்குமென்று நான் கனவிலும் நினைக்க வில்லையே! அம்மா அழகி, உன்னை இங்கே கொண்டு வந்து சேர்க்கும்படி நான் எல்லாத் தெய்வங்களிடமும் வேண்டியதற்குப் பலன் கிடைத்தது. தள்ளாத வயசில் உன்னை எங்கே கண்டு என்னுல் தேட முடியும்? அழகி, நீ இங்கே அடியெடுத்து வைத்த அன்றைக்கே உன் காலில் விழுந்து கதறி அழவேண்டுமென்றிருந்தேன். அம்மா, என்னை மன்னித்து விடு.... நீ என் மருமகள்.... ஆமாம், மறுமகள்! மன்னிப்பாயா, அழகி....?''

அழகி பேசாமல் நின்ருள். கண்கள் பேசிக் கொண்டிருந்தன.

அழகி கண்கலங்கி நின்ருள். கண்கள் விழி பிதுங்கச் சிரித்தன.

''இரவு மணி பத்து,'' என்றது கடிகாரம்.

மாமனாரின் கைகளைப் பிடித்து அழைத்துச் சென்று 'தடுக்கில்' உட்கார வைத்தாள்; உணவு பரிமாறினாள்; உண்டு முடிந்ததும், பசும் பால் கொடுத்தாள்; படுக்கையை உதறிப் போட்டாள்; வெற்றிலைத் தட்டைச் சரிபார்த்து வைத்தாள்.

சோமநாதனைப் பற்றி அழகிக்குக் கரைதலைப் பாடம். ஆகவே, இதுதான் சமயமென்று நினைத்து, அவரிடம் ஏதோ ஒன்றைத் தெரிவிக்க எத்தனித்தாள்.

ஏதோ ஒரு நல்ல காரியத்தைச் செய்யப் போவதில் அவள் மனம் மகிழ்ச்சியால் நிறைந்தது; இந்த முடிவுக்கு அவள் வருவதற்குள், அவள் பாடு மலையைக் கல்லி எலி பிடிப்பது போலத்தான் ஆகிவிட்டது. மனச்சாட்சிக்குச் சரித்திரம் உண்டா? பூகோள சாஸ்திரம்தான் உண்டா? எல்லாம் சடுதியில் ஏற்பட்ட முடிவு!

“சரி, சரி... நாழிகை ஊர்ப்பட்டதாச்சு. நீ சாப்பிட்டுப்போய் தூங்கம்மா!” என்று துரிதப்படுத்தினார் அவர்.

"மாமா, நான் இதோ போய் விடுகிறேன். உங்களிடம் ஒன்று சொல்ல வேண்டும்...." என்று மென்று விழுங்கினுள் அழகி.

"நான்கூட உன்னிடம் ஒரு விஷயத்தைத் தெரியப்படுத்த வேண்டுமென்றுதான் நினைத்தேன்...!" என்று தயங்கினுர் அவர்.

"என்ன, சொல்லுங்கள்...."

"நீ முதலிலே சொல்...."

"ம்... வந்து...."

"நீட்டி நெளிக்காமல், கதை எழுதுகிறமாதிரி பளிச்சென்று சொல்லம்மா," என்று சிரித்தார் அவர்.

அந்தச் சிரிப்பைத்தான் இத்தனை விநாடிகளாக அவள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்தாள்.

"நம்ப அத்தான் அழகேசனை யாரோ பிடிச்சு வச்சிருக்காங்களாம்.... டிரைவர் சொன்னுர்...."

அழகியின் குரலில் துயரம் தெறித்தது.

'கட கட'வென்று சிரித்தார் சோமநாதன்.

"மவுண்ட் ரோட்டிலே ஹோட்டல் பூலோக சொர்க்கத்தில் தானே உன் அத்தானை – அல்ல, என் அருமைப் பிள்ளையை அடைத்து வைத்திருக்கிருர்கள்..?"

"ஆமாம்..."

"ம்......."

"உங்களுக்கு முன்னடியே தாக்கல் வந்துவிட்டதா?"

"ம்..."

"மாமா, உங்களை இப்போது என்னல் புரிந்துகொள்ளவே முடியவில்லையே?.... யார் அவரை அடைத்து வைத்தார்களாம்?"

"குற்றவாளி அடைபட்டுக் கிடக்கிருன். நீ ஏன் அம்மா அவதிப்படுகிருய்? உன்னைக் கூண்டில் அடைத்து வைத்துவிட்டானே அந்தப் பாவிப் பயல்?...."

"மாமா, வெள்ளம் தலைக்கு மிஞ்சி வந்திருக்கிறது; அத்தானைக் காப்பாற்றுங்கள்....!"

"முடியாது!"

"ஏன்?"

"பழிக்குப் பழி வாங்கப் போகிறேன்....!"

"பெற்ற பிள்ளையிடமா?"

"பெற்ற அப்பனிடம் அவன் வஞ்சம் தீர்த்துக்கொண்டு விட்டானே?"

"அப்படி என்ன செய்தார்?"

"உன்னைக் காய்ந்த பூங்கொடியாக, கருகிய மொட்டாக, வாடிய ரோஜாவாக ஆக்கிவிட்டானே?"

"அப்படியென்ருல், அவருடன் நானும்தான் உங்களுக்கு இப்போது பாரமாக இருக்கிறேனு?"

"என்னம்மா சொல்கிருய்?" என்று பதட்டத்துடன் கேட்டார் சோமநாதன்.

"யார் அவரை அடைத்துப் போட்டிருக்கிருர்கள்?...."

"அவசியம் உனக்குத் தெரியத்தான் வேண்டுமா?"

"ஆமாம்...." என்று அழுத்தந் திருத்தமாகப் பதில் விடுத்தாள் அவள்.

"நானேதான்!"

"ஆ, நீங்களா?" என்று அலறினுள் அழகி. குருதிக் குழல்களின் ரத்தம் அவ்வளவும் அப்படி அப்படியே – ஆங்காங்கே உறைந்து குளிர்ந்துவிட்டது.

"மாமா, எனக்காக நீங்கள் அவரை ஏன் கொடுமைப்படுத்த வேண்டும்? இப்போதே மவுண்ட் ரோட்டுக்குப் புறப்படுவோம், வாருங்கள். அவரைக் காப்பாற்ற வேண்டாமா?..."

"அன்றைக்கு ஒருநாள் காலையில் நான் உனக்கு எச்சரித்தேனே, அழகேசனுக்காக நீ துளி கண்ணீரைக்கூட வீணடிக்கக் கூடாதென்று? மறந்துபோனுயா?" என்று ஆத்திரத்துடன் சொல்லிவிட்டுப் படுக்கையில் படுத்துக் கொண்டார் அவர்.

"அப்படியென்ருல், நீங்கள் அவரைக் காப்பாற்ற முடியாதா?....

சரி, இதோ இப்பொழுதே நான் ஒருத்தியாகவே போகிறேன்....! அவர் உங்கள் மகன் என்பதற்காக அல்ல; அல்லது, அவர் எனக்குரியவராக ஆக்கப்பட்டாரே என்பதற்காகவும் அல்ல; பாவம், ஒரு மனிதர் வீணாக நரக வேதனைப் படுகிறாரே என்ற பரிதாப உணர்ச்சியினால் உந்தப்பட்டுத்தான் அவருக்கு உதவப் போகிறேன்....!'' என்று கூறி முடித்ததும், விருட்டென்று வெளியேறினாள் அழகி.

அப்போது, சோமநாதன் வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்தார்.

''அழகி, நில்! உன் அத்தான் இந்நேரம் வேறு இடத்துக்கு மாற்றப்பட்டிருப்பான்!''

புதிய குண்டலல்லவா இது?

தங்கப்பதுமை வெள்ளியானது.

காற்றோடு கலந்த நினைவுச் சிதறலொன்று குரல் கொடுத்தது. சோமநாதன் என்னவோ சொல்ல வேண்டுமென்றாரே....?

அழகி விடாப்பிடியாகக் கேட்டாள்.

''முதலில் போய்ப் படுத்துத் தூங்கு. தன்னாலே எல்லாம் தெரியும்,'' என்ற பதில்தான் கிடைத்தது—அவளுக்கு.

செவிடுபட அலறிக்கொண்டிருந்தது ஆந்தை.

அழகி அங்கிருந்து கிளம்பினாள்.

''இந்தாம்மா, புதிய புத்தகம் இது. எடுத்துக்கொண்டு போய்ப் படி,'' என்று கூறி, புத்தகமொன்றை நீட்டினார் சோமநாதன். அவருடைய கை நடுங்கியது.

கூடத்தை அடுத்திருந்த அவளது அறையில் நுழைந்தாள் அழகி; இதுவரை உணர்ந்திராத புதிய திகில் ஏற்பட்டது. கையிலிருந்த அந்தப் புத்தகத்தை அலுப்புடன் வீசிப் போட்டாள். அதற்குள்ளேயிருந்து ஓர் உறைக் கடிதம் பிரிந்தது.

''அன்புமிக்க மருமகள் அழகிக்கு,

உன்னிடம் நேரில் சொல்ல நினைத்த விஷயங்கள் இவை. உன் வாழ்வைப் பாலைவனமாக்கிவிட்டதற்கு என்னை மன்னித்துவிடு. என் வாழ்வின் கடைசிக் கட்டமும் இன்றோ நாளையோ என்று நெருங்கிக் கொண்டிருக்கிறது. நான்பெற்ற மகனே என்னை விஷமிட்டுக் கொல்ல முயன்றிருக்கிறான். அத்தகைய பாவி, எனக்குப் பிறகு உன்னை என்ன பாடுபடுத்துவானோ தெரியாது.

நீ புதிய ரோஜா; அதிலும் ஜாதி ரோஜா. நீ வாடிக் கருகி மண்ணோடு மண்ணாக மக்கி வீணாகப் போய்விடக் கூடாது. நீ மணம் பரப்ப வேண்டிய இடமும் இல்லாமல் இல்லை. உன்னுடைய முறை அத்தான் முரளி உன்பேரில் ஒரே பைத்தியமாக இருக்கிறான். ஆரம்ப நாளிலே நீங்கள் பழகிய விவரங்களையும் கேட்டுத் தெரிந்து கொண்டேன். உனக்கும் அவன் மீது ஆசையிருக்குமென்று நம்பியே நான் உன்னிடம் ஒரு வேண்டுகோளை யாசிக்கிறேன். உன்னை முரளியிடம் மனப்பூர்வமாக ஒப்படைக்க நான் தயார். நீ இதயம் திறந்து சிரிக்கத் தொடங்கிவிட்டால், நான் நிம்மதியாகச் செத்துப் போவேன். உன்னுடைய எதிர் காலத்தையும் உன்னுடைய கனவுகளையும் அழகேசனின் காலடியிலே ஒப்படைத்த நீ, புனிதம் நிறைந்த உன்னுடைய இருதயத்தை முரளியிடம் அடைக்கலம் வைத்து விடுகின்றாயா? அழகேசன் பேரில் நீ வழக்கு தொடுப்பதாகவும் நான் கேள்விப்பட்டேனே?.... உன் பதில் தெரிந்து தான் அழகேசனைப் பற்றி நான் ஒரு முடிவுக்கு வரவேண்டும்; என் சொத்துக்களின் உரிமைக்கும் உயில் தயார் செய்ய வேண்டும்.

இப்படிக்கு உன் மாமனார்,
சோமநாதன்.''

தண்மதி உதிர்த்த கண்ணீர் விண் எங்கும் காட்டாற்றின் வெள்ளமாகப் பாய்ந்தது!

(மே இதழில் முழுமை பெறும்)

கோத்தமங்கலம்

'நயா பைஸா' வியவகாரமெல்லாம் அந்தக் காலத்தில் கிடையாது. அனைத்தும் ரூபாய், அணா, பைசாதான். இந்த முப்பிரிவில் தான் அந்த நாளிலே ஓர் அப்பாவி உலகத்தையும் உய்வையும் கண்டு கொண்டிருந்தானென்றால், அவனை தயங்காமல் தட்டாமல் 'இனம்' கண்டு சொல்லி விடலாம்—அவன்தான் கணக்கப் பிள்ளை என்று. ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, என்று இப்படிப் புற்றீசல்களாகப் புறப்படும் எண்களிலிருந்து, பற்று—வரவு வகையறு வரையில்தான் அவனுக்குத் தெரியும். கணக்கப்பிள்ளை, பாவம், நம்முடைய அனுதாபத்திற்குரிய நபர்!

சரி, கலையை நம்முடன் பேச வைக்கிறானே ஒரு மனிதன்?—அவன் யார்? அவன் செப்பிடுவித்தைக்காரன் அல்ல; அல்லவே அல்ல! மூன்றே முக்கால் நாழி என்ற சொற்றொடர் அவனுக்குத் தெரியவே தெரியாது. கண் கட்டு மாயையில் அவனுக்கு ஆர்வம் இல்லை. ஏன், நம்பிக்கையும் இருப்பதில்லை. இவன்தான் என் சகோதரன்—அப்பாவி எழுத்தாளன்!

இப்பொழுது மூன்றாவது பிரகிருதியை அறிமுகப் படுத்த வேண்டும். இவன் கலையைக் கனிய வைப்பான். ஆனால், இவன் கடவுள் அல்ல. என்றாலும், கடவுளுடன் நேருக்கு நேர் பேசுவான்; வாதம் புரிவான்; சவால் விடவும் பின் வாங்கான். இவன் இரண்டாவது பிரம்மா—கவிஞன்!

பேட்டிக் கட்டுரை:

பூவை எஸ். ஆறுமுகம்

இனி, நாலாமவன். இவனுக்கு உலகம் ஒரு நாடக மேடை என்கிற 'சிதம்பர ரகசியம்' தெரியாது; ஆனால் உண்மையான அரங்குதான் தனக்கு வாழ்வு என்ற 'பைத்தியம்' இவனுக்கு. 'வேஷம்' போடுவது இவன் பொழுதுபோக்கு—ஊரை ஏமாற்ற அல்ல; உலகை உய்விக்க! இவனுடைய முத்துப் புன்னகைக்கு—மாளாத விழி வெள்ளத்திற்கு 'மதிப்பு' தாராதவர் வெறும் பிண்டங்கள். ஆஹா, இவன்தான் கலைஞன்—நடிகன்!

இப்பொழுது ஒரு பெரிய மனிதர் நம்முன் காட்சி தருகின்றார். எல்லாம் கடந்தவர் இவர். அதாவது, கஷ்ட நஷ்டங்களை அனுபவித்து, உணர்ந்து, வெற்றி கண்டவர். வாழ்க்கையை விளையாட்டாக்கி, பரிசோதனையையும் செய்து காட்டப் படாத பாடு படுவார் இவர். 'ஓ. கே...கட்!.... டேக்....!' போன்ற இதமொழிகளில் அப்பியாசப்பட்டவர். திரையுலகத்திற்கு இவர்தான் ஆண்டவன்; அதிகாரி. டைரெக்டர்!—சொல்லிப்பார்க்கும்போதே 'பயம்' ஏற்படுகிறதோ?

பெரும்போக்கான பார்வையுடன் நோக்கி இந்தப் 'பஞ்சபாண்டவர்'களைப் பரிசீலனை செய்து பார்த்தால், இவர்கள் பாசம் துறந்தவர்களாக—வேற்று மனிதர்களாகக் காணப் படலாம். நுண்ணிய கலைக் கண்ணோட்டம் பதித்து இவர்களை ஆராய்ந்தால், இவர்கள் புராண காலத்திய பஞ்ச பாண்டவர்களாக—இருபதாம் நூற்றாண்டு அபூர்வ சகோதரர் களாகவே தோன்றி நம்முடன் அளவளாவுவார்கள்.

இந்த உண்மையை நான் தத்ரூபமாக அறிந்தேன். காட்டுக்

சுப்பு

கொன்று தலைக்கொன்றாகக் கிடப்பார்களென்று நான் கருதிய இந்த ஐந்து புள்ளிகளையும் ஒரே இடத்தில்—அதுவும் ஒரே உருவாகக் காண்பேன் என்று நான் நினைத்திருக்கவில்லை. இந்த அதிசய நிகழ்ச்சி அண்மையில் நடந்தது; லாயிட்ஸ் வீதியில், எழுபத்தொன்றாவது எண் பதிந்த தமிழ் மனையிலே நிகழ்ந்தது.

"வணக்கம்," என்று நான் கை குவித்தேன்.

"வா, தம்பி!" என்று எங்கள் வட்டாரப் பகுதிகளிலே முகமன் கூறும் பாணியுடன் சொல்லி, அன்பு கலந்து உபசரித்தார் இந்தக் காந்தி பக்தர்.

திரு கொத்தமங்கலம் சுப்பு அவர்களுக்கு என் நன்றி உரியது.

தங்களது இளமை நாட்கள், தங்களைத் திரையுலகிற்கு எவ்வாறு திருப்பின? பின்னர், இலக்கிய வாழ்வுக்குள் எப்படிப் புகுத்தின?

நான் ஒரு கணக்கப்பிள்ளை. கணிதத்தில் இன்பத்தைக் காண்பது அப்பொழுது என் பொழுது போக்கு. கணிதம் கலையில் திருப்பி விட்டது. சம்பளமின்றி நாடகத்தில் நடிக்கப் போனேன். வாழ்க்கையில் ஏற்பட்ட ஒரு துயர சம்பவத்தால் சினிமாவில் புகுந்தேன். அங்கும் தமிழ்த் தாய் என்னைத் தடுத்தாட் கொண்டாள். 'ஒருவனைப் பற்றி ஓரகத்திரு' என்பது போல் நல்ல முதலாளிகளைத் தேடி அடைந்தேன். ஸ்ரீ வாஸன் அவர்களால் என் வாழ்க்கை வளம் பெற்றது. திரியிட்டு, நெய்யிட்டு, தீபத்தை ஏற்றித் தூண்டி விட்டுக் காப்பது போல் என்னை அவர்கள் காப்பாற்றுகிறார்கள். ஏதேனும் பிரகாசம் இருந்தால், அது அவர்கள் செய்த உதவி. ஔவை ஒன்றே என் பரம்பரைக்குப் போதும். அதைவிடச் சிறந்ததை இனி நான் செய்ய முடியுமென்று கனவிலுங்கூடக் காண முடியாது. இறைவன் கருணை வடிவானவன். அவன் ஆட்டுவிக்கிறான்; நாம் ஆடுகின்றோம். அவன் அருளை வடிக்கின்றான்; நாம் பருகுகின்றோம். அவன் அருளாலே அவன் தாள் வணங்குவதுதான் நாம் செய்யக் கூடியது. 'காந்தி மகான் கதை'யும், 'தில்லானா மோகனாம்பாளு'ம் நான் கனவிலும் கூடக் கண்டதில்லை. நம்பினேன். நல்லவரைப் பாதுகாவலராகத் தந்தான். நல்ல வழியில் போகச் செய்தான். நல்ல பெயர் கிடைக்கச் செய்தான். இன்னும் எத்தனையோ நற்கருமங்களிலும் ஈடுபடுத்த வேண்டும். என் பிறவியைப் பயனுடையதாக ஆக்கவேண்டும் என்பதுதான் என் இடையறாத பிரார்த்தனை. நன்றியும் பிரார்த்தனையும் கலந்துதான் நான் வாழ்கின்றேன். அவன் கருணையை நினைக்க என் உள்ளம் நெகிழ்கின்றது; கண்ணீர் மல்குகின்றது; நா தழுதழுக்கின்றது. உணர்ச்சி வசப்படுகிறேன். 'என்னை நல்லவனாகவே வைத்திரு; எஞ்சிய நாட்களை உன் பணிக்கே எடுத்துக் கொள்' என்று இதய பூர்வமாய் வேண்டுகின்றேன். தமிழ்ப் பணியே அவன்

பணியாகக் காண்கின்றேன்; அதிலே இன்பம் அடைகின்றேன். பதினெட்டு மணி நேரம் எழுதுகிறேன். உடல் நைகின்றது. நான் எழுதும் காகிதத்தில் என் கண்ணீர் கொட்டுதலும், என் சிரிப்பு வெற்றிலை எச்சிலைச் சிதறுவதும், நான் அனுபவிப்பதும்தான் முக்கியமான இன்பங்கள்.

ஆட்சி மொழியாக அரியணை ஏறியுள்ள நம் தமிழ்மொழி தெருவெல்லாம் முழங்க அரசினருக்குத் தாங்கள் கூற விரும்பும் ஆலோசனைகள் என்னென்ன? பத்திரிகைகளின் மூலம் இப்பணி செயற்பட வழி என்ன?

யோசனை சொல்லவே வேண்டாம். தமிழன் அறிவாளி; தமிழன் பண்புடையவன். அறிவால் அவனுக்கு ஒரு சண்டை ஏற்பட்டாலும், அன்பால் அவன் என்றும் ஒன்றுனவன். தமிழகம் உயர்ந்து விட்டது. அரசியல் கொந்தளிப்புகள் இன்னும் பத்து வருஷத்தில் அடங்கி ஒரு நிலைப்பட்டு விடும். உலகில் சிறந்த தமிழ் நாடு அப்பொழுது மறுபடியும் ஓங்கி நிற்கும். அதை நாம் எல்லோரும் காண்போம்.

இன்றுள்ள அரசியல் வெறும் சூதாட்டமாக மாறிவிட்டதென்று முடிவுகட்டத் தோன்றுகிறது — இப்போதைய தேர்தல் நாடகத்தை வைத்துப் பார்க்கும்போது. உங்களுடைய எண்ணம் என்ன?

அரசியல் எப்பொழுதுமே சூதாட்டம்தான். வாழ்க்கையே அநித்யமானது. ஆன்மா வாழ்வுதான் பெரிது என்று போதிக்கப் பட்ட நாட்டில் — அதைக் கடைப்பிடிக்கும் நாட்டில் — மண் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட அரசியல் குழப்பமாகத்தான் இருக்கும். அதிலே ஆன்ம வாழ்வு கலந்தார் காந்தி மகாத்மா. அவரால்தான் நாமெல்லோரும் அரசியலைத் திரும்பிப் பார்த்தோம். இன்று காந்தி மகாத்மா இல்லை. நம் கண் அரசியலிலிருந்து ஆன்மத் துறையில் சீக்கிரமே திரும்பிவிடும். அரசியல் ஒழுங்காக நடக்கும். ஆனால், இவ்வளவு அரசியல் குழப்பங்களும் சூதாட்டங்களும் மாறியும் விடும். தேசத்தின் வாழ்வில் அது பெரிதாகத் தோன்றுது.

ஒருவன் நல்லவன் கெட்டவனுவதும், கெட்டவன் நல்லவனுவதும், ஒருவரையொருவர் பகைப்பதும், மனிதன் விருப்பு வெறுப்பு முதலிய குணங்களை வெளியே கொண்டு வந்து கொட்டுவதும் தேர்தல் காலத்தில் இயற்கை. ஒரு விதத்தில் பார்க்கப் போனுல், இதுவும் தேவைதான். புயலுக்குப் பின் அமைதி வருகின்றதல்லவா? கெட்ட உணர்ச்சிகள் இந்தச் சந்தர்ப்பத்தில் கொட்டப்பட்டு விடுகின்றன. இது ஒரு போக்கு மடை. இனி, குளத்திலே தெளிந்த நீரைப் பார்க்கலாம்.

பத்திரிகைகளுக்காக வாசகர்களா? வாசகர்களுக்காகப் பத்திரிகைகளா?

பத்திரிகைகளுக்காகத்தான் வாசகர்கள். அது ஒரு குருபீடம். கடமையை உணர்ந்த ஆசிரியன் தானும் வாழ்ந்து உலகுக்கும் நலம் பல செய்வான். மக்கள் நோக்கத்தைப் பின் பற்றுகிறேன் என்று சொல்லி, வண்டியை விட்டு அவன் இறங்கி, காளைகளுக்கு முன்னே ஓடுவது முரண்பாடு.

'யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல்
இனிதாவதெங்கும் காணும்!'
— காரணங்கள் எவை?

அதுவேதான் காரணம். தாயை நத்துவதற்குக் காரணம் வேண்டுமா? தமிழைப் போற்றுவதற்குக் காரணம் வேண்டுமா?

இன்று தமிழ் நாட்டில் ஆளுக்கு ஒரு ஏக்கர் நிலம் கிடைக்குமா என்பது தகராறு. பிரித்துக் கொடுத்தால், ஆளுக்கு ஒரு நல்ல நிலம் கிடைக்கும். தமிழனின் பெருஞ் செல்வம் நம்முடைய இன்பக் களஞ்சியங்கள். நம் வாழ்வை வகுத்தவர்கள் தமிழ்ப் புலவர்களே

யாவர். வாழ்க்கைத் துறையில் வள்ளுவரும் ஔவையும் பாரதியும் வாழ்க்கையை வகுத்தார்கள். கம்பனும் இளங்கோவும் அதற்குக்கற்பூர மணமிட்டார்கள். திருவாசகமும் திருவாய்மொழியும் அருட்பாவும் அன்புப் பயிரை வளர்த்தன. அன்பு, அறிவு, ஆற்றல் ஆகிய மூன்றையும் தாய்ப்பாலாகப் புகட்டியது தமிழ்மொழி.

தமிழ் என்பார் பிறர்; தாய் என்போம் நாம்.

* * *

''பிர்லா மாளிகை மைதானத்தில்
பிரார்த்தனைக் கூட்டத்தில்
பெரிய மகாத்மா பேசவந்திடும் பிரியமான நேரம்
ஆபாகாந்தி தோளைத் தழுவி அய்யன் வரும்போது
அருகிலிருந்தொரு பாவி கிளம்பி அவரு பக்கம் வந்தான்
புத்திலிருந்து பாம்பு கிளம்பி கொத்திய பாவனைபோல்
சத்திய சொருபனை கொல்லக் காலன் சமயம் பார்த்து வந்தான்.
பாபூஜியே சரணம் என்று பாதத்தில் விழுந்தான்
பதுக்கியிருந்த துப்பாக்கியை கைப்பற்றிக் கொண்டெழுந்தான்
வந்தனம் செய்த காந்தி மகாத்மா மார் மேலே சுட்டான்
வாழ வைத்தவர் காந்தி மகாத்மா வயிற்றினிலே சுட்டான்
குண்டு துளைத்தது காந்தி மகாத்மா குலையும் துடிச்சிடவே
குண்டு துளைத்தது தேசம் முழுவதும் குலையும் துடிச்சிதுவே
குண்டு துளைத்தது மானிடவர்க்க குலையும் துடிச்சிடவே
குண்டு துளைத்தது சத்தியம் அகிம்சை கொல்லாமை தனிலே
ராமா ராமா ராமா என்றே என்னையன் விழுந்தார்
இறக்கை வெட்டின சடாயுபோலே என்னையன் வீழ்ந்தார்
இரண்டு கையையும் தலைமேல் தூக்கி ராம ராம வென்றே
ஈசனுடம்பில் கலந்தாரையா எங்கள் மகாத்மாஜி!''

பேராசிரியர் கல்கி அவர்கள் தலைமை தாங்கினார்கள். திருகொத்தமங்கலம் சுப்பு அவர்கள் காந்திமகான் கதை பாடினார்கள்.

காந்தி மகாத்மாவைக் கொன்று விட்டான் ஒரு பாவி.

சுப்பு வாய் விட்டு அழுதார்.

பெரம்பூர் விம்மிக் கதறியது.

ஒரு சமயம், நான் கண் முன் கண்ட அழியாக் காட்சி இது.

மொழி இரண்டு விதமாக வளர்ந்தது; அல்லது, வளர்க்கப் பட்டது; அதன் காரணமாக இரு வகைப்பட்ட இலக்கியங்கள் பிறந்தன.

ஒன்று: இலக்கண இலக்கியம்.

இரண்டு: நாடோடி இலக்கியம்.

இலக்கண இலக்கியம் பண்டிதர்களின் இல்லங்களிலே வளர்ந்தது. நாடோடி இலக்கியம் பாமரர்கள் வீடுகளிலே வாழ்ந்தது.

மோட்டார் வேகத்தில் பாமர இலக்கியம் வளரும்போது, சைக்கிளின் கதியில் பண்டிதர் இலக்கியம் வளரலாயிற்று.

பாமர இலக்கியத்தின் அடிப்படை எழுச்சி உள்ளமும் இன்ப வெள்ளமும் ஆகும்.

பண்டிதர் இலக்கியத்திற்குப் படிப்பின் ஆழமும், பண்பாட்டின் வேகமும் ஆதார சுருதியாயின.

ஆக, இரண்டும் வெவ்வேருக, அதாவது, ஒரகத்தி வீட்டில் பிறந்த குழந்தைகளாகக் கருதப் பட்டு வந்தன.

அபாயம் அறிவித்த இந்நிலை மாற்றப் பட்டது; மேற்படி குழந்தைகள் ஒன்றுவிட்ட சோதரர்களாக்கப் பட்டனர். பெருமை பெறும் பங்குதாரர்களிலே சுப்பு அவர்கள் குறிப்பிடத் தகுந்தவர். யாரும் மறுக்க முடியாது. அவரது காந்தி பக்தி பிறப்பித்த 'காந்தி மகான் கதை' பண்டித–பாமரர் இலக்கியத்தின் கலவைப் படையல்.

''எனக்கு எப்பொழுமே நாட்டுப் பாடல்களைப் படிப்பதில் ஆவல் அதிகம். ராஜா தேசிங்கு போன்ற கதைகளைப் படிக்கும் பொழுது என்னை அறியாமலே உணர்ச்சி வசப்பட்டு விடுவேன். ஆஹா! இந்தக் கவிஞர்கள் அந்தந்தக் காலத்தில் இருந்தார்கள். அந்த நிகழ்ச்சிகளைக் கண்ணால் கண்டிருக்கிறார்கள் என்று எண்ணிப் பூரித்துப் போவேன். இந்த எண்ணமே காந்திமகான் கதையைப் பாடத் தூண்டியது என்றுகூடச் சொல்லலாம்.''

முதற் பதிப்பின் முன்னுரையில் கவிஞரின் பேனா இவ்வாறு ஓடுகிறது.

இன்றைய நிலையிலே, தமிழில் மறுமலர்ச்சி இயக்கம் விரும்பத் தகுந்த அளவில் செல்கிறதென்று நீங்கள் நினைக்கிறீர்களா?

மறுமலர்ச்சி என்பது ஒரு புரியாத புதிர். பண்புக்கு முரணான கருத்துதான் மறுமலர்ச்சியா, பழைமையை ஒழிப்பதுதான் மறுமலர்ச்சியா என்பது எனக்குப் புரியவில்லை. எந்தப் பழத்திலும் பூ முற்றி காயாகி, காய் முற்றி கனி ஆவதுதான் இயற்கை. பூவும் வேண்டும்; பழமும் வேண்டும் என்பதுதான் மறுமலர்ச்சி. அம்மாதிரி பார்க்கப்போனால், மாதுளம்பழம் ஒன்றுதான் இருக்கிறது. அதிலே மேலே பூவும் உண்டு; உள்ளே பழமும் உண்டு. அம்மாதிரி மறுமலர்ச்சிக் கனியில் ஒளி வீசும் மாதுளை முத்துக்கள் வரவேண்டுமென்பதுதான் என் ஆசை. ஆனால், இன்று நான் காணுவது பெரும்பாலும் முந்திரிப் பழங்களையே. முந்திரிப் பழத்தில் பழத்திற்கு முன்பு கொட்டை ஒட்டியிருக்கும். முந்திரிக் கொட்டை இலக்கியம் காறும்; புளிக்கும். அம்மாதிரி மறுமலர்ச்சி என்னால் விரும்பத் தகுந்தது அல்ல. பாடுபட்டு பெரியோர்கள் கண்ட அந்தப் பழைய பண்பாடுகளை ஒரே நாளில் இடித்துவிட முயற்சிப்பது, ஐயாயிரம் வருஷத்தில் செய்த அபிவிருத்தியை ஐந்து நாளில் தகர்த்து எறிவது போலாகும்.

கவிதைகளில் புலமையைவிட கருத்துக்களை அதிகம் புகுத்துவது அநேகருடைய குறிக்கோள். இதைக் குறித்து நீங்கள் என்ன கருதுகிறீர்கள்?

கவிதை என்பது கற்கோயில். அதற்குக் கட்டட அழகும் வேண்டும்; உள்ளே கடவுளும் வேண்டும். வெறும் கருத்து கவிதை ஆகிவிடாது. கல்லும் கோவிலாகிவிடாது. இலக்கணமும் கருத்தும் இரண்டறக் கலந்ததே கவிதை. இலக்கணம் வெளியே தெரியக்கூடாது. கருத்துத்தான் தெரிய வேண்டும். நாவுக்கு இசைந்தால் தான் பாவுக்கு இசையும். இன்று வரும் கவிதை இலக்கியம் புதிய இலக்கணத்தை உண்டாக்குவதாக இருந்தாலும் இருக்கலாம்.

இன்று வாழும் எழுத்தாளர்களில் — கவிஞர்களில் — கலைஞர்களில் சிலர் கட்சிச் சார்பில் வாழ்கிறார்கள். இவர்களுக்குக் கட்சி தேவையா? இதனால் இவர்களுக்கு இருக்க வேண்டிய பொது நோக்கு பாழ்பட்டு விடாதா?

உண்மைக் கலைஞனையும் கவிஞனையும் எல்லா நிகழ்ச்சிகளும் பாதிக்கும். அவன் உணர்ச்சி வசப்பட்டவன். அவன் உள்ளம் பழுத்துக் காய்ந்து கொண்டேயிருக்கிறது. ஆதலால், கட்சிகளை அவன் சாரா விட்டாலும், அவனுடைய இதயமாகிய கண்ணாடியில் எந்த நிழலும் விழத்தான் செய்யும். கண்ணாடி உருவத்தை எடுத்துக் காட்டுமே யொழிய, அது உருவமாக மாறி விடாது. ஆதலால் கலைஞன் கட்சிக்காரனாக முடியாது. தள்ளி நின்று வண்டியை ஓட்டச் செய்வதுதான் அவன் வேலை.

'ஆனந்த விகட'னில் சிறுகதை, நாவல் என்று போட்டிகள் நடத்தப்படுவதைப் போன்று, திரைக் கதைக்கும் ஜெமினி ஒரு போட்டி நடத்த தாங்கள் ஏற்பாடு செய்வீர்

களா? பிற மொழிகளை நம்பாமல், நம் தாய்மொழிக் கதைகளையே படத்தில் புகுத்த நல்வாய்ப்பு ஏற்படுமே? – டைரெக்டர் என்ற அளவில் இக்கேள்வியைக் கேட்கிறேன்.

இது ஸ்ரீவாசன் அவர்களைக் கேட்க வேண்டிய கேள்வி. அவர் ஓர் அறிவுக் களஞ்சியம். உங்களுக்குத் தகுந்த பதிலை அவர் அளிப்பார்.

* * *

அய்யம்பேட்டைதவுல் கந்தப்ப பிள்ளை, திருவழுந்தூர் சிவக்கொழுந்து, வீணை பவானி முதலியவர்களைச் சந்தித்து ஆண்டுகள் பல ஆகிவிட்டன. அவர்களுடைய நினைவுகளை நாம் மறக்க முடியாது. அவர்கள் நமக்குத் தெரிந்தவர்கள். அவர்களைத் தவிர, அம்மாதிரி புதிய பெயர்களை நாம் சமீபத்தில் ஏனோ காண இயலாமல் போயிற்று. காரணம், பேராசிரியர் ரா. கி. மண் துறந்தார்.

ஆடலிலும் பாடலிலும் நமக்கு ஆர்வமும் ஈடுபாடும் மிகுதியுண்டு. பொது ஜனங்களின் உள்ளங்களை அறிந்து தானோ என்னவோ, ஒரு பக்கம் நாட்டியக்கச்சேரியும் இன்னொருபுறம் நாகசுரக் கச்சேரியும் நடந்து வருகின்றன. தில்லானா மோகனம்பாளுக்கும் நாயனம் சண்முகத்துக்கும் போட்டா போட்டி. இதன் முடிவு இவ்விருவருக்கும் தெரிய நியாயம் இல்லை. இந்த ஒரு சிக்கலைப் பின்னிவிட்டு வேடிக்கை பார்ப்பதற்காக வேண்டி, தொடக்கத்தில் சர்ச்சையொன்று நடைபெறுகிறது. சர்ச்சை என்பதைவிட 'சந்தேகம்' என்பதுதான் பொருத்தம்.

'கடவுள் ஆண் பிள்ளையை முதலில் படைத்தாரா? அல்லது பெண்ணை முதலில் படைத்தாரா?' என்பதுதான் மேற்படி விவாதம்.

இதற்கு பேராசிரியர் தில்லை நாயகம் சொன்ன பதிலின் சாறு இதுதான்: "கடவுள் ஆணைத்தான்

அடுத்த இதழில்:

★

இலக்கியப் பட்டி மண்டபம்:
ம. ரா. போ. குருசாமி

*

பேட்டி:
கி. வா. ஜகந்நாதன்

*

தம்பிக்கு:
ஜி. உமாபதி

*

தொடர் கதைகள்:

வாடா விளக்கு
'மாயாவி'

ஜாதி ரோஜா
'பூவை'

*

சிறு கதைகள்:

நா. பார்த்தசாரதி
நாக. முத்தையா
'கிருஷ்ணா'; மைதிலி
த. சிவப்பிரகாசம்
டி. எஸ். ராஜாமணி
'அன்புச் செல்வி'

*

'ரஜனா'; இரா. இளந்திரையன்
'ஏடெடுத்தேன் பாட்டெழுத'

*

எமிலி ஜே. ஆரீஸ்
'கார்த்திகை பாலன்'
சிந்திக்க; சிரிக்க!



முதலில் படைத்தார். வெறும் வீரத்தில் அவனுக்கு இன்பம் இல்லை. நம்மை யாராவது அடக்க மாட்டார்களா என்ற எண்ணம் அவனுக்கு ஏற்பட்டது. இந்தச் சமயத்தில்தான் கடவுள் கையிலே ஒரு பிடி மண்ணை எடுத்துக் கொண்டு மனத்தில் தியானித்தார். வீராதி வீரர்களையெல்லாம் அடக்கும் ஒரு பிறவி இதில் பிறக்க வேண்டுமென்று நினைத்தார். அவர் கையிலிருந்து ஒரு பெண் குதித்தாள். மதோன்மத்தனைத் திரிந்த ஆணின் முன் பெண் வந்து நின்ருள். அந்தப் பெண்ணின் பார்வையிலேயே ஆண் மகனின் வீரம் தீரமெல்லாம் விடை பெற்றுக் கொண்டன. மயங்கி வீழ்ந்தான். அப்போது வீழ்ந்தவன் வீழ்ந்தவன் தான். இன்னும் அவன் எழுந்திருக்கவே யில்லை!''

பேராசிரியர் விளக்கம் சொல்லி நிறுத்துகிருர். அவர் இம்மாதிரி முடிவுக்கு வருவதற்குக் காரணமாயிருந்தது வெறும் ஆராய்ச்சியல்லவாம்; தில்லாஞ மோகனம்பாளின் திவ்ய சௌந்தர்யம்தாஞம்!

திரு கொத்தமங்கலம் சுப்பு அவர்களின் 'தில்லாஞ மோகனம்பாள்' அமரர் கல்கியை நமக்கு நினைவூட்டிக் கொண்டே வருகிருள். பேராசிரியர் கிருஷ்ண மூர்த்தி அவர்களின் நினைவு கலைமணியின் பெயரை நினைவூட்டிக் கொண்டேயிருக்கும்.

திரு கொத்தமங்கலம் கையாளும் எழுத்துக்கள் நிறைந்த அனுபவம், அதிகப் படிப்பு, ஆழ்ந்த சிந்தனை ஆகியவை தந்த பரிசில்கள்.

ஈன்ற மண்ணின் பெயர் என்ருல் சிலருக்கு மையல்— பாசம்.

பத்திரிகை உலகில் பரபரப்பை ஊட்டி வரும் பெயர் இது!

* * *

தாங்கள் தில்லாஞ மோகனம்பாளை உருவாக்கியதன் மூலம் பேராசிரியர் கல்கி அவர்கள் அடைந்த புகழைச் சம்பாதித்து வருகிறீர்கள். பெரும்பாலாஞேர் கருத்தும் இதுவே. 'கல்கி' மாதிரி தாங்களும் சரித்திரத் தொடர் கதைகள் எழுதுவீர்கள் என்று நம்புகிறேன்.

கல்கி அவர்கள் அடைந்த புகழை நான் அடைந்து விடவில்லை. அப்படி ஒருவர் அடையவும் முடியாது. கல்கி அவர்கள் கரும்பைக் கற்கண்டாக்கிக் கொடுத்தார். நான் கரும்பாகத்தான் கொடுக்கிறேன். அவருடைய நடையின் ஹாஸ்யமும், இன்னும் நூறு வருஷங்களுக்கு ஒருவராலும் பின்பற்ற முடியாதது.

சரித்திரத் தொடர் கதை எழுதவேண்டுமென்றுதான் ஆவல். ஈழ நாட்டுச் சரித்திரங்களையும் மலாய் நாட்டுச் சரித்திரங்களையும் தமிழ்க் கண்ணேடு ஆராய்ந்து வருகிறேன். இறைவன் திருவருள் துணை செய்தால் எழுதுவேன்.

'கலைமணி' என்ற பெயரில் தங்கள் தொடர்கதை 'ஆனந்த விகட'னில் இடம் பெற்று வருகிறதே!— இதே புனைபெயரில் வேறு சிலரும் எழுதி வருகிருர்களே?

'கலைமணி' என்ற பெயர் எனக்குக் கிடைத்த பல பட்டங்களில் ஒன்று. வரகவி திரு சுப்பிரமணிய பாரதியாரால் பெரம்பூரில் வழங்கப்பட்டது. ஒரு புனை பெயருக்கு அவசியம் வந்தபோது, அதை உபயோகப் படுத்திக் கொண்டேன். அம்மாதிரிப் பெயரில் வேறு சிலர் இருக்கிருர்களென்பது எனக்கு அப்போது தெரியாது. தெரிந்திருந்தால், தயங்கி யிருப்பேன்.

'தமிழ்நாடு' அமைப்பு முறை தங்களுக்கு விருப்பம் தானே?

'தமிழ் நாடு' அமையவேண்டும். அதுவே மத்திய அரசாங்கமாகவும் ஆகவேண்டும். ஆஞல், இந்தியா ஒன்ருகத்தான் இருக்க வேண்டுமென்பது என் ஆசை.

இந்தியாவுக்குப் பொது மொழி ஒன்று தேவைதாஞ? எந்த

மொழிக்கு அந்த இடம் தருவீர்கள்?

சிக்கலான கேள்வி.

ஹிந்தி ஒரு வளமற்ற மொழி. தமிழே இந்தியாவின் ஆட்சி மொழியாக ஆவது எதிர்பார்க்க முடியாதது. பொதுமொழி தேவை தான். அது ஆங்கிலமாகவே இருந்தாலும் போதும் என்று தான் எனக்குச் சொல்லத் தோன்றுகிறது.

பத்திரிகைகள் வாயிலாகக் கவிதை வளர்ச்சி பெறுமா? அல்லது திரைமூலமாகவா?

பாடப்படுவது பாட்டு. பாட்டைத்தான் கவிதை என்கிருர்கள். பத்திரிகைகளில் பல சந்தங்களையும் வைத்து எழுதினுல் படிப்பவர்கள் திணறுகிருர்கள். சினிமாவில் கவிதைகளைப் பாடமுடியும். அதிலே அதிக வளர்ச்சிக்கும் இடம் உண்டு.

நாடோடிக் கவிதைகளைப் பற்றிய சுருக்கமான வரலாறு வேண்டும்.

கடலைச் சுருக்குவதற்கு நான் அகத்தியன் அல்ல. அதை இன்னெரு கட்டுரையில்தான் விளக்க வேண்டும்.

'உமா' பற்றிய உங்கள் கருத்தைத் தெரிவிப்பீர்களா?

'உமா'—அழகிய பெயர். ஆக்கும் தாய் பராசக்தி. அவளுடைய பெயர் உமை. உங்கள் பத்திரிகை நான் விரும்பிப் படிக்கும் பத்திரிகை. அது வெறியூட்டவில்லை. நெறியை ஊட்டுகின்றது. நல்ல பத்திரிகை. நாட்டுக்கு நலம் செய்யும்.

* * *

திரு கொத்தமங்கலம் சுப்பு அவர்கள் டைரெக்டர் ஆனுர்.

'கொத்தமங்கலம் சுப்பு ஒரு டைரெக்டர் என்ருல், அப்படி என்னை மாற்றிய பெருமை ஸ்ரீ வாஸன் அவர்களைத் தான் சாரும். இலக்கியத் துறையிலே 'காந்திமகான் கதை'யும், படஉலகிலே 'ஒளவை'யும் என் இரு கண்கள். ஸ்ரீ வாஸனின் அரவணைப்பிலே பிறந்தவைதான் இவை' என்கிருர் இவர்.

ஜெமினியின் புகழைப் பாடிக் கொண்டே இருப்பாள் ஒளவைப் பாட்டி. இவளுக்கு 'கார்டியன்' திரு சுப்பு.

இலக்கிய உலகிலும் திரை உலகிலும் ஒன்றுசேர புகழ் சம்பாதித்த பெயர்கள் 'பேரெல்லாம் புகழ் படைத்த பழந்தமிழ் நாட்டிலே' ஒன்றிரண்டு தேறுவதுகூட இழுப்புப் பறிப்புதான்.

திரு கொத்தமங்கலம் சுப்புவுக்கு தலைமையிடம் தரவேண்டும்.

'ஈழகேசரி' ஒருமுறை விமர்சனம் செய்ததுமெத்த சரி. ஆம்; கவிதையாவேசம் வந்து ஒருவரைப் பார்க்க வேண்டுமானுல், சுப்புவைத்தான் பார்க்க வேண்டும்!

'மஞ்சிவிரட்டு' என்ற இவருடைய சிறு கதைத் தொகுப்பிற்கு முன்னுரை வழங்கிய வ. ரா. அவர்கள் 'சபாஷ், சுப்பு' என்று பாராட்டினுர்.

'நயா பைஸா'வின் கதையைச் சொன்ன போது, இவர் 'காசுமணி' ஆனுர்.

'கம்பராமாயணச் சிந்து', 'மருக்கொழுந்து' போன்ற கவிதை நூல்கள் அச்சு வடிவில் மணம் பரப்பயிருக்கின்றன.

நாடகம், சினிமா ஆகியவை ஒன்றுக்கொன்று உதவியான கலையா? போட்டிக் கலையா? அவை ஒன்றுக்கொன்று உதவு முடியுமா?

கலையில் போட்டியே கிடையாது. நாடகம் தாய்; சினிமா குழந்தைகள். டெலிவிஷன் பேரன், பேத்தி! இவை மாறிக்கொண்டே வரும்.

சினிமா பார்ப்பது தவறு என்று முன்னர் ராஜாஜியும், ஈ. வெ. ராவும் சொன்னுர்கள். இது குறித்துத் தங்கள் முடிவு என்ன....?

பெரியவர்கள் எப்போழுதும் புத்தி சொல்லுவார்கள். அதை அவர்கள் பொது மக்களுக்குச் சொல்வதைக் காட்டிலும் தொழில் சம்பந்தப்பட்டவர்களுக்குச் சொல்லி யிருந்தால், தொழில் முன்னேறும். அவர்கள் நினைக்கும் நன்மைகள் வரும்.

திருவாளர்கள் வாஸன், ராஜாஜி ம. பொ. சி, கல்கி — ஒவ்வொரு துறையிலும் பிரபலமான இப் பெயர்களைப் பற்றி உங்கள் நினைவுகளை அறிய ஆவல்.

ஸ்ரீ வாசன் :

என் சிறுமைகளை மன்னிப்பவர். என் பெருமைக்குக் காரணமானவர். மனிதர்கள் எப்படி இருக்க வேண்டுமென்பதற்கு எடுத்துக் காட்டு. எளிமையே உருவானவர். இதயத்தில் கடல் போன்றவர். பிறருக்கு இன்னலே செய்யாதவர், ஈட்டல், அதை நல்வழியில் செலவிடல் என்பதற்கு உவமை அவர்.

ராஜாஜி :

உலகத்தில் சிறந்த அறிவாளி. தனி அறிவு. ஒளி வீசும் ஞாயிறு. அதன் அருகில் விட்டில் மாத்திரமல்ல, கருடனும் செல்ல முடியாது. அவர் தனியாய் நிற்பவர்.

ஸ்ரீ ம. பொ. சி :

தமிழனுக்காகவே வாழ்பவர். நல்லது கெட்டது என்றுகூடப் பாராமல், குழந்தைகளை அரவணைக்கும் தாய்போல தமிழ் மக்களுக்கு உழைப்பவர். அவரைப் போல் ஒரு பிறவியைக் காண்பது அரிது.

ஸ்ரீ கல்கி :

தமிழ் வயலிலே புதிதாக விளைந்த செல்வம். மறுமலர்ச்சி என்றால், அவர்தான் உண்மையான மறுமலர்ச்சி செய்தவர்.

தாங்கள் விரும்பும் பத்திரிகாசிரியர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள் யார், யார் ?

சர்க்கரை, கற்கண்டு, பனங்கற்கண்டு, பழம், லட்டு, அல்வா— எல்லாமே இனிப்புதான்; எல்லாமே சுவையுடையவைகள்தான். இதைப் போல் எல்லோருடைய எழுத்தும் இதயத்திலிருந்துதான் வருகின்றது. எல்லாக் கவிஞர்களும் எல்லா எழுத்தாளர்களும் எல்லா ஆசிரியர்களும் எனக்கு ஆசிரியர்கள். நான் பள்ளிப் படிப்பு அதிகம் படித்ததில்லை. இவர்கள்தான் எனக்குக் குருவாக விளங்குகிறார்கள். சில சமயங்களில் அவர்கள் யாரையேனும் வைதால், அதை நான் விரும்பிப் படிப்பதில்லை. வெறுப்பையும் நெருப்பையும் வளர்ப்பது பேனாவின் வேலையல்ல. வாள் முனையைக் காட்டிலும் பேனா முனை சிறந்தது என்பதன் கருத்து, வாள் முனையால் அழிக்கத்தான் முடியும்; பேனா முனையால் ஆக்க முடியும் என்பதைத்தான் எடுத்துக் காட்டுகிறது. ஏர் முனையும் பேனா முனையும் ஒன்று. ஏர் முனை வயிற்றை வளர்ப்பது. பேனா முனை வாழ்வை வளர்ப்பது. எல்லா ஆசிரியர்களுமே என் வணக்கத்திற்கு உரியவர்கள்.

சென்ற ஆண்டு ஆனந்தவிகடன் தேவன் அவர்களைப் பேட்டி கண்டேன். இவ்வாண்டு ஜெமினி சுப்பு அவர்கள் பேட்டி தந்திருக்கிறார். இவர்களின் அதிபர் திரு எஸ். எஸ். வாஸன் அவர்களுக்கு நான் வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். ★

புதுமை அரங்க ஆரம்பவிழா

'புதுமை அரங்கம்' என்ற நாடக சபையின் ஆரம்பவிழா, 'கல்கண்டு' ஆசிரியர் திரு. தமிழ்வாணன் தலைமையில் சிறப்பாக நடந்தேறியது. இந்த விழாவில் சுப்பராவ், வாசவன், ஜெகசிற்பியன், ஆர். பி. மல்லாரி, மற்றும் பல எழுத்தாளர்கள், நடிகர்கள், பத்திரிகாசிரியர்கள் கலந்து கொண்டனர். சென்னை, கிண்டியில் நடைபெற்ற சர்வகலாசாலை நூற்றாண்டுவிழா கண் காட்சியில் அமைந்த டெலிவிஷன் மேடையில் திறமையாக நடித்துக் காட்டப்பட்டது. இந்த அரங்கத்தின் சிறப்பான படைப்பாக 'விளக்கேற்றி வைத்தவள்' என்னும் நாடகம் சென்னையில் விரைவில் நடைபெறும்.

டண்.... டணர்.... டண்.... டணர்.... டண்.... டணர்.!

மாதா கோயிலின் முதல் மணி; காது மயங்கும் பேரோசை.

அந்த அழைப்பொலி ஆசிரமத்தையே உசுப்பி விட்டது. ஜப்பானிய முறைப்படி வரிசை வரிசையாக நடப்படும் நாற்று மாதிரி அதன் நடுக் கூட்டத்தில் குவிந்தனர் குழந்தைகள். அவர்களுக்கு முன்னுல் லில்லி கிரேஸ் வந்து நின்ருள்; கை குவித்தாள்; மனம் ஒன்றியது.

"தோத்திரம் செய்வோமே! —
பராபரனைத்
தோத்திரம் செய்வோமே!...."

பிரார்த்தனை கீதத்தின் இன்னிசை; இதய கீதம்; பக்தி வழிந்தோடும் இனிய சூழல்; அதிலும் ஒரு தனியான அமைதி.

பாட்டு முடிந்தது; ஒசை அடங்கிற்று; குழந்தைகள் 'மளமள'வென்று கலைந்தனர்.

புதிதாக வந்து சேர்ந்திருந்த சிறுமி ஒருத்தியைத் தன்னிடம் அழைத்தாள் லில்லி கிரேஸ்.

"நேற்று நான் சொல்லிக் கொடுத்த வாசகம் எல்லாம் நினைவில் இருக்கிறதா?" என்று அன்பு சொட்டக் கேட்டாள்.

"இருக்குதம்மா," என்ருள் சிறுமி.

"எங்கே சொல் பார்க்கலாம்."

"பரமண்டலங்களில் இருக்கிற எங்கள் பிதாவே! உம்முடைய நாமம் அர்ச்சிக்கப் படுவதாக! உம்முடைய ராஜ்யம் வருவதாகுக!..."

சிறுமி தடங்கல் சிறிதுமின்றி ஒப்பித்துக் கொண்டே சென்ருள்.

அந்தச் சிறுமி தாயைக் காணுதவள்; தந்தையைப் பறிகொடுத்தவள்; யாருமற்ற அனுதை.

இன்ருே அவளுக்கு 'ஞானஸ்நானம்' — அதாவது கிறிஸ்துவ மதத்தைத் தழுவப் போகிருள். இல்லை யென்ருல், இந்தக் கிறிஸ்துவ ஆசிரமத்தில் அவளுக்கு இடம் ஏது? நிழல் ஏது?

* * *

டண்....டணர்! டண்....டணர்! மாதா கோவிலின் இரண்டாவது அழைப்பு.

சொல்லி வைத்தாற் போல ஆசிரமத்து வாசலில் ஒருவர் பின் ஒருவராக 'இரயில் வண்டி' கோத்து நின்றனர் குழந்தைகள். லில்லி கிரேஸ் 'ஊம்' என்று தலையை அசைத்தாள். அவர்கள் கோவிலை நோக்கி ஊர்ந்தனர். மலர்க்குவியலே நகர்கிற மாதிரியான அற்புதக் காட்சி!

எல்லாருக்கும் பின்னுல் நடந்தாள் லில்லி கிரேஸ்.

> மனச்சித்தம் என்பது காப்பதற்கும் அடக்கி நிலை நிறுத்துவதற்கும் கடினமானது. அறிவாளியோ, வேடன் தன் அம்பை நிமிர்த்தி நேராக்குவதுபோல், சபல சித்தமும் நடுக்கமும் நிறைந்த தன் சிந்தனையை நிமிர்த்தி நேராக்குகிறான். — புத்தர்.

நந்தியாவட்டைப் பூ வண்ணத்தில் வெள்ளைப் புடவை; வெள்ளை ரவிக்கை; விடி நிலவைக் கவிழ்த்து வைத்த மாதிரி கொண்டையில் நிற்கும் பெரிய கைக்குட்டை.

இந்தப் பதினைந்து ஆண்டுகளாக இப்படித்தான் அவள் உடுத்துகிறாள்; நடக்கிறாள்; இருபது முப்பது அனாதைக் குழந்தைகளை மேய்க்கிறாள். கிறிஸ்துவ அனாதை ஆசிரமத்துக்கு அவள் தலைவி. அதனைத் தோற்றுவித்தவளே அவள்தான் என்று சொல்லுகிறார்கள். எல்லாரும் அவளை 'டீகனஸ்' என்றே பிரியத்துடன் அழைக்கிறார்கள்.

லில்லி கிரேஸ் திருமணம் ஆகாதவள்; ஏன், நாற்பது வயது வாலைக் குமரி; இதழ் அவிழாத மல்லிகை மொட்டு!

ஒரு காலத்தில் அவளும் திருமணம் புரிந்து கொள்ளவே துடிதுடித்தாள்; தாயாகிச் சேய் தாங்கவே தவி தவித்தாள். ஆனால், அப்போது அவளுடைய ஆசையிலே மண்ணை அள்ளிக் கொட்டியதுகூட இந்த ஞானஸ்நானந்தான்! ஆம், இந்த ஞானஸ்நானம்தான்...!

* * *

லில்லி, லில்லி மொட்டாகப் பள்ளிக்கூடம் போய்வந்த காலம்.

அடுத்த வீட்டிற்குப் புதிதாய்க் குடி வந்தார் ஓர் ஆசிரியர். சொல்லிக் கொடுப்பதில் அவருக்கு நல்ல பெயர். அதனால், அவரிடம் 'தனிப் பாடம்' பயிலச் சென்றாள் லில்லி.

நாளடைவில் சாப்பிட்ட நேரம் போக, ஆசிரியர் வீடே குடியாய்க் கிடந்தாள் அவள். இதற்குக் காரணம், ஆசிரியருடைய கண்டிப்பு அல்ல; திறமை அல்ல. இனிமை வழியும் பேச்சும் அல்ல; சந்திரன்! ஆம், ஆசிரியரது அருமைப் புதல்வன் சந்திரன்!

அரும்பு மலர்ந்தது; லில்லி 'பெரியவள்' ஆனாள். சந்திரன் மட்டும் என்ன, எவ்வளவு அழகனாக வளர்ந்து விட்டான்!

பருவம் என்னும் மஸ்லீன் திரை குறுக்கே தொங்கி அவர்களை விலக்க முனைந்தது. ஆயினும் சந்திரனும் லில்லியும் மனம் விட்டுப் பேசினார்கள்; பேசாமலும் இருந்தார்கள். சிரித்தார்கள்; சிரிக்காமலும் இருந்தார்கள். ஒருவரை ஒருவர் நோக்கினார்கள்; நோக்காமலும் இருந்தார்கள்.

அடிக்கடி லில்லிக்கு முகம் சிவக்கும்; தலை கவிழும். சந்திரனுக்கு உதடு துடிக்கும்; நா குழறும்.

முன்பெல்லாம், பலர் முன்னிலையில் பயமே இன்றிப் பழகியவர்கள், இன்று ஒருவர் கண்ணிலும் படாமல், கோடி கோடி உயிரினங்கள் வாழும் இந்தப் பரந்த உலகத்தைத் தம் இருவரிடத்து மட்டுமே சுருக்கி வைத்துக் கொண்டு, தனிமை வெளியில் கொஞ்சத் துடித்தனர்.

அம்மாதிரியான பல நாட்களில் ஒரு நாள்:

"லில்லி, உன் அப்பா, அம்மாவுக்கு நான் எவ்வளவோ நன்றி செலுத்தணும்."

"ஏனாம்....?"

"சந்திரன் என்னும் ஒருத்தன் காதலிப்பான் என்பதை முன் கூட்டியே தெரிந்து கொண்டு, உனக்கு லில்லி என்று பெயர் வைத்தார்கள் பார், அதற்காகத்தான்."

"கற்பனை ரொம்ப அபாரம் போங்கள்."

"லில்லி!"

"என்ன?"

"அதோ, அந்த நீலவானத்தைப் பார்த்தாயா? அங்கே மிதந்து போவது என்னவென்று சொல்லேன்."

"நிலா."

"அதுக்கு வேறே பெயர் என்ன?"

"திங்கள்."

"இன்னும் வேறே எப்படிக் கூப்பிடலாம்?"

"மதி."

"ஆமாம், மண்ணாங்கட்டி!"

"அம்மாடியோவ், கோபத்தைப் பாரு."

"பின்னே என்ன? என் பெயரைச் சொல்லுவாய் என்று கேட்டால்....?"

"இதுக்குத்தானா? இதோ ஆயிரந் தடவை சொல்கிறேனே: சந்திரன், சந்திரன், சந்திரன், சந்திரன்!...."

"போதும் .... போதும் .... உஸ்.... நிறுத்துன்னா....!"

கிண்கிணிச் சிரிப்பு. லில்லி ஓய்ந்தாள்.

"லில்லி, அந்தக் குளத்தில் மலர்ந்து கிடப்பது என்ன தெரியுமா?"

"அல்லிப்பூ!"

"அந்த அல்லிப் பூவும் அந்தச் சந்திரனும் மாதிரி, இந்த லில்லிப் பூவும் இந்தச் சந்திரனும்...."

"சண்டையடித்துக் கொள்ள வேணுமா?"

"ஐயே! உன் புத்தி போவுதே, தடம் புரண்ட ரயில் மாதிரி....! ....ம், அது போகட்டும். இனிமேல் உன்னை நான் 'லில்லி' என்று கூப்பிடப் போவதில்லை."

"பின்னே?"

"அல்லி என்றுதான்."

"நான் இதுக்கு ஒருநாளும் ஒப்பவே மாட்டேன்....!"

> தன் அறிவாலும் பராக்கிரமத்தாலும் அடைந்ததை உண்ணும் ஒருவனே உண்மையில் சாப்பிடுகிறவன். அவ்விதம் இல்லாமல், வாலைக் குழைத்து நாய்கூட ஒரு கவளம் வாங்கித் தின்று வயிறு வளர்த்துவிடும்.
>
> —பஞ்சதந்திரம்.

"ஏன்?"

"லில்லி கிரேஸ் என்பது எங்கள் கிறிஸ்தவக் கோயிலில் ஞானஸ்நானம் பெற்ற பெயர். அதற்கு ஈடாகுமா, அந்த அல்லி என்கிற பெயர்?"

"அது என்னவோ? நான் அல்லி என்றே அழைக்கப் போகிறேன்."

"நான் ஏன் என்று கேட்டால் தானே?"

"கேட்காவிட்டால் என்ன பண்ணுவேன் தெரியுமா?"

லில்லி கன்னத்தைத் தடவி விட்டுக் கொண்டாள்.

இப்படித்தான் லில்லியை அல்லிப் பூவாக நினைத்து அன்பைச் சொரிந்தான் சந்திரன்.

வானத்துச் சந்திரன் வாவியில் அல்லியை மலரச் செய்யலாம்; மகிழச் செய்யலாம்; மனைவியாக்கலாம். ஆனால், இந்த மண்ணுலகச் சந்திரன் லில்லி கிரேசை மணக்க முடியுமா?

இருவருக்கும் நடுவே மதம் என்னும் காட்டாறு பொங்கிப் புரண்டு சீறிப்பாய்கிறதே! அதன் அக்கரையிலே லில்லி; இக்கரையிலே சந்திரன்....!

* * *

லில்லியின் குடும்பத்தாரோ கிறிஸ்துவ சமயத்திலேயே ஊறிப் போனவர்கள்; பழுத்தவர்கள்; ஜெபம், பிரார்த்தனை முதலான சம்பிரதாயங்களில் அணுவும் பிசகாதவர்கள்.

வில்லியைப் பற்றியோ சொல்லவே வேண்டாம். விடிகாலை ஐந்தரை மணிக்கெல்லாம் எழுந்துவிடுவாள்; எல்லாரையும் எழும்பச் செய்வாள். அமைதி தவழும் அந்த அழகிளங்காலையில் பிரார்த்தனை கீதம் சலசலவெனப் பாய்ந்தோடும். அதன் முதற் குரலே வில்லியினுடையதாகத்தான் இருக்கும். இரவிலும் அப்படித்தான். வில்லி இல்லாமல் ஜெபம் நடக்காது.

எது எவ்வாறு இருப்பினும், காலையிலும் மாலையிலும் கர்த்தரை வேண்டிச் செய்யும் ஜெபங்கள் தாமே கிறிஸ்தவர்களுக்கு முக்கியமானவை!

ஞாயிற்றுக்கிழமை வந்தாலோ, ஆயிரம் ஆயிரம் பட்டு வண்ணத்துப்பூச்சிகள் தன் உடம்பில் நெளிகிற மாதிரி அவ்வளவு அழகாக உடுத்துக் கொள்ளுவாள் வில்லி. தலையில் முக்காடிடடுக் கொள்வாள்; மௌன நடை போட்டு மாதா கோவிலுக்குச் செல்வாள். கோவிலில் பிரார்த்தனை தொடங்கும்; ஞானப்பாட்டுப் பாடுவர் சபையோர். அப்போது, குயிலே வந்து கூவுகிற மாதிரி அந்த இசை வெள்ளத்திலே 'கணீர்' என்று தலை நீட்டிப் பார்க்கும் வில்லியின் குரல்.

பிரார்த்தனை மேடைக்குச் சற்று முன் தள்ளி, சபையைப் பிரிக்கும் அந்த மரவேலியில் தென் கோடியில் பெண்களுக்கென்றும், வட கோடியில் ஆண்களுக்கென்றும் இரு காணிக்கைப் பைகள் தொங்குகின்றன. கோயிலுக்கு வருகிறவர்கள் கர்த்தரை ஜெபித்து அவற்றில் காணிக்கை செலுத்தலாம். ஞாயிறுதோறும் அந்தப் பையில் விழும் முதல் காணிக்கை யாருடையது தெரியுமோ?—வில்லியினுடையதுதான். அவளே அந்தப் பையை எடுத்துக்கொண்டு பெண்கள் பகுதியில் காணிக்கை வசூலிப்பாள். அந்தச் சேவையிலே அவளுக்குத் தனியான இன்பம்; அளவு கடந்த திருப்தி.

இதுமட்டுமா? பைபிள் கதைகளை வில்லி சொல்லட்டும்; அவை வெல்லமாகவே இனிக்கும்; கற்கண்டாகவே தித்திக்கும், கேட்பவர்களுக்கு. ஏசுநாதரின் ஆசி பெற்று பரமண்டலத்துக்கே போய்விடும் பரம திருப்தி உண்டாகும்.

உண்மையில் கிறிஸ்துவ சம்பிரதாயங்களைப் பயபக்தியுடன் பின்பற்றுவதில் யாருமே வில்லியை மிஞ்ச முடியாது.

* * *

ஆனால், சந்திரனோ........?

பிறப்பால் அவன் இந்து.

அவனைக் கேட்டாலோ, ''மதம் என்பது மக்களின் முன்னேற்றத்தைத் தடுக்கும் முட்டுக்கட்டை,'' என்று காரசாரமாகக் கண்டிப்பான்; வாதம் பண்ணுவான்.

இத்துணைக்கும் அவனது அப்பா பழுத்த சைவர். நெற்றி நிறைய விபூதி. சந்தனப் பொட்டு. கையிலே தேவார, திருவாசக, திருவருட்பாக்கள். வாயிலே எப்போதும் அவற்றின் முணமுணப்பு. காலை, மாலை வேளைகளில் வேறெங்கும் அவரைத் தேட வேண்டுவதில்லை. சிவன் கோவிலில், முருகன் சந்நிதியில் கண்டு கொள்ளலாம்.

இத்தகைய உத்தம ஆஸ்தீகரின் புதல்வன்தான் 'பகுத்தறிவு'க் கத்தியைக் கொண்டு ஒவ்வொன்றையும் கூறுபோட்டான்; ஆராய்ந்தான். அவனது புத்திக் கூர்மை, பெற்ற தந்தையின் நடவடிக்கைகளையே குத்திக் காட்டிக் கேலி பண்ணும் அளவுக்கு வளர்ந்து விட்டதென்றால், பார்த்துக் கொள்ளுங்களேன்!

அப்படிப்பட்டவன் வில்லி கிரேஸை சும்மா விடுவானா? எப்பொழுது பார்த்தாலும் கிண்டல் தான்; ஏளனந்தான்; சிரிப்புத்தான். வில்லியைத் தனிமையில் பார்ப்பானோ, இல்லையோ?

''ஏ, பரமண்டலங்களில் இருக்கிற எங்கள் பிதாவே! என் வில்லி

யின் புத்தியை ஏன் இப்படி மயக்கிவிட்டாய்? என்னை மறந்து அவள் உன்னையே தோத்தரிக்கிருளே? கர்த்தாவாகிய நீ, மனிதனுகிய என்னேடு போட்டியிடலாமா?"

இராகத்துடன் கண்ணை மூடிக்கொண்டு இவ்வாறு முணுமுணுப்பான் சந்திரன்.

ஆமணக்கு நெற்று வெடிக்கிறமாதிரி லில்லிக்குப் பொத்துக்கொண்டு வரும் சிரிப்பு. அப்படியே ஆசையுடன் அவன் தோளைப் பற்றுவாள்.

"என் சந்திரனை விட்டு என்றைக்கு விலகுமோ இந்த அஞ்

ஞானமெல்லாம்?" என்று நொந்து கொள்வாள்.

"அஞ்ஞானம் எனக்கா? உனக்கா?" என்று உறுத்து விழிப்பான், சந்திரன்.

சந்திரன் எவ்வளவுதான் எதிர்வாதம் பண்ணட்டுமே!— லில்லி விடடுக் கொடுப்பாளா? ஒவ்வொன்றுக்கும் ஒரு சுவிசேஷச் சூத்திரத்தை ஆதாரமாக ஒப்புவிப்பாள். இயேசு

கிறிஸ்துவின் பரந்த அன்பு, சிறந்த தொண்டு. அரிய தியாகம், பெரும்பாடு எல்லாவற்றையும் உருக்கமாக எடுத்துரைப்பாள்.

பொதுவாக சாந்தமே உருவான வள் லில்லி. ஆனால், ஒரு வார்த்தை யாராவது கிறிஸ்துவ மதத்தை இழிவாகப் பழித்து விடட்டும், எரிமலை குமுறி வெடிக்கிற மாதிரி கோபக்குழம்பை வீசியெறிவாள். இதனால், சிற்சில சமயங்களில் சந்திரனுக்கும் லில்லிக்கும் வாய்ச்சண்டை உச்ச நிலைக்குக் கூடப் போய்விடும்.

* * *

சிறு பிள்ளைகளாக இருக்கும் போதுதான் இந்தக் குதர்க்க வாதங்கள் என்று அல்ல.

இருவரும் பெரியவர்களாகி, அன்பைச் சொரிந்து, ஒருவரை ஒருவர் பிரிவதில்லை என உறுதி பூண்டு, திருமணமே செய்து கொள்வது என்ற முடிவுக்கு வந்த போது—

''எங்கள் கிறிஸ்துவ மதத்தைத் தழுவத்தான் வேண்டும், நீங்கள்,'' என்றாள் லில்லி.

''அது எப்படி முடியும்? என்னுடைய கொள்கையும் கோட்பாடும் உனக்குத் தெரியாதா, என்ன? இது வரையில் சடங்குகளை ஏற்காமல், மதங்களை மதிக்காமல், தெய்வங்களை வணங்காமல், சீர்திருத்த வாதி என்று பறை சாற்றிக் கொண்டு இருந்து விட்டேன். இப்போது போய் ஒரு மதத்தைத் தழுவுவது என்றால் பார்ப்பவர்கள் பழிக்க மாட்டார்களா? அந்த அவமானத்தை எப்படித் தாங்குவேன், லில்லி?''

''அதைப் பார்த்தால் நம் திருமணம்?''

''ஏன், நீ உன் கிறிஸ்துவ மதத்தைவிட்டு வந்துவிடேன்!''

''அம்மம்மா...அது முடியாது; அது முடியாது!''

அவர்களது வாதப் பிரதிவாதம் நாளுக்கு நாள் முற்றிக் கொண்டே வந்தது.

லில்லி, மதத்தைத் தன் உயிராகவே மதித்தாள்; அதனைப் புறக்கணிப்பதைப் பாவம் என்று நினைத்தாள்; பயந்தாள்.

சந்திரன், மதத்தைப் போற்றுவது மடமை என்னும் தன் விசித்திரப் பகுத்தறிவையே உயிராக மதித்தான்; அதற்கு முரணாகச் செல்வது தவறு என்று கருதினான்; அவமானத்திற்கு அஞ்சினான்.

அவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் காதலிப்பதும் உண்மை; ஒருவர் மீது ஒருவர் உயிர் வைத்திருப்பதும் உண்மை.

அதே சமயம், இருவருமே தத்தம் இலட்சியமே தங்கள் மூச்சு என்று எண்ணி, அந்த இரும்பு வேலியை இடையில் எழுப்பி வாதித்தார்கள்; மோதிக் கொண்டார்கள்.

சந்திரனுக்கு வேறெங்கோ பெண் பார்த்தார்கள்—அவன் வீட்டில். லில்லிக்கு வேறெங்கோ மாப்பிள்ளை பார்த்தார்கள்—அவள் வீட்டில்.

* * *

அந்தி வேளை; இலேசான இருட்டு. குளிரை உமிழ்ந்து குறுநகை புரிந்தாள் காற்றுப் பெண். இன்னுங் கொஞ்ச நேரத்தில் ஒளிச் சிரிப்பை உதிர்த்துப் பரவைக் கூத்து ஆடப் போகிறாள் நிலவுப் பெண்.

பசுமை வழியும் செடி, கொடிகள், மரம், மட்டைகள், துவண்டு நெளிந்து நகைத்து நோக்கும் காவிரிக் கரையில் நடந்தான் சந்திரன். கையிலே இரண்டு மூன்று புத்தகங்கள்.

ஆயிரம் ஆயிரம் பந்தயக் குதிரைகள் இரு கரைகளுக்கும் இடையே இடித்துக்கொண்டு துள்ளிப் பாய்கிற மாதிரி, பொங்கிப் புரண்டு வெறி பிடித்து ஓடியது, வளம் கொழிக்கும் ஆறு.

"சந்திரன்!"

குயிலோசை; மல்லிகை மணம், புதுப் புடவையின் சலசலப்பு; நீல மயிலின் கோல அசைவு. லில்லி வந்து கொண்டிருந்தாள், சந்திரனை நோக்கி.

பேச்சு துவங்கியது.

"என்ன முடிவு செய்தீர்கள், சந்திரன்?"

"நீ உன் கிருஸ்துவ மதத்தை விட்டு வரவேண்டியது, பதிவுத் திருமணம் செய்து கொள்ள வேண்டியது என்ற முடிவுதான்."

"சந்திரன், அதற்கு மட்டும் நான் சம்மதிக்கவே மாட்டேன்."

"நானும் ஞானஸ்நானம் பெற்று உங்கள் கிறிஸ்துவ மதத்தில் சேரவும் மாட்டேன்."

"சந்திரன், ஒரு பெண் ஒரு மதத்தை விட்டு ஓடுகிருள் என்ருல் இந்தக் கிறிஸ்துவ உலகம் எவ்வளவு பழிக்கும் தெரியுமா?'

"ஓர் இலட்சிய வாதி, இது வரை ஊர் ஊராக மேடை, மேடையாக மதங்களைக் கண்டித்துப் பேசி விட்டு, இப்போது ஒரு மதத்தைத் தழுவுகிருன் என்ருல் பகுத்தறிவு வாதிகள் எவ்வளவு பழிப்பார்கள், தெரியுமா?"

"நீங்கள் என்ன சொன்னுலும் சரி; நான் கிறிஸ்துவ மதத்தை விட்டு வெளியேறப் போவதில்லை."

"நீ என்ன கூறினுலும் சரி, நானும் கிறிஸ்துவ மதத்தைத் தழுவுவதாக இல்லை."

"அப்படியென்ருல் இப்போதே இந்தக் காவிரியாற்றில் நான் குதித்து விடுகிறேன்."

"நானும் உனக்கு முன்னுல் குதித்து விடுகிறேன்."

விம்மி விம்மிக் கண்ணீர் விட்டாள் லில்லி. விம்மாமல், தேம்பாமல், கண்ணீரை வடித்தான் சந்திரன்.

அவர்கள் இருவரையும் பார்த்து எக்காளமிட்டுக் கைகொட்டிச் சிரித்தது காவிரி ஆறு.

"தெய்வ பக்தி இல்லாதவர்களும் மனிதர்களா?" என்று மீண்டும் ஆவேசம் கொண்டாள் லில்லி.

"பகுத்தறிவு இல்லாதவர்களின் வாழ்க்கையும் ஒரு வாழ்க்கையா?"

"இந்தக் குதர்க்க வாதம்தான் உங்களுக்குப் பேசத் தெரியும். இன்றைக்கு தெய்வத்தை வணங்க மறுக்கிற நீங்கள் நாளைக்குத் தாய் தந்தையரையே இல்லை யென்று சொல்வீர்களே?"

"வணங்குவது என்ருல், கண்ணுத அந்தக் கற்பனைக் கடவுள்களைத்தாஞ கட்டிக் கொண்டு அழ வேண்டும்? அதற்குத் தாய் தந்தையரையே வணங்கி விட்டுப் போகலாமே!"

"இது எல்லாம் வறட்டுப்பேச்சு. கிறிஸ்துவ மதமோ, இஸ்லாமிய மதமோ, புத்த மதமோ, இல்லை, இந்து மதமோ, ஏதேனும் ஒரு மதத்தைச் சேர்ந்திரா விட்டால், பிறகு மனிதர்களைக் கட்டுப்படுத்த வேறு என்ன இருக்கிறது? நெறி கெட்டு, குணம் விட்டு, நம்பிக்கை யற்று, தாறுமாருகக் குறுக்கு வழியில் நடக்கும் மனிதனை ஓர் ஒழுக்கத்திற்கு உட்படுத்தி நல் வாழ்வு வாழ இழுத்துச் செல்லும் நேரான பாதையே மதம்."

"இல்லை; மதம் என்பது இருள். பகுத்தறிவு என்பது விளக்கு. முன்னேறத் துடிக்கும் எந்த மனிதனும் இருட்டில் கிடந்து உறங்க மாட்டான்; உறங்குவதும் கூடாது. வெளிச்சத்தைக் கொண்டு முன்னேற வேண்டும்; உழைக்க வேண்டும்."

"மதமா இருட்டு? மதத்தைக் குறை கூறும் உங்கள் அஞ்ஞானந் தான் இருட்டு."

"சரி சரி, மறுபடியும், நமக்குள் சண்டை வரப் போகிறது. நேரமாகி விட்டது. பிறகு பேசிக்

கொள்வோம். இப்போது வீட்டுக்குப் புறப்படலாம்.''

''சந்திரன், என்னமோ உங்கள் கொள்கையும் கோட்பாடும் எனக்குக் கொஞ்சங்கூடப் பிடிக்கவில்லை. நாளுக்கு நாள் எனக்கென்னவோ பயம் பயமாக வருகிறது.''

இருவரும் ஆற்றங்கரையில் நடந்தார்கள். சற்று முன்பு வெளிப்பட்டு ஒளியைப் பொழிந்த முழு நிலா முகிலுக்குள் சிக்கித் திணறி அழுதது. இருட்டு கவிந்தது.

''கேட்க மறந்து விட்டேனே, இவையெல்லாம் என்ன புத்தகங்கள், சந்திரன்?''

''இவையா? 'மதத்தைப் பின்பற்ருதே!' என்று துணிந்து கூறிய பேரறிஞன் ஒருவனின் சிறந்த புத்தகங்கள்.''

''யாரது அந்த அஞ்ஞானி?''

''அஞ்ஞானியா?''

''அவனைப் போலச் சிறந்த பகுத்தறிவு வாதியை நீ பார்க்கவே முடியாது லில்லி, பார்க்கவே முடியாது. அவன் சாதாரணப் பேர் வழியல்ல; சட்டக் கலையில் தேர்ந்தவன். கிறிஸ்தவனுகப் பிறந்து, கிறிஸ்தவனுகவே வாழ்ந்து, பிறகு உங்கள் கிறிஸ்தவ மதத்தையே துணிந்து எதிர்த்த மாபெரும் சீர்திருத்த வாதி. அவன் பெயர் என்ன தெரியுமா? இங்கர்சால்!''

''என்ன? அந்தச் சைத்தானின் புத்தகங்களையா படிக்கின்றீர்கள்? அவன்தான் உங்கள் நல்ல மனத்தில் நஞ்சைக் கலந்தானே? ஏன் இப்படித் தாறுமாருகப் பேசுகிறீர்கள் என்பது இப்போதுதானே புரிகிறது? அவன் புத்தகம் உங்கள் கையில் இருக்கிற வரையில் நீங்கள் என் பேச்சைக் கேட்கவே மாட்டீர்கள், நம் கல்யாணமும் நடக்காது.''

லில்லிக்கு ஏதோ ஒருவித ஆத்திரம்; ஏன், வெறி!

'வெடுக்'கென்று சந்திரனின் கையிலிருந்த புத்தகங்களைப் பிடுங்கினுள்; ஆற்றில் வீசியெறிந்தாள்.

''அதில் நூறு ரூபாய் நோட்டு இருந்ததே, லில்லி!''

பதறிக்கத்தினுன் சந்திரன். அவனது கதறலைப் பொருட்படுத்தாமல் நூல்கள் நீரில் மிதந்தோடின.

பணம் போகிறதே என்ற பதற்றம்; ஏமாற்றம்; வேதனை. என்ன துணிச்சலோ, என்ன நம்பிக்கையோ? கொலை புரிந்தவன் மாதிரி, ஓடும் அந்த ஆற்றில் 'குபுக்' என்று குதித்தான் சந்திரன்; விரைந்து புத்தகங்களைத் தொடர்ந்தான்.

''சந்திரன், 'வேண்டாம்; சந்திரன்....!'' என்று கூவிக் கூவி அழைத்தாள் லில்லி.

மிதந்து அமிழும் அந்தப் புத்தகங்களைப் பின்பற்றித் தன் பகுத்தறிவைக் காப்பாற்றிக் கொண்டான்; லில்லியின் விருப்பம் போலவே காவிரியாற்றில் ஞானஸ்நானமும் பெற்று விட்டான்!

''ஐயோ, சந்திரன்.... சந்திரன்! உங்களைச் சாகடித்து விட்டேனே! சந்திரன்... சந்திரன்!''

லில்லி இனி அலறி என்ன? கதறி என்ன? அழுது புரண்டு மடிந்து என்ன? அவளும் ஆற்றில் குதித்து மரிக்கத்தானே ஓடினுள்? இந்தப் பாழும் மனிதர்கள் விட்டார்களா?

* * *

அன்று வெள்ளாடை உடுத்தியவள்தான். தன்னுடைய காதலனுக்கு ஞானஸ்நானம் பண்ணி வைக்க முடியாத அவள், இன்று எத்தனையோ அனுதைக் குழந்தைகள் ஞானஸ்நானம் பெற ஞானத் தாயாக நிற்கிருள்.

* * *

டண்....டணர்.... டண்...டணர்! டண்...டணர்....!

மாதா கோவிலில் மணியோசை; மூன்ருவது அழைப்பு.

இன்று ஞானஸ்நானம் பெறப் போகும் ராஜலட்சுமியின் கையைப் பிடித்தவாறு மலர்ந்த முகத்துடன் மாதா கோவிலுக்குள் நுழைந்தாள் லில்லி! ★

இலக்கியக் கண்ணோட்டம்:

பேயும் நாயும்!

வே. தில்லைநாயகம்

அவளும் அவனும் தமிழ் வாழ்வுக்கு எடுத்துக் காட்டாக வாழ்ந்து வந்தனர். பொருள் தேடி, சுற்றம் பேணிச் சுகித்திருந்தனர். ஆசையின் விளைவில் அன்புச் செல்வன் தோன்றினான்.

நாட்கள் பறந்தன.

தலைவன் தகாத வழியில் காதற் பரத்தையை நாடினான். காதல் மனைவியையும் மறந்தான். பரத்தையர் இல்லமே பழி எனக் கிடந்தான் அவன்.

மோகம் முப்பது நாட்கள்தாமே? மகனையும் மனைவியையும் மனம் நாடியது. ஆனால், நேரடியாகச் சென்றதும், மனைவி தன்னை மறுத்தால் என்ன செய்வது என்ற அச்சம் கிளர்ந்தெழுந்தது. தன் தவற்றையும், திருந்தி வீடு திரும்ப விழையும் பேராவலையும் எடுத்துரைக்க தன் பாணனைத் தூது அனுப்பினான்.

பாணன் தலைவியின் வீடடைந்து ஆடினான்; பாடினான். பல்லைக் காட்டினான்; பாகு மொழி பேசினான். தலைவனின் புகழையும் வீரத்தையும் பல பல கூறி, அவனை எதிர் கொண்டழைக்க வேண்டினான்.

ஆனால் தலைவிக்கோ இவற்றையெல்லாம் கேட்டவுடன், ஆத்திரம் தீர அவனைப் பழித்து அனுப்ப வேண்டும் போலிருந்தது. தவறான வழியில் சென்ற தலைவனுக்கு இத்தனை புகழ்ப்பாட்டா என்ற கோபம் வேறு அவளுக்கு.

பாணனை வாயாலேயே பழித்தனுப்ப எண்ணிப் பேசத்தொடங்கினாள்.

"பாண, நீதானே நேற்று என் தங்கையர்—என் கணவரின் பரத்தையர் வீட்டிலே பாடினாய்?"

"ஆமம்மா; நானேதான் பாடினேன். என் பாட்டுத்தான் தங்களுக்குத் தெரிந்ததாயிற்றே!"

"ஆனால், என் அம்மா என்ன சொன்னார்கள் தெரியுமா?"

"அவர்களுக்குத் தெரியாதா? மிகவும் நன்றாய் இருந்தது என்றிருப்பார்கள்!"

"அதுதான் இல்லை, அப்பனே! காட்டிலே பேய் அழுதுகொண்டிருக்கிறது என்றார்கள், உன் பாட்டைக் கேட்டதும்!"

"ஐயோ!"

"அத்தோடு முடியவில்லை கதை. அக்கம் பக்கத்து வீட்டுக்காரர்கள், இதென்ன நரி இப்படி ஊளையிடுகிறதே என்றார்கள்!"

"இதென்னம்மா?"

"அதற்குள் அவசரப்படுகிறாயே? என் தோழியோ நாய் குரைக்கிறது," என்றாள்.

"ம்...ம்...."

"ஆமாம். நான் மட்டும் 'அப்படியெல்லாம் சொல்லாதீர்கள்; தலைவரின் பாணன்தான் இத்தனைக்கும் காரணம்' என்றேன். தெரியுமா?"

"இப்படியெல்லாம் பேசினால்....?"

"கோபம் வருமா உனக்கு? தூ... வெட்கமில்லை உனக்கு? உனது பவிசையும் உனது தலைவர் பவிசையும் நான் நன்கு அறிவேன். போ...போ.... அங்கேயே— அந்த பரத்தையர் வீடே பழியாகக் கிடக்கச் சொல் அவரை. அருகிருந்து நீயும் அங்கேயே ஊளையிடு. குரைத்துக் கொண்டிரு. ஒப்பாரி வை.... ஓடு!"

தலைவி ஆத்திரமும் கோபமும் கொந்தளிக்கப் பாணனைப் பழித்து அனுப்பினாள். அதில் ஏளனமும் பழிப்பும் பரவிக் கிடந்தன. அது இதுதான்:

ஈட்டு புகழ்நந்தி பாண! நீ எங்கையர்தம்
வீட்டிருந்து பாட விடிவளவும்— காட்டிலழும்
பேயென்றாள் அன்னை, பிறர் நரி யென்றார், தோழி
நாயென்றாள், நீயென்றேன் நான்.

(நந்திக் கலம்பகம், 106)

காதலுக்கும் அடி சறுக்கும்!

'வேணி'

வாடும் மலர் சூடி
வாடா மலர் வரவும்,
வாய் பிளந்து நோக்கி
வாழைப்பழத் தோலால்
வழுக்கி விழுந்து விட்ட
வாலிபனின் கதை கேளீர்!

இயந்திர கதியில் செல்லும் இந்தத் துரித உலகத்தின் பரபரப்பு காலை ஒன்பது மணிக்குச் சென்னை மாநகரின் சாலைகளில் இன்பக் காட்சி தரும். 'கிணு கிணு'வென இசை பாடும் துவிச்சக்ரதாரிகளின் படபடப்பு; ஆமை வேகம் நத்தை வேகத்தில் அன்ன நடை பயிலும் சென்னைச் சிவப்பு வனிதைகளின் கண்மண் தெரியாத வேகம்; 'ஓரம் போ ஸார்' என்று பல்லவி பாடும் ரிக்ஷாக்களுக்கும், 'பப்பபாம்' என நாதம் பரப்பும் மோட்டார்களுக்கும் நடுவே ஓடி ஒதுங்கி, செத்துப் பிழைக்கும் பாதசாரிகளுக்கு உரித்தான வேகம்; விறுவிறுப்பு.

இந்த உலகம் இயந்திர கதியில் இயங்குகிறது என்று சொன்னேன்? தவறு. மயக்கத்தில் உளறியது. இயந்திரங்களிடையே அழகு உண்டா? அன்ன நடையும், வண்ண உடையும் உண்டா? அமராவைப் போன்ற எழிலரசிகள்தாம் உண்டா?

இன்று கல்லூரிக்குப் போய்க் கொண்டிருக்கையில், மூக்கை அறுக்கும் பெட்ரோல் வாசனையையும் மீறி எழுந்தது ஜாதி ரோஜாவின் மணம். எதிரே வந்தது – ஜார்ஜெட் உடையுடுத்து, ஜோர் நடை பயின்று வந்தது – அடடா, ஒரு மின்னல்!

கையிலிருந்த 'ஸ்மித்'தும் 'லோனி'யும் மூலைக் கொன்றாய்ச் சிதறி ஓட, புத்தம் புதிதான என் பூட்ஸ் பாதிக் காலுடன் தொடர்பு கொண்டாட, நான் குப்புற விழுந்த காட்சி, கண்காட்சியே! எதிரே தென்பட்ட பாதங்களை, 'ஈசன் எந்தை இணையடி நிழ'லாகக் கருதி ஆதாரமாகப் பிடித்துக் கொண்டே எழுந்தேன். என்ன ஆச்சரியம்! என்னைச் சுற்றிப் பெருங் கும்பலே கூடியிருந்தது. எனக்கு ஆதாரமாய் நின்ற அழகுப் பாதங்களின் சொந்தக்காரி– ஆஹா, அந்த அழகரசி! 'மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே!' என்று மனத்துக்குள் பாடிக்கொண்டு என்னுடைய அழகான ஹிட்லர் மீசையில் ஒட்டியிருந்த மண்ணைத் தட்டி விட்டுக் கொண்டே கூட்டத்தை நோட்டம் விட்டேன்.

அவளை நிமிர்ந்து அண்ணலும் நோக்கினேன்; அவளும் நோக்கினாள்.

"அடடா, நீங்கள் நம் கல்லூரி லெக்ச்சரர் கபாலீஸ்வரன் அல்லவா? எங்கள் பி. ஏ. வகுப்பு கலைக்கழக விவாத அரங்கத்துக்குக்கூட வந்திருந்தீர்களே?"

"ஓஹோ, நீங்கள் காலேஜ் யூனியன் காரியதரிசி இல்லையா? பெயர்கூட.... வந்து.... ஊம்....அமர சுந்தரி....!"

"ஆம், ஆம்; அன்று உங்கள் பேச்சு அற்புதமாக அமைந்து விட்டது...!"

சம்பாஷணை திசை மாறியது.

அடடா, அங்கே போகும் கும்பலுடன் காமிராவும் கையுமாகப் போவது 'முச்சந்தி' நிருபர் சரடேசன் அல்லவா....?

காலை வந்து பற்றியவன்
கரதலத்தைப் பற்ற விழை
வாலைக் குமரி இவள்
வார்த்தையிலே கதை கேட்பீர்!

நடுத் தெருவில் காலை வந்து யாரோ பற்றியதும், பதறி விட்

கல்லூரி மாணவி ஒருத்தி; கல்லூரி ஆசிரியர் ஒருவர்; ஒரு செய்தி நிருபர்; காமிரா ஒன்று—இதுதான் கதை. வேடிக்கையான முடிவு....!

டேன்; அயர்ந்து விட்டேன்! பாவம், வாழைப் பழத்தோல் தடுக்கி விட்டதாம் – அதுவும், என் மதிப்பில் உயர்ந்து விட்ட, உள்ளம் கவர்ந்து விட்ட கபாலீஸ்வரனுக்கு! கூடி வேடிக்கை பார்க்கிருர்களே? அவருடைய மாணவர்களோ, என்னுடைய சிநேகிதிகளோ கண்டிருந்தால், என்ன அவமானம்! போதாக் குறைக்கு, அந்த 'முச்சந்தி'ப் பயல் ஒரு 'ஸ்னுப்' வேறு தட்டி விட்டானே? அவர் என் காலைப் பிடித்துக் கொண்டிருக்கும் புகைப்படம், நாளை தமிழ் நாடு பூராவும் விளம்பரம் ஆகிவிடுமே?.... என்ன வெட்கக்கேடு! அப்பா அம்மா பார்த்து விட்டால் என்ன நினைத்துக் கொள்வார்கள்? "கன்னியின் காலில் வாலிபன் விழுந்தான். நடுத்தெருவில் கூத்து!" என்று 'பொடி' வைத்து எழுதிவிடுமே 'முச்சந்தி' என்ன செய்வது? மிஸ்டர் கபாலியை அவர் வகுப்பிலாவது போய்ப் பார்க்க வேண்டும்.... 'ட்ரிக்னுமெட்ரி' வகுப்புதானே?

ஜார்ஜெட்டைத் தானுடுத்தி
ஜாலியாகச் சென்றவளும்,
தலைநிமிர்ந்து நடந்ததனுல்
தடாரென்று விழுந்தவனும்...!

"வெட்கக் கேடான இந்தப் போட்டோ 'முச்சந்தி'யில் வந்து விட்டதானுல், என்ன செய்வது? இது வராமல் இருக்க நீங்கள்தான் ஒரு யோசனை சொல்ல வேண்டும்!" – அமராவின் அழுகை.

"வந்தால் என்ன? மொத்தம் நாலாயிரம் பிரதிகள் போடுகிருன்; அத்தனையையும் விலைக்கு வாங்கிக் கொளுத்தித் தள்ளி விட்டால் போச்சு!" என்ருன் கபாலி.

"கொக்கை உங்களுக்குத் தெரியுமல்லவா?"

"ஏன், அதற்கென்ன இப்போது? இதைக் கேட்கத்தான் எனக்குப் போன் செய்தீர்களா? ஷர்பத் விருந்தும் இதற்குத் தானு, அமரா?"

"சற்றே பொறுங்கள்: தலையில் வெண்ணெயை வைத்துத்தான் கொக்கைப் பிடிப்பார்களாம்; அது போல இருக்கிறது, ஸார் உங்கள் யோசனை!"

"பின், நீதான் ஒன்று சொல்!"

துள்ளிக் குதித்தான் கபாலி.

"என்ன, ஐடியாவா?" என்று பறந்தாள், அமரா.

"ஐடியாவுமில்லை; மண்ணுமில்லை. நாற்காலியில் மூட்டைப் பூச்சி...." என்ருன் கபாலி.

அமராவின் அழகு முகம் தொங்கியது.

"மிஸ் அமரா, அந்தச் சம்பவம் நடந்து இரண்டு மணி நேரம்தான் ஆகிறது; கண்டிப்பாய் அந்த நிருபர் சரடேசன், போட்டோவை உருவாக்கியிருக்க முடியாது. அவனைப் பிடித்து, அந்தக் காமிராவையே அபேஸ் செய்து விட்டால்...!"

"அற்புதம்தான்! பிடிபட்டு விட்டால், 'காமிரா திருடிய காலேஜ் லெக்சரர்' என்று அதே 'முச்சந்தி' மற்ருெரு செய்தியையும் வெளியிட்டு விடும்....!"

"நான் எவ்வளவு சாதுரியமாய்ச் செய்து முடிக்கிறேன், பாரேன்....!"

"வழியில் மறுபடியும் வழுக்கி விழுந்து வைக்காதீர்கள்; நான் என் வீட்டுக்குப் போகிறேன்; ஒரே தலைவலி....!"

தமிழகத்தில் எங்கெங்கும்
தாவுகிற 'முச்சந்தி'க்கு
அமுதமெனச் சேதிகளை
அளிக்கின்ற நிருபர் குரல்!

அற்புதமான செய்தி கிடைத்து விட்டது, நாளையத் தலைப்புக்கு! போட்டோவை 'டெவலப்' செய்து வேறு அழகாக உபயோகித்துக் கொள்ளலாம்..!

இருந்தாலும் நான் முட்டாள்த் தனமாக ஒரு காரியம் செய்து விட்டேன். அந்தப் பெண்ணையும் பிள்ளையையும் பேர், ஊர் விசாரிக் காமல் வந்துவிட்டேனே! இப் போதுதான் என்ன, கற்பனை எங்கே போச்சு?

மயிலாப்பூர் ஞான குருநாதன் வேறு நேற்றே எதற்கோ வரச் சொன்னார்; அவரைப் பார்த்து விட்டு ஸ்டுடியோவுக்குப் போக லாம். ஞானகுரு நாதனைப் பற்றி யுந்தான் நாலு வார்த்தை நம் பேப்பரில் போட்டால் போகிறது; செய்திக்குச் செய்தியும் ஆகும்; நம் வேலையும் தீரும்...!

தலைவலிக்கும் கல்லூரித்
திரிகோணமிதி ஒழியத்
தலைவலியைச் சரணாக்கித்
திரும்பியவள் செயல் காண்போம்!

கை நிறையப் புத்தகங்களுட னும், மனம் நிறையச் சஞ்சலத் துடனும் வீட்டுக்குத் திரும்பினாள் அமரா. வழக்கமாக நண்பகலில் வீட்டிலிருக்காத அப்பாவின் குரலை வீட்டுக்குள்ளே கேட்டதும், அவ ளுக்குச் சப்த நாடியும் ஒடுங்கி விட்டது. 'ஏனம்மா இவ்வளவு சீக்கிரம்?' என்று கேட்டு விட் டால்....? ஆமாம், இருக்கவே இருக்கிறது தலைவலி....!

அறைக்குள் மெள்ள எட்டிப் பார்த்தாள் அமரா. அட, பாவி! அந்த 'முச்சந்தி' நிருபரல்லவா இங்கேயும் வந்திருக்கிறான்? பக் கத்தில் காமிராவும் இருக்கிறதா? சரிதான், பாழாய்ப் போச்சு! இப் போதைக்கு இந்தப் பக்கம் தலை யைக் காட்டவே கூடாது. மரியா தையாக மாடிக்குப் போய்விட வேண்டியதுதான்.... ஆமாம்!

அவர் – கபாலி எங்கோ விருப் பாய்ப் போனுரே, என்ன செய் கிருரோ? பாவம், நல்லவர்!

சிந்தனைச் சுழலிலே திக்கு முக் காடிக் கொண்டு மொட்டை மாடி யில், மூளையை உருக்கும் வெய்யி லில் உலாத்திக் கொண்டிருந்தாள் 'எக்ஸ் காலேஜ்' அமரா.

கபாலி, ஞானகுரு நாதனின் வீட்டுக்குள் நுழைந்தான். மெல் லச் சைகை காட்டினுள் அமரா. மேலே வந்தான் கபாலி.

மொட்டை மாடி; தனிமையான சூழ்நிலை; கன்னியும், காளையும். ஆனுல், வட்ட மதியைச் சுட்டிக் காட்டிக் காதல் பேச்சுப் பேச வில்லை அவர்கள். ஏனென்ருல், அங்கே வட்ட மதியில்லை; சுட்டுப் பொசுக்கும் சூரியன்தான் இருந் தது. மேலும், தலை போகிற அவ சரமாயிற்றே?

''இது உன் வீடா? ஞானகுரு நாதன் உன் அப்பாவா?''

''ஆம்; ஆம், நீங்கள் இங்கே எப்படி வந்தீர்கள்....?''

''அதுவா? ஒரு பெரிய கதை! காலேஜுக்குக் 'கட்' கொடுத்து விட்டுப் படை பதைக்கிற இந்த வெய்யிலில் சூரியனுக்குச் சரியாக அலைந்து திரிந்து கடைசியில் அந்த நிருபர் இங்கு வந்திருப்பதை அறிந்தேன். அந்தப் பயல் இருக் கிருனல்லவா? காமிரா இருக்கி றதா அவன் பக்கத்தில்?''

''ஆமாம், ஆமாம்.... எப்படி காமிராவை எடுக்கப் போகிறீர் கள்....?''

''எடுக்க இல்லை, உடைக்கப் போகிறேன்....!''

''ஆ....!''

''பாரேன்....!''

''ம்...!''

''என் தைரியத்தைச் சந்தேகிக் கிருயா?''

''இல்லை, இல்லை! ஓங்குக உங் கள் வீரம்!''

''நன்றி!''

கட்டை விரலிலொரு
காயமும் கொள்ளுவோம்,
காதற் பெண்ணெருத்தியின்
கடைக்கண் பணியிலே!

ஞானகுரு நாதனும் நிருபரும் பேசிக் கொண்டிருந்த அறைக்குள் நுழைந்தான் கபாலி. தன்னைத் தானே அறிமுகம் செய்து கொண் டான்: ''நான் எக்ஸ் காலேஜ் லெக்ச்சரர்.... எங்க 'அசோஸியே ஷன்'லே ஒரு மீட்டிங்: அதற்குத் தங்களைத் (ஞானகுரு நாதனைப் பார்த்து) தலைமை வகிக்கக் கூப் பிட்டு விட்டு நம்ம நிருபர் ஸாருக்கு அழைப்பளிக்க வேண்டுமென்று வந்தேன். இங்கே பாருங்க, பழம் நழுவிப் பாலில் விழுந்தாற் போல இரண்டு பேரும் சேர்ந்தாற் போலவே கிடைத்து விட்டீர்கள்!'' கபாலி, ஞானகுருநாதனுக்கும் நிருபர் சரடேசனுக்கும் உச்சியில் வைத்த பனிக்கட்டியின் கனம் இரு பது பவுண்டு இருக்கும். கையில் 'காமிரா'வை வைத்துக் கொண்டு விஷமம் செய்து கொண்டிருந்தான் கபாலி. ஏதோ சில நிமிஷ சிந் தனையிலிருந்து விடுபட்ட 'முச் சந்தி' நிருபர், ''ஸார், இத்தனை நாழி யோசித்தேன், தங்களை எங்கேயோ பார்த்திருக்கிருேமே யென்று. இன்று காலை உங்களை ரோடில்...'' என்று இழுத்தார்.

''இன்று காலை என்ன, தினமும்தான் ரோடு வழியாகப் போகிறேன்'' என்று அவசிய மில்லாமல் உரக்கக் கூறிக் கொண்டே, அருகிலிருந்த மேஜை யின் மேல் வைப்பது போலக் 'காமிரா'வைக் கீழே தட்டிவிடப் போனுன் கபாலி.

அப்போது—

காமிராவுடன் அந்தக் கனமான மேஜையும் விழ, அது விழுந்த இடத்தை, ஏற்கெனவே கபாலி யின் கால் கட்டை விரல் ஆக்கிர மித்துக் கொண்டிருக்க, ஏக அமர்க் களமாகப் போய்விட்டது.

உடைந்தது—மேஜையின் காலும், கபாலியின் கட்டை விரலும்தான்! காமிரா அல்ல....!

கூச்சலும் கலாட்டாவும் மேலிட, 'சட்'டென்று "என்னப்பா?" என்று உள்ளே ஓடி வந்து விட்டாள் அமரா.

முதலில் நிருபர் பார்த்தார், அமராவை; பிறகு நர்த்தனமாடும் கபாலியை; அதற்குப் பின்னர் இருவரையும் மாறி மாறிப் பார்க்கலானார்.

அமரா கபாலியைப் பார்த்தாள்; பதறினாள்; கபாலி அமராவைப் பார்த்தான், துடித்தான்.

இருவரையும் பார்த்தார் ஞானகுருநாதன். பிறகு சரடேசனைப் பார்த்தார்; சொன்னார்: "ஒரு சுப காரியமாக உங்களைக் கூப்பிட்டனுப்பினேன்...சகுனம் சரியாயில்லை....!"

"போய் வாருங்கள்," என்று அவர் சொல்லாமற் சொன்னதைச் சூட்சுமமாக உணர்ந்த நிருபர் கம்பி நீட்டினார்; போகிற போக்கில் காமிராவை மறந்துவிட்டார்!

கபாலியும் அமராவும் சிரித்த சிரிப்பின் அலைகள் ஓய்ந்து அமைதி பெறுவதற்குச் சரியாக நாலரை நிமிஷங்கள் பிடித்தன.

பிறகு—

காமிராவின் கண் திறந்தது. அந்த பிலிம் சுருள் காட்டிய காட்சியைப் பார்த்தார்கள் காதலர்கள். அந்த நிருபர் எடுத்த படத்தில் விழுந்திருந்தது அமராவும், கபாலியும் அல்ல! அருகே ஓடிக் கொண்டிருந்த ஒரு சிவப்பு ரிக்‌ஷாவும், பக்கத்துப் பெரிய வெற்றிலை பாக்குக் கடையும், சாரி சாரியாகச் செல்லும் சைக்கிள்களும்தான்!

"பூ, இவ்வளவு தானா, அவன் போட்டோத் திறமை?........இதற்காகவா இவ்வளவு பயந்தோம்? மன்மதனே, நீ வாழி! உன் கருணையே கருணை!..." ★

நான் விரும்பும் எழுத்தாளர்

க. நா. சுப்ரமண்யம்

கருத்து : 'திலகன்'
மதுரை.

'சாத்தனூர் சர்வமானிய அக்ரஹாரத்திலே....!'

இந்தச் சாத்தனூர் எங்கேயிருக்கிறது? தஞ்சை ஜில்லாவிலுள்ள நூற்றுக் கணக்கான சாத்தனூர்களிலே இது எது? எதுவானால் நமக்கென்ன? நாம் காணும் சாத்தனூர் க. நா. சு. அவர்களின் கற்பனை உலகிலே தோன்றிய சாத்தனூர். ஒரு காலத்தில், மேட்டுத் தெருவில் குயவனின் சக்கரத்தில் பானைகள் உருவெடுப்பதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த சோமுப் பயல், சோமு முதலியார் ஆகி, ஆடாத ஆட்டமெல்லாம் ஆடி, கடைசியில் சாலையோர மரத்தடியில் சோமுப் பண்டாரமாகச் செத்துக் கிடந்த சோகக் கதையை நாம் அறிவோம். இன்னும், தம் சொத்துக்களை யெல்லாம் துறந்து, காவிரிக் கரையோரத்தில் ஆசிரமம் அமைத்துக் கொண்டு வாழ்ந்த சாம்பமூர்த்திராயர், சாமா—அவன் பசி; தெருவில் புதிதாகக் குடியேறிய அந்தக் குடும்பம்; கமலா—அவள் 'ஒரு மாதிரி'; அவளை மணந்து திருத்தத் துடிக்கும் சிவராமன்—இவர்களைப் பற்றியே சிந்தனைவலை பின்னும் ஆசிரியர் இவர். கதையின் சம்பாஷணைகள், பாத்திரங்கள்—எதையுமே, யாரையுமே மறக்க முடியாது.

மீண்டும் சாத்தனூர் சர்வமானிய அக்ரஹாரத்திலே மேஜர் மூர்த்தி! அவன் வாழ்க்கையிலே 'ஒரு நாள்'. பர்மாப் போர் முனையிலும், நாஸிப் போர் முனையிலும், பாரிஸ் நகரத்தின் கோலாகலத்திலும் காணாத உண்மையை—குடும்பம், பூரண வாழ்க்கை என்ற தத்துவங்களை—அந்தப் பட்டிக்காட்டில், அந்த ஒரு நாளில் அவன் கண்டு உணருகிறான். வாழ்க்கையின் ஒரு சிறு துளியை அல்ல, அதன் சிக்கல்கள், சுழற்சிகள், போராட்டங்கள், சிறுமை பெருமை எல்லாவற்றோடும் அதன் முழு உருவத்தையே படம் பிடித்துக் காட்டுகிறார் க. நா. சு. மேஜர் மூர்த்தியை என்ன—படிக்கின்ற நம்மையும் தான்—அப்படியே சிந்தனைப் பிண்டமாக்குகின்றது 'ஒரு நாள்!'.

நாள் தோறும் எத்தனையோ கதைகள் படிக்கிறோம் நாம். எல்லாமே மனத்தில் நின்று விடுகின்றனவா? மனத்தைப் பற்றிக் கொண்டு, விழ மறுக்கும் சக்தி பெற்றிருக்கின்றனவா? ஆனால் க. நா. சு. வின் எழுத்துக்களுக்கு அந்தச் சக்திகள் யிருக்கின்றன. காரணம், அவர் சிருஷ்டிக்கும் பாத்திரங்களை எங்கேயோ பார்த்ததுபோல், அவர்களுடன் அளவளாவிப் பேசிப் பழகியது போல் ஒரு பிரமை ஏற்படுகிறது. சிதம்பரத்திலிருந்து, கும்பகோணம் வருவதற்குள் ரயிலில் சந்திக்கும் பிரகிருதிகளை—நடைச் சித்திரங்களை—யாரும் மறக்கமாட்டார்கள்.

பொழுது போக்குக்காகப் படித்து விட்டு மறந்து விடும் கதை

கள் அல்ல அவருடையவை; வாழ்க்கையோடு ஓடிக்கொண்டிருக்கிற நம்மைப் பிடித்து நிறுத்தி, தனியே நின்று சிந்தனை செய்யத் தூண்டுபவை. முடிவை—அவருடைய சிந்தனையின் முடிவை—அவர் நம்மீது திணிப்பதில்லை. நம்மையே ஒரு முடிவுக்கு வரும்படி அவர் விட்டு விடுகிறார். ஆகையால், நாம் சிந்திக்கிறோம்; சிந்திக்கிறோம்; சிந்தித்துக்கொண்டே யிருக்கிறோம்.

ரா. பி. சேதுப் பிள்ளை

கருத்து: **டி. ஆர். சுவாமிநாதன்**

சென்னை—1.

இராமாயணக் காதையிலே, அனுமனை சொல்லின் செல்வன் என்பர். அது போன்று, இவர் மேடையிலேறிப் பேசத் தொடங்கினால், தமிழ் மழை பொழியத் தொடங்கும் — ஆம்; பேராசிரியர் திரு ரா. பி. சேதுப் பிள்ளையின் பேச்சிலேதான்! இவரது எழுத்தில் தமிழ் மணம் கமழும். பேராசிரியர் அவர்கள் சென்னைப் பல்கலைக் கழகத்திலே தமிழ்ப் பகுதிக்குத் தலைவராயிருந்து தொண்டாற்றி வருபவர். 'கல்வி சிறந்த தமிழ் நாடு' தழைக்க இனிய இலக்கியக் கட்டுரைகளின் மூலம் மாணவர்கள் உள்ளத்தைத் தமிழ்மயமாக்கி வருபவர் இவர். தனக்கெனவே தனிமையான தமிழ் நடையை ஏற்படுத்திக் கொண்டு அதன் மூலம் பற்பல கருத்துக்களைக் கட்டுரைகளின் வாயிலாக எழுதி வருகிறார். இவர் எழுதிய 'சரம கவிராயர்' என்ற சிறு கதை எனக்குப் பிடித்தது. 'சரம கவிராயர்' நகைச் சுவை தோன்ற அசட்டுத் திருப்பதிகம் பாடிய வரலாற்றை அறிவிக்கிறார்.

இயற் கவிஞர்கள் மூவரைப் பற்றி 'முப்பெருங் கவிஞர்' என்ற கட்டுரை மூலம் நன்கு விளக்குகிறார். இப்படி இவரது ஒவ்வொரு கட்டுரைத் தொடரும் சிறந்த செய்திகளை ஊட்டும்; சிறந்த செயல்களைச் செய்யத் தூண்டும்.

திரு பிள்ளை தமிழ் வள்ளல். தான் எழுதிய 'தமிழ் இன்பம்' நூலுக்குக் கிடைத்த பரிசு ரூபாய் ஐயாயிரத்துடன் இன்னும் அதே அளவு தொகை சேர்த்து, தமிழ் வளர்ச்சிக்குப் பரிசு கொடுத்த செயல் அற்புதமானது. அண்மையில் நடந்த சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டு விழாவிலே இவரை 'டாக்டர்' ஆக்கினார்கள்.

அரு. இராமநாதன்

கருத்து: **மா. வரதராஜன்**

விஜயபுரம்.

'காதல்' காரியாலயத்திற்கு ஆரம்ப எழுத்தாளர்களிடமிருந்து ஏராளமான கதைகளும் கட்டுரைகளும் வந்து குவியும். அத்தனை கதைகளையும் கட்டுரைகளையும் பொறுமையுடன் திரு அரு. இராமநாதன் படிப்பார். கதையிலோ கட்டுரையிலோ கருத்து இருந்தால் அதைத் தனியே எடுத்து வைப்பார்; 'எடிட்' செய்து பிரசுரிப்பார். எழுதியவரே ஆச்சரியப்படும்படி அத்தனை சித்திர விளக்கங்களுடன் தேன் சொட்டும் நடையில் பிரசுரமாகியிருக்கும். ஆரம்ப எழுத்தாளர்களை ஊக்குவித்து முன்னுக்குக் கொண்டு வருவதில் மிக்க ஆர்வம் உள்ளவர். என் உள்ளத்தின் மூலையில் எங்கோ சுடர் விட்ட இலக்கிய ஆர்வம் எனும் விளக்கை அணையாமல் தூண்டிவிட்டு எண்ணெய் வார்த்தவர் இவரேயாவார். அவருக்கு நான் மிகவும் கடமைப் பட்டவன்.

காதலைப் பற்றி எழுதும் போது வாசகர்கள் சொக்கி மயங்கும்படி பேனாவைத் தேனில்தொட்டு எழுதுவார். அதே போல் சமுதாயத்தின் சீர்கேடுகளைத் தாக்கி எழுதும்

1717999

போது பேனவைத் திராவகத்தில் தோய்க்கவும் தயங்குவதில்லை.

குதிரைப் பந்தயத்தை நிலைக் களனக அமைத்து இவர் எழுதிய சம்பாஷணைச் சித்திரத்தை என்னல் மறக்கவே முடியாது. ஏன், சீட்டுக் கட்டுகள்கூட இவரிடம் பேசியதை நான் காது கொடுத்துக் கேட்டிருக்கிறேன்.

இராமநாதன் ஒரு முன்னணி நாடகாசிரியர். 'இராஜ ராஜ சோழன்' தமிழன்னைக்கு ஓர் அற்புதப் படையலாகும்.

'காருவகி', 'அசோகன் காதலி' போன்றவற்றினையும் ரேடியோ ஒலி பரப்பியது.

பிரேமா பிரசுரத்தின் மூலமாகத் துப்பறியும் நவீனங்களைத் தொடர்ந்து வெளியிடுவது ஒரு புறம் இருக்க, பெரியார்களின் பொன் மொழிகளைத் தொகுத்து வெளியிட அதற்கென வரிசை ஒன்றையும் ஆக்கி யிருக்கிருர்; சிந்தனையாளர் வரிசையில் இவர் பிளேட்டோவை தமிழகத்துக்கு அறிமுகப் படுத்தினர். 'கோழிப் பந்தயம்' என்ற கதையை அந்த நாளில் 'கல்கி'யில் படித்தேன். இன்றும் படித்தேன். இடையே எத்தனையோ வருஷங்கள் தேய்ந்து விட்டன. மேற்படி கதையின் அழகு என் மனத்திலிருந்து தேய வில்லை. அந்தப் பட்டிக் காட்டு 'மருதி' ஒரு நல்ல குணச் சித்திரம்.

இராமநாதன் ஒரு நல்ல கவிஞர். ஆச்சரியப் படுகின்றீர்களா? உண்மை. நான் எழுதும் கவிதைகளை அவரிடம் கொடுத்து அபிப்பிராயம் கேட்டால், அங்கொரு வார்த்தை இங்கொரு வார்த்தையை எடுத்து விட்டு, அவர் போடும் வார்த்தைகள் என் கவிதைக்கு நல்ல மெருகு கொடுக்கும்.

'விந்தன்'

கருத்து: **செந்தில்வேலன்,**
திருநெல்வேலி.

'இலக்கியங்கள் மலியும் காலம் விரைவில் வந்துகொண்டிருக்கிறது' என்று யாராவது பத்துப் பதினைந்து ஆண்டுகட்கு முன்பு சொல்லியிருந்தால், அவரை நான் தீர்க்க தரிசி என அழைப்பேன். ஏனெனில் அவரது கனவு இன்று வெறுங் கனவாகி விடுவதற்குப் பதிலாக, நனவாகிவிட்டது. வாழ்க அக் கனவு!

''காதல் செய்யாதே!'' என்று துணிந்துசொல்லக்கூடிய எழுத்தாளர் ஒருவர் உண்டென்ருல், அவர் தான் திரு விந்தன். இந்தக் குரல் மட்டும் லைலா-மஜ்னு...அனர்கலி–சலீம்....அம்பிகாபதி–அமராவதி.... இவர்கள் செவிகளில் ஒலித்து விட்டதென்ருல், செத்துப்போன அவர்கள் எல்லாரும் மறு பிறவி எடுத்து இவரைத் தாக்கப் படை திரட்டி வந்து விடுவார்கள்.

'பாலும் பாவை'யும் என்ற அற்புதமான நாவலை மட்டுமல்ல; சிறந்த சிறுகதைகளையும் படைத்துள்ளார். நினைவரங்கத்தில் என்றும் நின்று நிலவிச் சிரித்துக் கொண்டிருக்கும், முல்லைக் கொடியாளையும், சோலையப்பனையும், பத்தினித் தெய்வத்தையும், சமுதாய விரோதியையும் தந்தவர் இந்த வசனகர்த்தா.

இன்று மக்கள் மன்றத்தில் 'விந்தன்' எவ்வளவோ தூரம் விளம்பரமாகியிருக்கிருர். விந்தன் கதைகளைப் படித்தால், தம் மனம் என்னென்ன துயரங்களை அனுபவிக்க நேரிடுமோ என்று கல்கி அவர்களே பயப்பட்டாராம்; தம் முன்னுரையில் சொல்லியிருக்கிருர்.

இவரது பெரும்பாலான படைப்புக்களில் புதுமை கூத்தாடுகிறது; உண்மை ஒளி வீசுகிறது; அதிசய தத்துவம் புன்னகை சிந்துகிறது; அவர் வகுத்துக்கொண்ட பாதை தனி. பேனு மன்னர் கல்கி, மு. வ., கி. சந்திரசேகரன் போன்றவர்களின் பாராட்டைப் பெற்றவர் விந்தன், கல்கியின் 'ஆசிரம'த்தில் இருந்தவரல்லவா! ★

அத்தியாயம் — 11

பசிக் கோபமா?

விரல் சொடுக்கும் நேரம்போல் காலம் பறந்து விட்டது. அழகம்மை இறந்து அன்றைக்கு ஒரு வருஷம் ஆகி விட்டது. மாசித்தெரு மகாலிங்கப் பட்டர், திதி வாங்கிய அரிசி, பருப்பு, காய்கறி முதலிய சாமான்களைத் தூக்க மாட்டாமல் தூக்கிக் கொண்டு உச்சி வெயில் நேரத்திலே வடக்கு மாசித் தெருவிலிருந்து தெற்குமாசித் தெருவுக்கு நடந்து கொண்டிருந்தார்.

''யாரையா அங்கனே போகுது? பட்டரய்யாதானே?''

தலையிலிருந்த மூட்டை கழுத்தை அழுத்த, இக்குரலைக் கேட்டதும் திரும்பிப் பார்த்தார் பட்டர்.

''ஓ! சங்கரலிங்கம் பிள்ளைவாளா!'' — தெருத் திண்ணையில் அமர்ந்திருந்த நாற்பது வயது மதிக்கத்தக்க ஒருவரை நோக்கி மகாலிங்கப் பட்டர் இவ்வாறு கேட்டார்.

''என்னே ஐயா? மூட்டை முடிச்செல்லாம் பலாயிருக்குதே? எவுக வீட்டிலே ஐயா திதி?''

''நம்ப 'கு'ஞ விலாசம் பிள்ளைவாள் வீட்டிலேதான். அவாள் சம்சாரம் போய், இன்னிக்கு வருஷத் திதியாச்சே!''

''சதிதான்; அப்பொம் ஒங்களுக்கு நல்ல தட்டாய்த்தான் இருக்கும். ஏன் பட்டரையா, சதிதானே?''

''ஆமாம்; என்ன இருந்தாலும் பெரிய எடமில்லையா? அதுக்குத் தக்கனே அந்தஸ்தாய் திதி கொடுப்பாளோல்லியோ?''

''ஒயா பட்டரையா, சொமையைத் தலையிலே வச்சுக்கிட்டே பேசிக்கிட்டு நிக்குதேளே? இங்கனே வந்து இரிங்கையா; ஒரு விசயம் கேக்கட்டும்.''

''இல்லே சங்கரலிங்கம் பிள்ளைவாள். இன்னொரு சமயம் வரேன். இப்போ பொழுதில்லை.''

''அட இரிக்கட்டும் ஐயா, ரொம்பத்தான் கொம்பிலே ஏறிக்கிடு

தேளே? வாங்க ஐயா, கேக்கட்டும்.''

மகாலிங்கப் பட்டர் அரை மனசோடு சங்கரலிங்கம் பிள்ளையின் வீட்டுத் திண்ணைக்கு நடந்தார். தலையிலிருந்த மூட்டையைத் திண்ணையில் இறக்கி வைத்துவிட்டு, ''ஸ்...அப்பாடா!'' என்று மேல்த்துண்டை எடுத்து முகத்தில் வேர்வையைத் துடைத்துக்கொண்டார். பிறகு திண்ணைக் குறட்டில் ஏறி உட்கார்ந்து கொண்டு, ''என்ன வெய்யில்! என்ன வெய்யில்! மார்கழி-தை மாசத்துப் பனி வெய்யிலே இந்தப் போடு போடறதே; இந்த வருஷம் கோடை கடுமையாயிருக்கும்னு தோண்றது?'' என்று பேச்சை ஆரம்பித்தார்.

''ஆமா ஐயா; எல்லாம் ஒங்க காட்டிலேதானே வெய்யில் அடிச்சாலும் அடிக்குது; மழை பேஞ்சாலும் பெய்யுது.''

''அதென்ன அப்படிச் சொல்லிட்டேள் பிள்ளைவாள்? ஒங்க காட்டுக்கு மாத்தரம் என்ன கொறஞ்சு போச்சாம்?''

''இதை ஏன் கேக்குறீங்க ஐயா; வவுத்தெரிச்சலின்னு வவுத்தெரிச்சல். புலியூர் 'பத்தி'லே (புறவில்) நெல்லுப் பயிரு நோயடிச்சு, கால் 'மேனி'க்கே லாட்டிரி ஆயிடிச்சு. அது போகுதுன்னு, நம்ம எலஞ்சித் தோட்டத்திலே....அட! ஒங்களை ஒக்காத்தி வச்சு ஏன் கதையைப் பேசிக்கிட்டிருக்கேனே? பட்டரையா! கொஞ்சம் போலே மோருத் தண்ணி-கிண்ணி குடிக்கேகளா?''

''அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம் பிள்ளைவாள்; சாப்படற நேரமாய்ப் போச்சில்லே?''

''சரி, அப்பொம் வெத்தலையாவது போட்டுககிடுங்க. ஏளா, ஏ சம்பகம்! அந்தச் 'செல்ல'த்தை இங்கனே எடுத்தாளா.''

''வேண்டாம் பிள்ளைவாள்; ஒங்ககிட்டே பொகயிலை இருக்காது.''

''இரிக்குது ஐயா; நல்ல அங்குவிலாஸ் பாளையே வாங்கி வச்சிருக்கேன்.''

இச்சமயம் சங்கரலிங்கம் பிள்ளையின் மனைவி வெற்றிலைச் செல்லத்தோடு வந்தாள். ''பட்டரையாவா, வாங்க. கொக்கர் கொளத்தா வீட்டுத் திதிக்கு வந்துட்டுப் போறீக போலிருக்குது. வூட்டிலே புள்ளை குட்டியெல்லாம் சொகந்தானே?'' என்று குசலம் விசாரித்து விட்டு உள்ளே திரும்பிய அவள், எதையோ நினைத்துக் கொண்டு திரும்பி வந்து, தன் கணவரிடம், ''இந்த நேரத்திலே நீங்களும் 'சருகு மொளக்கிக்' கிட்டு (வெற்றிலை போட்டுக் கொண்டு) ஒக்காந்திடாதீங்க. சோறு ஆயிக்கிட்டிருக்குது; சாப்பிடணும்,'' என்று உத்தரவு இட்டு விட்டுச் சென்றாள்.

அவள் உள்ளே சென்ற பிறகு இவர்கள் சாம்பாஷணை தொடர்ந்தது. வெற்றிலைச் செல்லத்தைத் திறந்து கொண்டே மகாலிங்கப் பட்டர், ''ஏது, பிள்ளைவாள், நீங்க கூடவா பொகயிலை போட ஆரம்பிச்சுட்டேள்?'' என்று ஆச்சரியப்பட்டார்.

''நான் போடறதில்லே; நம்ம பாவூர் மாமா இருக்காகள்ளே; அவுகதான் மூக்கையாப்பிள்ளை.... என்னையா முளிக்கிறீக?... நம்ம மேலப் பாவூர் பண்ணையாரைத் தெரியாது ஒங்களுக்கு?''

''ம்....ம்....புரிஞ்சுது; சொல்லுங்கோ.''

''அவுக நேத்து இங்கனே ஒரு சோலியா வந்திருந்தாக. அவுகளுக்குத்தான் வெத்தலை, பொகயிலை இல்லாம ஒரு 'நிமிட்' தள்ள முடியாதே! அவுகளுக்காக வாங்கியாரச் சொன்னேன்.''

''ஏன் பிள்ளைவாள், நம்ப பாவூர்ப் பண்ணையார் மகனுக்குக் கல்யாணம் ஆயிடுத்தோ?''

''இல்லே; அதுக்காகத்தான் மேலத்தெரு பட்டாபிராம பிள்ளை

வாள் மகளைப் பேசலாமின்னு வந்திருந்தாக.''

''என்ன ஆச்சு; முடிஞ்சு போச்சோ, இல்லியோ?''

''ஆங்.... ஒண்ணும் தெகஞ்சுக்கிடலே. அவுக அந்தஸ்தென்ன? இருப்பென்ன? பட்டாபிராம பிள்ளைவாள் வீட்டுச் சம்பந்தம் அவுகளுக்கு ஒத்துக்கிடுமா?''

''அப்புறம்?''

''வேறே நல்ல எடம் வந்தாச் சொல்லுங்கன்னு சொல்லிட்டுப் போயிட்டாக. அதுக்குத்தான் ஒங்களைக் கூப்பிட்டேன். ஒங்களுக்குத்தான் தென்காசி வெள்ளாளமார் வீட்டிலெல்லாம் பளக்கமாச்சுதே; நல்ல எடமாப் பொண்ணு தட்டுப்பட்டா ஒரு வார்த்தை சொல்ல மறந்திடாதீக.''

''அதுக்கென்ன? கரும்பு தின்னக் கூலியா வேணும்? நாலு கல்யாணத்தை முடிச்சு வச்சாத்தானே நான் காத்தாடாம இருக்கமுடியும்? என்ன சொல்றேள் பிள்ளைவாள், அப்பிடித்தானே? ம்.... பாத்தேளா, கல்யாணம்னதும் ஞாபகம் வரது. நம்ப 'கு'னு விலாசம் பிள்ளைவாள் வீட்டிலேகூட இந்தச் சித்திரைலே கல்யாணம் நடக்கணம்; ஆனு....?''

''அதென்ன 'ஆனு' போடறீங்க, பட்டர்வாள்? அது நடக்க வேண்டியதுதானே? ஒண்ணுக்குள்ளே ஒண்ணு. பொண்ணு பெரிய மனுசியாயும் ஒரு வருசத்துக்கு மேலே ஆகுது. நடக்க வேண்டியதுதானே? அவுக அளகு அத்தெ மாத்திரம் மண்டையைப் போட்டிருக்காட்டி, போன வருசமே முடிஞ்சு போயிருக்காதா நெல்லையப்பன் கல்யாணம்?''

''அப்படியில்லே புள்ளைவாள். அதிலே என்னவோ கொஞ்சம் கச–முசா இருக்கும் போலே இருக்கு. நான் வந்து அந்த அம்மா இல்லே, அவதான் குத்தாலிங்கம் பிள்ளை தங்கச்சி, அவகிட்டே மொள்ளமாப் பேச்சை விட்டேன். 'ஆயுடுத்து; ஒங்க மதனி போயி, வருஷத் திதியும் முடிஞ்சு போச்சு. இனிமே கல்யாண ஏற்பாடுகளைத் தொடங்க வேண்டியதுதான். இப்போ நீங்கதானே வீட்டுக்குப் பெரியவ. ஒங்க தலையிலேதான் எல்லாப் பாரமும் விழுந்திருக்கு'ன்னேன். ஒடனே அந்த அம்மா என்னெ ஒரு முழி முழிச்சுப் பார்த்தா பாருங்க; நான் அப்படியே தெகெச்சுப் போயிட்டேன். 'சாமி! திதி வாங்கிட்டீகல்லே? சோலியைப் பார்த்துக்கிட்டு மூட்டையைக் கட்டுங்க. வூட்டிலே கல்யாணம் வச்சாச் சொல்லி விடுதேன்'னு, சடசடன்னு பொரிஞ்சு தள்ளிட்டா, பொரிஞ்சு. ஏன் பிள்ளைவாள், ஒங்களுக்கு ஏதாவது தெரியுமா? அது ஏன் அந்த அம்மா கல்யாணப் பேச்சை எடுத்ததும் இப்படிக் கோபப் பட்டுண்டா?''

''அட, நீங்க ஒரண்டை! திதி வீடு; விடியாமேயிருந்து காப்பித் தண்ணிகூட ஊத்திக்கிடாம இருந்திருப்பாக கோமதியாச்சி; பசிக் கோபமாயிருக்கும்!''

''இல்லே பிள்ளைவாள்; எனக்கென்னமோ சந்தேகமாத்தான் இருக்கு.''

''ஒங்களுக்கு என்ன பைத்தியமா, பட்டர்வாள்? பொறந்தது முதலே அதுகளுக்கு முடிச்சுப் போட்டுத்தானே வச்சிருக்குது. மொறமை வேறே இருக்குது. எல்லாத்துக்கும் மேலே, கோமதியாச்சிக்கு என்ன கொட்டியா வச்சிருக்குது, மகளை வேறே எடத்திலே கட்டிக் கொடுக்க?''

''ஆமா, அதுக்கு ஏன் அந்த அம்மா 'வள்'ன்னு விழணும்.., நான் என்னவோ ஆகாத விஷயத்தைப் பேசிப்பிட்டாப்பிலே?''

''அதுதான் சொன்னேனே பட்டர்வாள், பசிக் கோவமா இருக்கும்ன்னு.''

''நன்னாத்தான் வந்துது பசிக் கோபம், போங்க.''

''ஆமாம் பட்டர்வாள்; நீங்க கேட்டதில்லையா, பசி வந்திடப் பத்தும் பறந்து போமின்னு...!''

சங்கரலிங்கம் பிள்ளை இப்படிச் சொல்லிக்கொண்டிருந்தபோது, வீட்டிற்குள்ளேயிருந்து அவர் மனைவியின் குரல் வந்தது: ''ஒங்களைத்தான்! வாரீங்களா? வட்டிலிலே சோறு வச்சிருக்கேனே!''

''போங்க பிள்ளைவாள். போய்ச் சாப்பிடுங்கோ. ஒங்களுக்கு வேறே பசிக்கோபம் வந்துடாம. நான் வரேன் அப்போ. பாவூர்ப் பிள்ளைவாள் சம்பந்த விஷயமா, ஏதேம் கண்ணுலே பட்டா தகவல் கொடுக்கிறேன்,'' என்று கூறிவிட்டு, மூட்டையை எடுத்துத் தலையில் வைத்துக்கொண்டு நடையைக் கட்டினார் மகாலிங்கப் பட்டர்.

அத்தியாயம் – 12

புயலா ? தென்றலா ?

வாழ்க்கைப் பூங்காவில் மலர்ச்செடி ஒன்று பூத்தது. பூத்த மலர் புன்னகையைச் சிந்திற்று. தன் அழகை விரித்து அனைவரையும் ஆகர்ஷித்தது. மணத்தைப் பரப்பி யாவர் மனத்தையும் மயக்கிற்று. மொக்காயிருந்த வரையில் அதன் மேன்மையை எவரும் உணரவில்லை. செடிக்கு உரியவன் கூட அதைச் சிந்தவில்லை. ஆனால் ஒன்றை மாத்திரம் அவன் மறந்து விடவில்லை. செடி அரும்பு கட்டியதுமே, அந்த அரும்பு கூம்பிப் பருத்து வருவதைக் கண்டதுமே, இது விரைவில் மலரப் போகிறது; மலர்ந்து நமக்கே உரித்தாகப் போகிறது என்

பது மாத்திரம் அவனது நினைவிலிருந்து நழுவிவிடவில்லை.

இடையே, அவனுடைய பூங்காவுக்கு நிழலளித்து வந்த பெரிய வாகை மரம் ஒன்று — காலத்தைக் கண்டு, காய்த்து, உலர்ந்துவிட்ட அரைக் கிழட்டு விருட்சம் ஒன்று — தலை சாய்ந்து விட்டது. அந்த விருட்சம் பூங்காவுக்குப் பயனற்றதுதான். அது, இனிப் பூத்துக் காய்த்துப் பழுக்காத மொட்டை மரமாக நின்றதுதான். இருந்தாலும், அதன் நிழலிலேதான் தன் வாழ்க்கைப் பூங்கா இதுகாறும் வளர்ந்ததை அவன் மறந்துவிடவில்லை. ஆகவே அதனை இழந்த துயரம் அவனை வேகமாகத் தாக்கிற்று. அந்தத் துயரத் தாக்குதலிலே அவன் மாய்ந்து மருகித் தேய்ந்து திரிந்து போயிருப்பான் — அதே சமயம் அதனருகில், அதன் நிழலிலே வளர்ந்து வந்த அந்த மலர்ச் செடி மாத்திரம் பூத்துப் புன்னகைத்திராவிட்டால். ஆம், அந்த மலரின் பூப்பிலே, அதன் இதழ் விரிந்த இளநகைப்பிலே, அந்த இளநகைப்பு ஊட்டிய இன்பத்திலே, அவனுடைய துன்பம் கொஞ்சம் கொஞ்சமாகக் கரைந்து விட்டது. அழகை அள்ளிவீசி, நறுமணத்தை அவன் நாசி வழியே நெஞ்சில் பாய்ச்சி, அங்கே தங்கியிருந்த துயர நினைவை விரட்டி, இன்ப ஊற்றுப் பெருகச் செய்து விட்டது அந்த மாயமலர்!

* * *

குத்தாலிங்கம் பிள்ளை வீட்டில் அன்று திதி முடிந்து சாப்பாட்டுக்கு இலை போட்டபோது பனிரெண்டு மணி ஆகிவிட்டது. உள்ளூர்த் தாயாதிகளும், மேலத்தெருச் செல்லம் பிள்ளை போன்ற சில தெரிந்த மனிதர்களும் அன்று சாப்பாட்டுக்கு அழைக்கப்பட்டிருந்தனர். கோமதி யாச்சி ஆகிவிட்ட கோமதிக்கும், 'பெரிய மனுசி' ஆகிவிட்ட அந்தப் பூத்த மலர் காந்திமதிக்கும் அன்று சரியான வேலை. எல்லாம் முடிந்து, வந்தவர்கள் விடைபெற்றுச் சென்ற பிறகு, நெல்லையப்பன் மாடிக்கு வந்து 'அப்பாடா' என்று படுத்துக் கொண்டான். அவன் மனசு அன்று கலக்கத்துக்கு உள்ளாகி



யிருந்தது. தன்னைப் பெற்றுச் சீராட்டிய மகராசியின் மறைவு ஊட்டிய கலக்கந்தான் அது. பத்தொன்பது வயது ஆவதற்குள்ளே தந்தையை இழந்தான். இருபத்தைந்து எட்டுவதற்குள்ளே தாயும் போய் விட்டாள். உலகில் ஒருவரும் நிலையானவர்கள் இல்லை; எல்லோரும் போக வேண்டியவர்கள்தான். ஆனால், தன் பெற்றோர் அனுபவிக்க வேண்டியவற்றை முழுவதும் அநுபவியாமல், அரைகுறையாக அநுபவித்துச் சென்றுவிட்டதாகவே அவனுக்குத் தோன்றிற்று. எப்பொழுதோ நடந்த அத்தை கோமதியின் கல்யாணத்தைத் தவிர்த்து, அவர்கள் தங்கள் வீட்டில் நடத்திக் களித்த விசேஷங்கள்தான் என்ன? மணி—மணியாக இரண்டு மகன்கள் இருக்கிறோம்; எங்களுக்குக் கல்யாணம் – கார்த்திகை நடத்திப் பார்த்த பிறகுதான் கண்மூட வேண்டும் என்ற ஆவல் அவர்களுக்கு இருந்திராதா? அதிலும் தலைப்பிள்ளையான தனக்கு உரியவள் தயாராகி வந்த தருணத்தில், தாய் போய்விட்டதை நினைத்த போது அவன் நெஞ்சை வேதனை பிடுங்கித் தின்றது. இனி என்ன? அவனேதான், தன் கல்யாணம் – கார்த்திகையை நடத்திக் களிக்கவேண்டும். யார் அவற்றைக் கண்டு உச்சி குளிர்ந்து, உள்ளம் கனிந்து, ஆசி வழங்கி ஆனந்தக் கண்ணீர் விடுவார்களோ, அவர்கள் அமரர்கள் ஆகி விட்டனர். இந்தப் போக்கிரிப் பெண் காந்திதான், "இதோ மலர்ந்தேன்! இதோ மலர்ந்தேன்!" என்று நான்கு வருஷங்களாகப் பயமுறுத்திக் கொண்டிருந்தாளே, இவள், அம்மை சாவதற்குள் மலர்ந்து தொலைத்திருக்கக் கூடாதா? பெற்றவள் ஆசியைப் பெறும் பேருவது எங்கள் திருமணத்துக்குக் கிட்டியிருக்குமே....!

அன்று திதி சாப்பிட வந்திருந்த தாயாதியர், பேச்சோடு பேச்சாக, "ஆங்....அவுக தலைத் திதியும் ஆயிடிச்சு. இனிமேயாவது ஆறப் போடாம, நம்ம வீட்டிலே நாக்கால் (கல்யாணத்தை முன்னிட்டுப் பந்தலுக்கு நல்ல வேளை பார்த்து நடப்படும் முதல்காலுக்கு நாக்கால் என்று வழங்குவார்கள்) நட்டுப் பாத்துடணும், நெல்லையப்பா" என்று தனது திருமண நினைவை எழுப்பி விட்டபோது, நெல்லையப்பனின் மனத்தில் இம்மாதிரி இன்பமும் துன்பமும் கலந்த எண்ணங்கள் கோர்த்துக் கொண்டு எழுந்தன. ஆமாம், இனி அவன்தானே வீட்டுக்குப் பெரியவன்; அவன்தானே இம்மாதிரி விசேஷங்களை—அது தனக்கானது ஆனாலும், பிறருக்கானது ஆனாலும் – முன்னின்று ஏற்பாடு செய்து நடத்தியாக வேண்டும்!

கீழே திருமலைக்கு மூட்டை முடிச்சு கட்டிக்கொடுத்துக்கொண்டிருந்தனர், கோமதியாச்சியும் காந்திமதியும். அவனை அவ்வருஷந்தான் திருநெல்வேலியில் கல்லூரியில் சேர்த்து வந்திருந்தான் நெல்லையப்பன். தனக்குத்தான் படிக்க ஆசையிருந்தும் வசதியில்லாது, குடும்பபாரம் இந்த இளவயதிலேயே தலைமீது சுமந்துவிட்டது; தம்பியாவது பெரிய படிப்புகள் படிக்கட்டும் என்று அவனை இந்த ஏற்பாட்டைச் செய்திருந்தான்.

திருமலை இரண்டு நாள் லீவு எடுத்துக்கொண்டு தாயின் திதிக்காகத் தென்காசிக்கு வந்திருந்தவன், திதி முடிந்ததும் அன்று மாலை ரெயிலில் திருநெல்வேலி திரும்ப இருந்தான். ஜங்ஷனில், தான் படித்துவந்த ஹிந்து காலேஜுக்கு அருகிலேயே சந்திர விலாஸ் ஹோட்டலில் இருப்பு—சாப்பாடு முதலியன வைத்துக் கொண்டிருந்தான் அவன். நாகரிக நகர வாழ்க்கை, கல்லூரிப் படிப்பு, ஹோட்டல் வாசம் எல்லாம் அவன் மனசுக்கு ரொம்பப் பிடித்திருந்தன. ஆனால் வீட்டிலுள்ள பழங்காலப்பேர்வழிகளுக்கு நமது நாகரிகப் போக்கு எங்கே புரிகிறது? எப்பொழுதாவது ஊர் வந்துவிட்டால், திரும்பும்போது பண்டம் என்றும், பாடி என்றும்

நாம் திரும்பிக்கூடப் பார்க்கவிரும்பாத சாமான்களைத் தலையில் வைத்துக் கட்டி அனுப்பி விடுகிறார்கள். அம்மாதிரிதான், திதிக்காகச் செய்த தின்பண்டங்களையும் திருமலைக்காகத் தனியே செய்த முறுக்கு, சீடை, தேங்குழல் போன்ற பணியாரங்களையும் ஒரு டின்னில் திணித்துக் கொண்டிருந்தாள் கோமதியாச்சி.

"ஏலே ஐயா! இந்தா, இங்கனே வந்து பாத்துக்கிடு. டின்னிலே கீளே அதிரசம், வடையெல்லாம் வச்சிருக்கேன். அதுகளைப் போனதும் தின்னு தீத்துப்போடு. ஊசிப்போற பண்டங்க அது. அதுக்கு மேலே காகிதம் போட்டு முறுக்கும் சீடையும் அடுக்கி வச்சிருக்கேன். தேங்குளலை ஒனக்குன்னு காந்தி பூவாச் சுத்தியிருக்கா. அதெ டின்னிலே மேலாள வச்சிருக்கேன். இல்லேன்னா எளவு நொறுங்கிப் பொடியாப் போயிடும். கேட்டுக்கிட்டியாலே? எல்லாத்தியும் நீயே தின்னணும்; ஆமா சொல்லிப் போட்டேன். கண்ட பயக கண்ணிலே காட்டினியானா தெரியும் சேதி!" என்றாள் பண்டங்களை அடுக்கிக் கொண்டிருந்த கோமதியாச்சி.

"அதெல்லாம் திம்பான்ம்மா. திருமலைக்குத்தான் தேங்குழல்ன்னா உசிராச்சுதே! ஏன் திருமலே, இல்லே?" என்று தாய்க்கு உதவிக் கொண்டிருந்த காந்திமதி முறுவலித்துக் கொண்டே கேட்டாள்.

திருமலை தனது பெட்டியில் துணிமணிகளை மடித்து வைத்துக் கொண்டிருந்தான். அவன் அசிரத்தையாக, "சதி, சதி; வச்சுட்டீகல்லே; பாத்துக்கிடுதேன்," என்றான்.

"என்னலே சடச்சுக்கிடுதே? பாத்துக்கிடப் போறாராமில்ல பாத்துக்கிட. நீ பாத்துக்கிட்டிருக்கதுக்காலே இந்தப் புள்ளெ நேத்து விடியாம இருந்து அடுப்படியிலே வாணலெக் கொடுத்து 'அத்தானுக்குப் புடிக்கும்—புடிக்கு'மின்னு ஆசையாச் சுட்டு வச்சுது?" என்றாள் கோமதியாச்சி.

"ஆமா, அத்தானுக்குப் புடிக்குமின்னுதானே சுட்டா? அது எந்த அத்தான்னு கேட்டுக்கிட்டியா ஒன் மகளே?" என்று காந்திமதியை நோக்கிக் கண்களால் சிரித்தான், திருமலை.

"இந்தா திருமலெ, நீ சும்மா இரிக்க மாட்டே?" என்று பொய்யாக, ஆனால் மெய் சிலிர்க்கக் கடிந்து கொண்டாள் காந்திமதி.

இதையெல்லாம் பார்த்து நெடுமூச் செறிந்தாள் கோமதியாச்சி. அவள் உள்ளத்திலே நிகழ்ந்து கொண்டிருந்த போராட்டத்தை அவர்கள் அறிவார்களா? அவ

A.K. APPADURAI MUDALIAR & SONS,
PHONE No. 86114.
132-136, PYCROFTS ROAD,
TRIPLICANE . . . . MADRAS-5.
Branch: 17, South Mada Street,
Mylapore :: Madras-4.

ளுக்கு என்னவோ, மகளின் கல்யாணப் பேச்சை யாராவது எடுத்தால் பற்றிக் கொண்டுதான் வந்தது. ''சரிட்டி. மச்சிலுக்குப் போயி, கொடிலே பளந்துணி ஒண்ணு தோச்சுக் காயப் போட்டிருக்கேன்; அதெ எடுத்துக்கிட்டு வா. நாலு பிலாப்பளச் சொளெ இருக்குது; அதையும் ஒரு எலெக்குள்ளே வச்சு துணியிலே பொதிஞ்சு, டின்னிலே வச்சுப் போடுதேன். புள்ளெ போறவளியிலே தின்னுக்கிடும்,'' என்ருள் அவள், தனக்குப் பிடிக்காத பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைக்க.

மச்சிலுக்கு என்றதும் காந்திமதியின் உள்ளம் விண்ணுக்கே தாவி விட்டது. ஆமாம், அந்த மச்சிலில்தானே அவள் உள்ளம் கவர்ந்த கள்ளன் படுத்திருக்கிருன்! அந்தக் கள்ளனேக் காண அங்கே இந்தக் கள்ளி துள்ளி ஓடினுள்.

மாடி மரப்படிகளில் ஏறுகையில் அவளுடைய கால் விரல் மெட்டி எழுப்பிய ஒலி, பாதி நினைவிலும், பாதி உறக்கத்திலும் இருந்த நெல்லேயப்பனைத் தட்டி எழுப்பி விட்டது. ஆம், அது யானை வரும் மணியோசை; மலரை முந்திக் கொண்டு வரும் மணம். அந்த மெட்டியின் தாளத்துக்கு ஏற்ப அவனது உள்ளத்திலே இன்பம் தாண்டவமாடியது.

தினந்தினம், விழித்தது முதல் உறங்கும் வரையில் அவர்கள் ஒரே வீட்டினுள்ளே நடமாடி வந்தார்கள்; ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்; பேசிக் கொண்டார்கள்; கண்ணுலும், வாயாலும் சிரித்துக் கொண்டார்கள். ஆனுலும், அந்தப் பாழும் மனம் திருப்தி அடைந்து விடுகிறதா? எவ்வளவு தின்ருலும், சற்றைக்கெல்லாம் பசிக்கும் வயிற்றைப் போல, இந்தக் காதலுக்கும் எவ்வளவு பார்வையும், எவ்வளவு பேச்சும், எவ்வளவு கொஞ்சலும் போதவில்லே. பொல்லாத அந்தக் காதல் ஒரு மிடாக் குடியன்தான். இருப்பதையெல்லாம் குடித்துவிட்டு, ''இன்னும் கொண்டா; கொண்டா'' என்றல்லவா கூறிற்று! அதிலும் காதலுக்கு ஊடல், காப்பிக்குச் சர்க்கரை போன்றதில்லையா? காதலின் இன்பம் களித்திருப்பதில் மாத்திரம் இல்லே. பிணக்கிலும், கோபத்திலும்கூட இன்பம் அளிக்கும் நூதன வஸ்துவாயிற்றே காதல்! அதனுல்தான் போலும், மெட்டி ஒலி கேட்டுப் பொட்டென உள்ளம் விழித்த நெல்லேயப்பன், மறு நிமிஷம் சட்டெனக் கண்களே மூடிக்கொண்டு தூங்குவதுபோல் பாசாங்கு செய்தான்.

படியேறியதும் இருந்த கொடியில், கை தொடும்படியாகத்தான் இருந்தது கோமதியாச்சி கேட்ட பழந்துணி. ஆனுல் காந்தி துணி மாத்திரம் எடுக்க வந்திருந்தால் அல்லவா, அதை அப்படியே இழுத்துக் கொண்டு இறங்கப் போகிருள்? அவள் துணியோடு ஒரு மணியான உள்ளத்தையும் இழுக்கவல்லவா மாடிக்கு ஓடி வந்திருந்தாள்?

மெட்டி குலுங்கப் படியேறியவள், பின்னர் மென்னடை போட்டுத் தன் அத்தானே நெருங்கினுள். அவன் அச்சமயம் உறங்கிக் கொண்டிருந்தது அவளுக்கு ஏமாற்றமாகத்தான் இருந்தது. காணும்போதெல்லாம் அவன் கனிவாய் இரண்டு வார்த்தையாவது பேசாவிட்டால் அவள் உள்ளம் குறைப்பட்டுக் கொள்ளும். அந்த வார்த்தைகள் அவளுக்கு தேனுகவன்ருே தித்தித்தன....!

காந்திமதி வேண்டுமென்றே அங்கு மேசைமீது வைத்திருந்த புத்தகத்தை எடுத்துத் தொப்பென்று போட்டு ஓசையெழுப்பினுள். எழுப்பிவிட்டு அவர் 'அனங்கு'கிருரா என்று ஓரக் கண்ணுல் பார்த்தாள். ஆனுல் நெல்லேயப்பன் தூங்கிக் கொண்டிருந்தால் தானே சத்தம் கேட்டு விழித்துக் கொள்ளப் போகிருன்?

மேசைமீது அலாரம் கடிகாரம் ஒன்று 'டிக்டிக்'கென்று அடித்துக்

கொண்டிருந்தது. மெல்ல அலாரம் மணியைத் திருகிவிட்டு அத்தானை எழுப்புவோமா என்று அவள் நினைத்தாள். ஆனால் அந்த இழவு அலாரம் அவர் காதுக்கு மாத்திரம் கேட்கும்படியாகவா அடிக்கும்? ரேழியிலிருக்கும் தாயும் திருமலையும் அலறும்படியாகவல்லவா அடித்துத் தொலைத்து விடும்!

கிடைத்திருப்பது ஒரு நிமிஷ நேரம். அதையும் பயனுள்ளதாக்கிக் கொள்ளலாம் என்று அவள் ஓடோடி வந்தாள். இவர் தூங்குகிறதைத் தான் பாரேன். சட்டென்று காந்திக்கு ஓர் ஆலோசனை தோன்றிற்று. மேசைமீது இங்கிப்புட்டி ஒன்றும், எழுதுகோல் ஒன்றும் இருந்தன. எழுது கோலை எடுத்துக் கொண்டு நெல்லையப்பன் படுத்திருந்த பாய்க்கு வந்தாள். பாயின் மீது விழுந்து கிடந்த அவன் புஜத்தில் படுமாறு பேனாக்கட்டையால் எதையோ தள்ளுவதுபோல் தள்ளினாள்.

கள்ளன் விழித்துக்கொண்டான். "என்னது காந்தி?" என்று கேட்டான்.

"மூட்டை அத்தான். சொகமா ஒங்களைக் கடிச்சு ரத்தத்தை உறிஞ்சுக்கிட்டிருக்குது. அடிச்சுப் போட்டாப்பிலே ஒறங்கிக்கிட்டிருக்கிகளே?"

"பாவம்! என்னெ மூட்டை கடிச்சுக்கிட்டிருந்தது எனக்குத் தெரியலே; பட்டகசாலையிலிருந்த ஒனக்குத் தெரிஞ்சிடுத்தாக்கும்!"

அவன் குறும்பாக நகைத்தான்.

"போங்க அத்தான்! ஒங்களுக்கு எப்பொழுதும் என்னெ வம்பு செய்யாட்டிப் பொளுது போகாது. அம்மா பளந்துணி காயப்போட்டிருக்குதேன்; எடுத்துக்கிட்டு வான்னு. அதுக்காக வந்தவ...."

"அதுக்காக வந்தவ, இந்தப் பய ஒறங்கிக்கிட்டிருக்கானே; ரெண்டு போடு போட்டு எளுப்பிட்டுப் போவோமின்னு, கைக்கு அகப்பட்ட பேனுக்கட்டையைத் தூக்கிக்கிட்டு வந்தியாக்கும்? அந்த மட்டும் நல்லவதான்; ஒலக்கையைத் தூக்கிக்கிட்டு வராம இருந்தியே....!"

"நல்ல ஆளு நீங்க.... ஐயோ, மூட்டை கடிச்சுக்கிட்டு இருக்குதேன்னு, அதெ எடுத்துச் சொடக்கிட்டுப் போக வந்தா, நீங்க பேச மாட்டிகளா?"

"ஆமா, மூட்டையைச் சொடக்குதுக்கு பேனுக்கட்டை எதுக்காம்? இல்லே, தெரியாமத்தான் கேக்கேன்?"

"பின்னெ அது ஒங்க கைமேலே ஒக்காந்து இருக்குது; ஒங்க மேலேயா சொடக்குவாங்க?"

"மேலே சொடக்கணுமின்னு சொன்னேன்? கையினுலே கீளே தள்ளிச் சொடக்குது?"

"என்ன சொன்னீக? கையினுலே தள்ளிச்சொடக்குதா? ஏன்? ரொம்பத் துணிஞ்சிட்டீக போலிருக்கே?"

"இதிலே என்ன ஆத்தா துணிச்சலைக் கண்டிட்டே?"

"ம்..நான்தான் சொல்லணுமோ அதெ?"

"நீ சொல்லாட்டி எனக்கென்ன தெரியும்?"

"நெசம்மா, தெரியவே தெரியாது ஒங்களுக்கு?"

"தெரிஞ்சா கேப்பேனுக்கும்?"

"அப்பிடீன்னு.... அப்பிடீன்னு...."

காந்திமதி அவன் காதருகில் குனிந்து, "கட்டிக்கப் போகுதவகளே, கட்டிக்கதுக்கு முன்னுலே தொடக் கூடாது, தெரிஞ்சுக்கிட்டீகளா?" என்று உள்ளம் புல்லரிக்கக் கூறிக் கொண்டிருந்த போது—

"ஏட்டி! ஏ மூதி! என்னட்டி செய்துக்கிட்டிருக்கே இங்கனே? எளவு புடிச்சவ ஒரு எடத்துக்குப் போனு, போனேம் – வந்தோமின்னில்லாம...."

சிவபூசை வேளையில் கரடியாக அச்சமயம் மாடியேறி வந்துவிட்டாள் கோமதியாச்சி. மகளும் மருமகனும் முகத்தோடு முகம் நெருங்கியிருப்பதைக் கண்டதும், அவளுடைய உள்ளத்தில் வீசியது புயலா? அல்லது தென்றலா?

(தொடரும்)

மனக் கவலை

பாலுக்குச் சர்க்கரை போதாதென்பான் பணக்காரன்; சோற்றுக்கு உப்பில்லையே என்று அழுவான் உழைப்பாளி. முள் குத்தி வாதனைப்படும் காலுக்குச் செருப்பில்லையே என்று வருந்துவான் பாமரன். துஞ்சப் பஞ்சணை இல்லையே என்று நொந்துகொள்வான் சுகபோகி. ஆகவே, மனக்கவலை என்பது எல்லோருக்குமே ஒரே சமமாகத்தான் இருக்கிறது.

— விவேக சிந்தாமணி

போட்டிக் கதை:

காதலா-உறவா?

க. இராமமூர்த்தி

இசை தந்த இன்பத்தில் ஆழ்ந்து திளைத்திருந்தாள் அவள். 'வருவாரோ, என் மாறன் வருவாரோ? அடைவேனே, என் ஆசை அன்பரை அடைவேனே?' என்ற இசைத் தட்டின் முழக்கம் அவள் மனத்திற்கு மகிழ்வளிக்கவில்லை. மாறாக, பல பழைய நினைவுகளை எழுப்பி விட்டது.

காதல் என்ற மயக்கமான, பொருள் புரியாத வயது. தன்னம்பிக்கையும், துணிவும், தீர்ந்த முடிவும் இல்லாத குருட்டு நிலை என்பது என்னவோ காதலுக்குப் பொருத்தமானாலும், அதிலும் சிலர் தப்பித் தவறி வெற்றி பெறுவதால், 'வயது வந்த' எல்லோருக்கும் அந்தப் பொருளின் மீது ஒரு கண். அதன் பலாபலன் என்ன, முடிவு என்னவோ, அறிந்து உறவு கொள்ளப் பட்டதா? – இதைப் பற்றி எல்லாம் கவலைப் படுவதாக இந்த வியவகாரங்களில் ஈடுபட்டவர்கள் காட்சியளிப்பதில்லை.

ஆனால், பருவநிலையின் வாயிலில் விளையாடிக் கொண்டிருந்த மங்கை இதைப் பற்றி நினைத்தவளாகவே தெரியவில்லை. சிலரைக் கண்டால் மட்டும் அந்த வயதில் அவளுக்கு ஓர் அலாதி ஆனந்தம்; இன்னுஞ் சிலரைக் கண்டால், ஏனோ பார்க்காதவளைப் போலப் பறந்தோடி விடுவாள்.

மாறனைக் கண்டால் மட்டும் அவள் மருளுவதில்லை; தகாத செயலென்றெண்ணித் தாவி ஓடுவதுமில்லை. இளம் வயது முதற் கொண்டே மாறன் மேல் அவளுக்குப் பிரியம். 'அத்தான் இருக்

சிந்திக்க மட்டுமே:

படைத்தவனுக்குப் பரீட்சை!

மனிதன் நினைத்தால் உயிரற்ற பொருள்களையும் ஊமையான மிருகங்களையுங்கூடப் பேச வைத்து விடுகிறான். படைத்தவன் அந்த உயர்தனிச்சிறப்பை அளித்திருக்கிறான்—கற்பனை என்னும் பெயரால்.

என் எதிரே இருந்த பழுத்த மாங்கனி, புளித்த மாங்காய் இரண்டையும் பார்த்தபோது, படைத்தவனுக்கே 'பரீட்சை' ஒன்று வைக்க நினைத்தேன்.

எங்கள் வீட்டுத் தோட்டத்தில் தோன்றியவை அவை. தனியாகச் சாப்பிட கனியையும், ஊறுகாய் போட காயையும் அம்மா பறித்துக்கொண்டு வந்திருந்தாள்.

''அண்ணா, உங்கள் அழகே அழகு! தங்க நிறம் உங்கள் அங்கம்; உங்களைப் போல் நானும் வர வேண்டும் என்பது ஆசை!''

''சீ, பிதற்றாதே! என்னைப் போல் ஆக உன்னால் ஒருநாளும் முடியாது; இன்றோ நாளையோ நீ ஊறுகாயாக மாறப் போகிறவன்....!''

''அண்ணா, ஆசி கூறாவிட்டாலும் சாபம் கொடுக்காதீர்கள்!''

''ஐயோ!'' என்று மாங்கனி அலறியது. அதன் தலையில் அரிவாள் வெட்டு!

''அண்ணா, அண்ணா! மனிதன் உலகத்திற்காக வாழ்கிறான். நாம் அவனுக்காக வாழ்கிறோம். இதை உணராது, அடுத்தவன் முன்னேற்றத்தை விரும்பாதவனைப் போலப் பேசி, அற்ப காலத்தில் மரித்து விட்டீர்களே! அழியாத நற்பண்பை அதற்குள் அழித்துக் கொண்டீர்களே!'' என்றது காய்.

அடுத்த வெட்டு அதற்கு!

படைத்தவன் தேர்வு கண்டான்!

— ர. தங்கவேலன்

கார், அம்மா; விருந்து வைக்க வேண்டாமா?' என்று சொல்வாள். ஆனால், அவனுக்குப் பிடிக்காத பதார்த்தங்களைச் செய்து வைத்து அவனுக்குப் பரிமாறுவாள். அவன் திகைப்பதைப் பார்த்து அவள் பரிகசிப்பாள்.

''மங்கை, இதற்கு என்னை பட்டினி போட்டு விடலாமே?'' என்பான் அவன்.

''அதுதான் ஒரு வேளை போட்டு விட்டேனே,'' என்பாள், அக்குறும்புக்காரி.

அதற்கு அடுத்த வேளை விருந்து, உண்மையில் வயிறுபுடைக்கத்தான் இருக்குமென்று அவனுக்குத் தெரியும். ஆனால் பசிக்காதவனைப் போல் பாசாங்கு செய்வான்.

''என்னிடமா உங்கள் குறும்பு பலிக்கும்?'' என்பாள். அவனுக்குப் பக்கத்தில் அமர்ந்து அவளும் சாப்பிட ஆரம்பிப்பாள். அவ்வளவுதான்; அவன் வயிறு 'இரு நாளைக்கு ஏல் என்றால் ஏற்பாய்' என்ற வண்ணம்தான் ஆகிவிடும்.

இளமைக்கும் குழந்தைப் பருவத்துக்கும் இடைப்பட்ட காலங்களில் மாறன், மங்கை வீடு செல்லும்போது தவறாமல் நடந்து வந்த குறும்புக் காட்சிகள் இவை.

இடைப்பட்ட எட்டாண்டுகளில் மங்கை நறுமலராய் வளர்ந்துவிட்டிருந்தாள். தன் அழகைப்பார்த்து, தானே பூரித்துப் போனாள் அப்பெண் பேதை.

தன் கல்லூரி வாழ்வின் வளர்ச்சியில் கணமும் சோர்வில்லாமல் முன்னேற்றம் பெற்று வந்தான் கட்டிளங் காளை மாறன்.

மாறன் மங்கையப் பற்றி நினைக்கவில்லை. மறந்துவிட்டானே, என்னவோ? கல்லூரி வாழ்வில் ஏற்பட்ட புது உறவில் அவன் உண்மையான காதலை உணர்ந்தான். ஒரு நாள் உறவு; மறுநாள் சந்திப்பு; காலை, மாலை, இரவு என்ற வேளைகளுக்கு உண்மையில்

நிரம்ப அர்த்தம் இருக்கத்தான் இருந்தது. பேசினன், பேசினன்-தன் பேச்சு தன் காதலிக்கு அலுக்கும் வரை பேசித் தீர்த்தான்! முதற் சந்திப்பில் எழுந்த இன்பமும் இனிப்பும் எல்லையில்லாத மகிழ்ச்சியின் விளிம்புக்கு மல்லிகாவை அழைத்துச் சென்றன.

மாறனைப் பார்த்தாள் மல்லிகா. தனிமை வாழ்வுக்குத் துணை கிடைத்து விட்டதே என்ற ஆனந்தம் அவளுக்கு. பெற்றோர் இல்லை; உற்றார் என்ற பெயரில் இருந்த ஒரு சிலரும் உதவும் நிலையில் இல்லை. அவளுடைய ஒன்றுவிட்ட தாத்தா அவளுக்கு மாபெரும் மனிதராகக் காட்சி அளித்தார். அவருடைய உதவியில் – அவரது அரவணைப்பில் கல்லூரிப் படிப்பைத் தொடர்ந்தாள். எதிர்பாராத உறவு வேறு கிடைத்தது. மாறன் தன்னுடைய தந்தையாக, கணவனுக, தாயாக, சிநேகிதியாக, எல்லாமாகக் காட்சியளித்தான்.

ஒருநாள் ஏதோ பேசிக்கொண்டு இருக்கும்போது, குடும்ப நிகழ்ச்சிகள் சிலவற்றை மாறன் மல்லிகாவிடம் தெரிவித்தான். தனக்குச் சிற்றன்னை ஒருத்தி இருப்பதாகவும், அவள்தான் அவனுக்குத் தாயாக விளங்குவதாகவும், அவள் சொல்லை இதுவரை தட்டியதில்லை, தட்டவும் முடியாது எனவும் மல்லிகாவிடம் தெரிவித்துக் கொண்டிருந்தான். அவனது புருவங்கள் உயரே செல்வதும், கீழே இறங்குவதுமாக இருந்தன. அவன் முகத்தில் மகிழ்ச்சியும் மருட்சியும் மாறி மாறி இடம் பெற்றன.

''உங்கள் சிற்றன்னை எது சொன்னலும் கேட்பீர்கள், இல்லையா?''

''எனது அன்னையாகவே விளங்கும் அவரது சொல் எதையும் நான் தட்டமாட்டேன், மல்லிகா.''

''எது சொன்னலும் தங்கள் மனம் மறுத்துரைக்க முடியாது... அப்படித்தானே, மாறன்...?''

சிரிக்க மட்டுமே:

நல்ல சிபாரிசு தேவை!

''நான் சிவகங்கையில் உயர் நிலைப்பள்ளி ஆசிரியராக இருக்கிறேன்.''

''ஆமாம், நீங்கள்...?''

''நான், திருச்சியில் மோஹன் மெடிக்கல் மார்ட்டில் டைப்பிஸ்டாக இருக்கிறேன். பாருங்கள், எங்கள் கடைக்கு நேற்றய முன் தினம்தான் சென்னை தலைமை ஆபீசிலிருந்து மானேஜராக ஒருவர் வந்திருக்கிருர். கொஞ்சம் கூடப் பொருத்தமில்லை. அவருக்குக் கொஞ்சமாவது 'பெர்சனலிட்டி' வேண்டாமா? பாவம், கிணற்றுத் தவளை! ஹூம்! நேற்று அவரும் நானும் ஒரு முக்கியமான இடத்திற்குப் போயிருந்தோம். சொன்னல் தற்பெருமை என்றுகூட நினைப்பீர்கள். போன இடத்தில், ஹி....ஹி...பாருங்கள், என்னைத்தான் மானேஜர் என்று நினைத்துத் தடபுடலாக மரியாதை செய்ய ஆரம்பித்து விட்டார்கள்!''

''ஆமாம், உங்கள் புது மானேஜரின் பெயர் ரங்கநாதனு?''

''ஆமாம், உங்களுக்கு அவரைத் தெரியுமா?''

''என்ன விஷயம், கூறுங்கள்?''

''பிரயாணத்தில் என்னைப்பற்றி உங்களுக்கு எப்படிப்பட்ட அபிப்பிராயம் உண்டாகியிருக்கிறது?''

''ஏன், நல்ல அபிப்பிராயம் தான்!''

''தயவுசெய்து அவரிடம் என்னைப் பற்றி எடுத்துச் சொல்லிச் சம்பள உயர்வுக்கு வழி செய்தால் நல்லது.''

''உங்களைத்தான் புரிந்து கொண்டு விட்டேனே! பேஷாக உங்களைப் பற்றி எடுத்துச் சொல்கிறேன். அவர் என் கூடப் பிறந்த சகோதரர்தான்....!''

— இளஞ்சோழன்.

''ஆமாம், அப்படித்தான் நடந்து வருகிறேன். அதுவே என் கடமை.''

''எனக்கு ஒரு சந்தேகம், அதைத் தீர்ப்பீர்களா?''

''என்ன, விளையாடுகிறுயா, மல்லிகா?''

''இல்லை; உண்மையில் மனம் உடைந்து கேட்கிறேன்... திருமண விஷயத்தில் தங்கள் சிற்றன்னை தலையிட்டால்....?''

''கட்டாயம் என் விருப்பப்படி தான் அவர்கள் மருமகள் தேடு வார்கள். அது அவர்களுக்குத் தெரியுமே!''

அர்த்தமில்லாமல் அவர்கள் சிரித்தார்கள். மாறன் எப்படித் தான் அந்தச் சிரிப்பை வர வழைத்தானே, தெரியவில்லை!

பெண்ணுக்குத்தான் அலங் காரக்கலை, அழகுக் கலை, தேவை என்ற ஒரு வழக்கைத் தோற்கடிக் கும்படியாகத் தன்னை அழகுபடுத் திக் கொண்டிருந்தான் மாறன். யாரைப் பார்க்க அந்தக் கோலமோ? 'ரதி மல்லிகா வாகத்தான் இருக்க வேண்டும்' என்று நீங்கள் நினைப்பீர்கள். அந்த எண்ணத்துக்குக் குறுக்கே நான் நிற்கவில்லை.

அவனது மகிழ்வின் பேரெல்லைக் குக் குறுக்கே அன்று அந்தக் கடி தம் வந்து வீழ்ந்தது.

அவனது சிற்றன்னை – அவனது அன்புத் தெய்வம் அனுப்பி வைத் தது. எழுத்துக்கள் இவை: ''செல்வ, பல நாட்களுககுப் பின் இந்தக் கடிதத்தை எழுதுகின் றேன். அமைதியோடு படி. மனக் குழப்பம் ஏற்பட இந்த எழுத்துக் களில் ஏதும் வழியில்லை.

சென்ற வாரம் உன் மாமன் வீடு சென்றிருந்தேன். அங்கு பல சுமை களைப் பெற்று வந்தேன். அன்புச் சுமையாகத்தான் அவை இருக் கின்றன.

மங்கை துணையாக இருந்தாள். படித்த பெண் என்பதை அவள் பல வழிகளாலும் எனக்கு உணர்த்தி விட்டாள். நீ கொடுத்த பல புத்தகங்கள் சிறப்பு மிக்கவை என்று அவள் புகழ்ந்தாள்.

உன்னைப் பற்றி என்னிடம் என்ன வெல்லாமோ கேட்டாள். அவள் கட்டியிருக்கும் கலைக் கோயிலில் நீ தான் தலைவனாக வீற்றிருக்கின்றாயாம்!

பிஞ்சு மனத்தில் அசைக்க இயலாத ஒருவித அன்பை நீ ஏற்றி விட்டாய் போலும்! அது இன்று துளிர்விட்டுத் தழைத்திருக்கிறது.

நீயும் மங்கையைப் பற்றி என்னிடம் ஒரு வார்த்தைகூடச் சொல்லவில்லை. அவள் உள்ளத்தை வெளிக் காட்டிக் கொள்ளாமல் இதுவரை இருந்திருக்கின்றாள்.

என்னை உபசரிப்பதில் அவள் காட்டிய அன்பு வெள்ளம் கரையில்லாதது. நான் உனது தாய் என்ற நிலையல்லவா அவளுக்கு இவ்வளவு உற்சாகத்தை ஊட்டி இருக்க வேண்டும்!

அன்பு, எளிமை, பணிவு இவை அவளுக்கு அணி செய்கின்றன. நான் அவளிடம் கொள்ள வேண்டிய கடமை அன்பினும் அவளது இயற்கை அன்புள்ளம் விஞ்சி நிற்கின்றது.

அவளது இதயத்தை உனக்கு அறிவுறுத்தித்தான் ஆகவேண்டும் என்ற நிலை வந்ததால், இவற்றை எழுதினேன்.

உன் மன நிலை எப்படி உள்ளதோ? படிப்பில் கண்ணாயிரு.

உன் அன்னை,
திலகவதி''

கட்டுத் தறித்தாற் போல் அமைந்த வார்த்தைகள் மாறனுக்குக் களிநடனமாகக் காட்சியளிக்கவில்லை. இருந்ததையும், இல்லாததையும், உணர்ந்ததையும் உணராததையும், எண்ணியதையும் எண்ணாததையும், நடந்ததையும் நடக்காததையும் கண்டு மனம் குழம்பினான். எள்ளளவு அமைதிக்கும் அவனுடைய மனத்தில் அன்று இடமில்லை.

கடிதத்தை மங்கையிடம் காட்டலாமா என்று மின்னிட்ட எண்ணம் உடனே ஓடி மறைந்து விட்டது.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் நான்காம் ஆண்டு கலை இறுதி வகுப்புக்குப் பரீட்சை கொடுக்க யிருக்கிறார். 'தம்பி'யில் இவர் பெயர் அச்சாகியிருக்கிறதாம். இலக்கிய இதழில் இவருடைய எழுத்து இப்பொழுதுதான் இடம் பெறுகிறது. திரு ராமமூர்த்தியின் கடிதத்தில் ஒரு பகுதி: '....இலக்கியம் யாவரையும் ஒன்று சேர்க்கிறது. பல கருத்துடையோரும் இலக்கிய இன்பத்தில் ஒன்றுபடுவது உண்டு. வேற்றுமைக்கு இடம் இல்லை என்ற விதத்தில், 'உமா' என் கதைக்கும் இடம் தந்தமைக்கு நன்றி.'

தாயுள்ளத்தைப் புண்படுத்தவும் ஒரு சூழ்நிலை வளர்ந்து விட்டதே என எண்ணினான். எண்ணம் அமைதிக்கோ, ஒருவித முடிவுக்கோ இடமளிக்கவில்லை. ''எனக்கு தற்போது திருமணம் வேண்டாம்,'' என்று எழுதிவிடலாமென்று மனக் கோட்டை கட்டினான். தாயுள்ளம் அவ்வரிகளைப் பார்த்துப் புண்பட்டு வாடி வதங்கி மனம் பொருமல் ஏதாவதொன்றைச் செய்து விட்டால்...!—அதற்குமேல் வார்த்தைகளுக்குப் பொருள் கற்பிக்க அவனால் முடியவில்லை.

இரவு மணி எட்டு இருக்கும். கோட்டைப் பாதையில் கார் நின்றது. அவன் மட்டும்தான் காரை விட்டு இறங்கினான். பாதையிலிருந்து அரை மைல் தொலைவில் உள்ளடங்கி இருந்தது ஊர். அவனது நடையில் என்றுமில்லாத விரைவு காணப்பட்டது.

இனாம்

எங்கள் கருங் கூந்தல் தைலம் நெ. 501 உபயோகிப்பதன் மூலம் எல்லாவிதமான கேசமும் நன்கு கருத்து, எப்பொழுதுமே கருமையாக வளரும். இது மயிர் உதிர்வதைத் தடுத்து, நீண்டு கருகருவென்று சுருண்டு வளரச் செய்கிறது. ஒரு சீசா விலை ரூ. 1|15. முழு உபயோகத்திற்கும் தேவையான 3 சீசாவின் விலை ரூ. 5|-. இந்த அற்புத தைலத்தை பிரபலப்படுத்துவதற்கென, அழகிற்கும் உறுதிக்கும் 15 வருஷ உத்தரவாதம் பெற்ற ஓர் அழகிய பான்ஸி கை கடியாரமும், ஒரு மோதிரமும் (நியூ கோல்ட்), 3 சீசா வாங்குபவர்களுக்கு 6 பான்ஸி கை கடியாரங்களும் மற்றும் 6 மோதிரங்களும் (நியூ கோல்ட்) முற்றிலும் இலவசமாக அளிக்கப்படும். திருப்தி இல்லையேல் பணம் வாபஸ்.

AMRIT PHARMACY, (U.M.) Nakodar. (Pb.)

தன்னை யாரும் பார்த்துவிடக் கூடாதென்று தன் நடையிலும், உடையிலும், மிடுக்கிலும் வலிய மாறுதலை உண்டுபண்ணிக் கொண்டான். அவனது பார்வையில் அவனையறியாத திருட்டுத்தனமும் அச்சமும் குடி கொண்டிருந்தன. வளைந்து சென்ற ஒரு பாதை வழியைத் தொடர்ந்தான். எங்கும் ஜன நடமாட்டமில்லை. அது அவனை அவன் மாமன் வீட்டுத் தோட்டத்தில் கொண்டுபோய் விட்டது!

அவனது உள்ளத்தில் எத்தகைய தவிப்புணர்ச்சி; எவ்வளவு பயங்கரம், என்ன நடுக்கம்...!

தோட்டத்துக் கதவு திறக்கப்பட்டது. பேயறைந்த மாதிரி நடுங்கிய மாறன், அருகே இருந்த ஒரு பெரிய மரத்தைப் பாதுகாப்பாக்கிக் கொண்டான். அடிமேல் அடியெடுத்து வைத்து, மிகவும் பயந்த நிலையில் – பரிதாபகரமான தோற்றத்தில் நின்று கொண்டிருந்தான். உரிமையோடு அவ் வீட்டில் அடியெடுத்து வைக்க வேண்டியவன், ஏன் கொல்லைப் புறமாக நுழைய வேண்டும்?

''அத்தான்....!''

''ம....ங்....கை!''

ஒருவரைப் பார்த்து ஒருவர் நின்று கொண்டிருந்தார்கள்.

''ஏன் இப்படி நீங்கள் மறைந்து வந்து இங்கே நிற்கவேண்டும்? மாடியிலிருந்து நீங்கள் வருவதைப் பார்த்துக் கொண்டிருந்தேன். அதனால்தான் நீங்கள் வந்தது எனக்குத் தெரிந்தது. வேறு யாராவது உங்களை இந்தக் கோலத்தில் பார்த்து விட்டிருந்தால்....?''

தேம்பித் தேம்பி அழுதாள் மங்கை. மாறன் அவள் கண்ணீரை மட்டும் துடைத்து விட்டுக் கொண்டிருந்தான். அவளால் ஒன்றும் பேச இயலவில்லை.

''மங்கை....''

''அத்தான்...''

''உன்னிடம் ஒன்று கேட்பேன்; தருவாயா, மங்கை?''

''உங்களுக்காக நான் இருக்கிறேன். என்னிடம் வேறு என்ன கேட்கிறீர்கள், அத்தான்?''

''மன்னிப்புக் கேட்கிறேன், மங்கை.''

''மன்னிப்பா....?''

''மங்கை....மங்கை...!''

''ஏன், அத்தான்?''

அவன் அவனுடைய திரிசங்கு சொர்க்க நிலையை மங்கைக்குத் திக்கித் திணறி சொல்லிவிட்டான்: ''மல்லிகா என்றொருவள், உன்னைப்போன்றவள்; ஏழைப் பெண்; என்னோடு படிக்கிறாள். என்னையே உரிமையாகக் கொண்டுள்ளாள், மங்கை. அந்த அபலைப் பெண்ணுக்கு ஆறுதல் அளிப்பேன் என்று சொல்லி விட்டேன். இதை எப்படி என் அன்னையிடம் தெரிவிப்பேன்....? என் முடிவைக் கேட்டு உன் தந்தையின் வார்த்தைகளுக்குப் பயந்து அவர் ஏதாவ

தொன்றைச் செய்து விட்டால்....! இதை நினைக்கவே எனக்குப் பயங்கரமாய் இருக்கிறது, மங்கை. எனக்காகவும், நான் சொன்ன அபலைப் பெண்ணிற்காகவும், என் அன்புத் தெய்வம் – சிற்றன்னைக்காகவும் நீ வேறு ஒருவனை மணந்து வாழ வேண்டும். இந்த முடிவுக்கு நீ உறுதி கொடு, மங்கை; அது போதும். எங்களை வாழ்வித்தவளாவாய்! செய்வாயா, மங்கை?''

''அத்தான்.... அத்தான்....!''

அவளது புலம்பலொலி நீண்டு கொண்டிருந்தது.

''இப்படி நேரும் என்று நான் அறியாது செய்த தவறு மங்கை. அதை மீறி நடப்பதைவிட நான் எங்காவது போய்விடலாம்...!''

''வேண்டாம் அத்தான்; நீங்கள் எங்கும் போக வேண்டாம். என்னால் எனது அன்பு அத்தைக்கு எதுவும் நேர்ந்துவிடக் கூடாது. என் தந்தையின் முன்கோபம் அந்த அன்புருவின் உயிரைப் பிடுங்கிக் கொள்ளாமல் இருக்கத் தங்கள் வேண்டுகோளை ஏற்கின்றேன்....''

''மங்கை, நீ என் கண்கண்ட தியாகப் பிறவி. வரட்டுமா? சென்று வாருங்கள் என்று விடை கொடுத்தால்தான் நான் போவேன்.''

''அத்தான்....!''

பாவம், அந்த ஒரு வார்த்தையை மட்டும் சொல்லிச் சொல்லி, அடக்க முடியாத தன் உணர்ச்சிகளுக்கு அணைபோட எத்தனித்தாள் மங்கை.

''போய் வாருங்கள், அத்தான்....!''

மங்கை மறுபடியும் தலை நிமிர்த்திப் பார்த்தபோது, அங்கே திரும்பவும் தன்னுடைய அத்தான் நிற்பதைக் கண்டாள்.

''ஏன், போகவில்லையா அத்தான்....?''

''போய் வாருங்கள் என்றுயே? போனார்; வந்துவிட்டார்!'' என்ற புதிய குரல் கேட்டது.

அங்கே மல்லிகா நின்றாள்.

''சகோதரி, என்னை மன்னித்து விடு. நீயும் உன் அத்தானும் கொண்டிருந்த காதலில் குறுக்கிட எனக்கு உரிமை ஏது? மிஸ்டர் மாறனின் சின்னம்மா மூலம் விஷயம் முழுவதையும் தெரிந்து கொண்டேன். அன்பரே, நீங்களும் என்னை மன்னியுங்கள். பிஞ்சுப் பிராயத்திலிருந்தே வளர்ந்த அன்புக்கு வாழ்வு தர வேண்டியதுவே உங்கள் கடமையாகும்; அந்த உறவு முறைக்குத்தான் – அந்த இன்பக் காதலுக்குத்தான் பக்க பலமும் அதிகம்!''

மங்கையின் கையிலிருந்த 'கடைசிக் கடிதம்' பறந்தது! ★

உத்திரவாதமுள்ள

❋ பவுன் நகைகள், வெள்ளி பாத்திரங்கள்

❋ ஸ்விஸ், ஜெர்மன் கைக் கடியாரங்கள்

❋ மேஜை கடியார வகையராக்களுக்கு

ஜெயின் ஜுவல்லரி கம்பெனி

1, நாகேஸ்வரராவ் ரோட்,

தியாகராயநகர், மதராஸ்-17.

கதை :

பாசம்

அந்த அகல் விளக்கு, எரியலாமா, அல்லது அணைந்துவிடலாமா என்ற பிரச்சினையில் தீவிரமாக இறங்கிவிட்டது.

காளன் வெளிக்காற்றையும் உள் விளக்கையும் கவனியாதது போல ஏதோ எண்ணமிட்டுக் கொண்டிருந்தான். அவன் மனம் ஒரு வருடத்திற்கு முன் பறந்து செனறது; சென்னையில் திருவல்லிக்கேணி சாலையில் காணாமற் போன தன் வளர்ப்புப் பெண் வனஜா மீது லயித்திருந்தது. 'கேவலம் ஒரு படகோட்டியிடம் வளர வேண்டிய பெண்ணா அவள்? அடடா, என்ன சமர்த்து. என்ன சூடிகை, என்ன புத்திசாலி! என் மகன் சொக்கன் பதி

எம். கே.
சீனிவாசன்

இங்கே!



ஐந்து வயதிலேயே சிலோனுக்கு ஓடிப்போனபோது கூட நான் இவ்வளவு வருந்தவில்லையே?' என்று தன் மனத்துக்குள் எண்ணி வருந்தினான் காளன்.

அப்பன் நாலு அடி அடித்தான். அதைத் தாங்காத மகன் ஒருவரிடமும் சொல்லிக் கொள்ளாமல் ஊரைவிட்டு ஓடிவிட்டான். பிள்ளையைப் பிரிந்த துக்கம் தாங்காமல் உயிரை விட்டாள் காளனின் மனைவி மருதி. அந்தச் சமயத்தில் வழிதவறி அழுது கொண்டு நின்ற வனஜாவைப் பார்த்தான்; தன் வீட்டிற்கு அழைத்து வந்து விட்டான். நான்கு வருடங்கள் வனஜாவை உயிருக்குயிராய் வளர்த்தான். தன் மகன் திரும்பி வந்துவிட்டால், அவனுக்கு வனஜா

வைக் கட்டிக் கொடுக்கலாம் என்ற எண்ணமும் அவனது மனத்தில் எழும்பி நின்றது. ஆண்டவனின் சோதனை போல், சிறுமி வனஜா காணமல் போன இரண்டாவது வாரம் சொக்கன் இலங்கை அகதிகளுள் ஒருவனைத் திரும்பி வந்தான். 'மனைவி இறந்து, பையன் ஓடிப் போன பொழுது, கடவுள் ஒரு ஆதரவாக வனஜாவை அனுப்பி வைத்தார். பிள்ளை வருகிற சமயம் பார்த்து வனஜா மறைந்து விட்டாள். பெண் குழந்தைக்குச் சொக்கனைப் போல் திரும்பிவரச் சாமர்த்தியம் இருக்குமா? எங்கே அகப்பட்டுக் கொண்டு தவிக்கிறதோ?' என்று காளன் புலம்பினன்.

தெய்வமும் மனிதனும் அபிப்பிராயபேதங் கொண்ட கட்சிக்காரர்கள் போலும்!

* * *

- அன்பு ஒரு பக்கம்;
- பாசம் மறு பக்கம்;
- வனஜா குழம்பினுள்!

வனஜாவைத் தேடி அலுத்துப் போன பிறகு தன் சொந்த ஊராகிய மதுரைக்கே வந்து சேர்ந்தான் காளன். மதுரை மாரியம்மன் குளத்தில் மறுபடியும் படகோட்டியாக அமர்ந்தான். குழந்தைப் பருவ முதல் முப்பத்தைந்து வருடங்கள் அவன் வாழ்ந்த ஊர் ஆலவாய். இடைக்கால வாழ்க்கையைச் சென்னையில் தொடங்க நேரிட்டது. ''காளன் பழைய காளனைக் காணப்படலியே....! ஓடிப் போன[illegible]வன் வந்துட்ட பிறகுகூட முகத்திலே பொலிவு காணலேயே? சோர்ந்து கிடக்கிறனே..?'' என்று அவன் சகாக்கள் பேசிக் கொண்டார்கள். சென்னையில் அவன் வளர்த்த வனஜா காணமற்போன துயரத்தை அவனுடைய தோழர்கள் எவ்வாறு அறிவார்கள்?

படகை அக்கரைக்குச் செலுத்த ஓர் அணு; இக்கரைக்குக் கொண்டுவர ஓர் அணு. சாதாரண நாட்களில், ஒரு தடவைக்கு சேர்ந்தாற்போல் பதினைந்து அல்லது இருபது பேர் அவன் படகில் ஏறுவார்கள். ''நல்ல வரும்படிதான்; அடேயப்பா!'' என்று அவனது உறவினர்கள் கூறினர். ஆனல் காளன் மட்டும் மகிழ்ச்சி அடைந்தவனகக் காணவில்லை.

''நயினு, இதோ பார். இன்றைய வரும்படி,'' என்று பூரிப்புடன் கொண்டு வருவான் சொக்கன்.

''ம்!'' என்று வரும் தந்தையின் பதிலைக் கேட்ட சொக்கன் அப்படியே வெம்பி வெடித்துப் போவான்.

'நாம கை நிறைய சம்பாதித்தும் நயனுவுக்கு சந்தோஷமே இல்லையே? அடுத்தபடி வனஜாவைப் பத்தி பேச்சு வந்தால் நயனு எவ்வளவு சந்தோஷம் காட்டுகிருரு? பெத்த பிள்ளையிடம் அக்கறையும் அன்பும் காணலேயே?' என்று அடிக்கடி நினைத்து சொக்கன் வருத்தப்படுவான். அவன் தகப்பனின் செயல் அவனுடைய மனத்தில் புயலைக் கிளப்பி விட்டது.

'என் வாழ்வைக் குலைக்க வந்த அந்த வனஜா ஒரு பெண்ணு? இல்லை, அது ஒரு பெண் பேய்....!' என்று சொக்கனின் மனம் எரிமலையாகக் குமுறிக் கொண்டிருந்தது.

எரிமலையின் சிரிப்பு ஆரம்பமாவதற்கு ஒத்திகை தேவை கிடையாதுதானே....?

* * *

இப்பொழுதெல்லாம் காளன் அதிகமாகப் படகு ஓட்டச் செல்வதில்லை. சொக்கனே அவ் வேலையைச் செய்து கொண்டு வந்தான். அதுவும் உற்சவ நாட்கள் வந்து விட்டால் சொக்கன் பாடு கொண்டாட்டந்தான். சம்பாதிக்கும் பணத்திற்குத் திட்டமும் போட்டு விடுவான். அந்தத் திட்டங்களில் தானும் தன் தகப்பனும் போட்டோ பிடித்துக் கொள்ள வேண்டும் என்பதும் ஒன்ருகும்.

''ஏனய்யா, படகோட்டி....'' என்று படிக்கட்டில் ஒரு சத்தம் கேட்டது.

''ஏ. யார் அது?'' என்று திரும்பிக் கேட்டான் சொக்கன்.

''என்னைக் கொஞ்சம் ஏற்றிக்கிருயா?'' என்ருள் ஒரு சிறு பெண்.

சிறுமியாகத் தென்படவே, ''உன் பெரியவங்களைக் கூப்பிடு,'' என்ருன் சொக்கன்.

அதற்குள் படகில் கால் வைத்து விட்ட பெண், ''இல்லே. நான் தான் போகணும்,'' என்ருள்.

''அப்படியாஞ, படகிலே உட்கார். ஆட்கள் சேரட்டும்,'' என்ருன் சொக்கன்.

கூட்டம் சீக்கிரம் சேர்ந்து விட்டது. ''படகைக் கவிழ்த்து விடாதீங்க. கூட்டம் அதிகம்தான்...'' என்று கூறிக் கொண்டே பணம் வசூலிப்பதற்காக சொக்கன் அச் சிறுமியிடம் கையை நீட்டினுன்.

''பணம் எங்கிட்டே இல்லே. அக்கரைக்குப் போய்த் தருகிறேன்.''

''காசு இல்லாத பேரமே வாணும். காசு இல்லேண்ணு கீழே இறங்கு.''

''அக்கரையிலே ஆள் இருக்குதையா. அங்கே கண்டிப்பாய் பணம் கட்டி விடுறேன்.''

''அட கிரகச்சாரமே! காசு இல்லாமல் வக்கீல் மாதிரி என்னேடே வாதம் பண்ணுதே... நீ இறங்கு முதல்லே....!''

சிறுமி தயங்கிக் கொண்டே இறங்கும் பொழுது, படகில் இருந்த ஒரு பெரியவர் ''பாவம் அந்தப் பெண்ணை ஏத்திக்க அப்பா. நான் தரேன் ஒரு அணு,'' என்ருர்.

சொக்கன் மனத்தில் பெரியவரின் சொற்கள் நறுக்கென்று பட்டன. அந்தப் பெண்ணை அழைக்கத் திரும்பினுன். ''ஏ குட்டி, குழந்தை....'' என்று அவன் கத்தினுன்; ஆனல் அது—மேற்பட குரல் காற்ருேடு போய்விட்டது.

* * *

''நயனு, போட்டோ எடுக்கிற வர் வந்துட்டாரு. உன்னேடே நின்னுகிட்டு நான் படம் எடுத்துக்க ஆசையா யிருக்குது,'' என்ருன் சொக்கன்.

''சொக்கா, போட்டான்னு சொன்னதும் எனக்கு ஒண்ணு ஞாபகத்திற்கு வருது. வனஜா ஒரு போட்டாவிலே எவ்வளவு அழகாய் இருக்குது தெரியுமா?'' என்று கூறிக் கொண்டே ஒரு டிரங்குப் பெட்டியைத் திறந்தான் காளன். அதில் இருந்த சாமான்களை எடுத்துக் கீழே வைத்தான். ஒரு காகிதத்தில் மடித்து வைத்திருந்த புகைப்படத்தை வெளியே எடுத்துப் பிரித்தான். ''அவ்வளவு அழகான சிறுமியா வனஜா?'' என்று சொக்கன் திகைத்து விட்டான். மீண்டும் போட்டோவை எடுத்துக் கையில் வைத்துக்கொண்டு கூர்மையாக பார்த்த பொழுது, சொக்கன் 'ஆ' என்று அலறி விட்டான். ''நயனு, இந்தப் பொண்ணை இந்த ஊரில் உற்சவத்துக்கு முன்னலே பாத்தேன். அது வனஜாவே தான்!'' என்ருன் சொக்கன்.

''அட பாவி! அந்தக் குழந்தை மேல் இருந்த குரோதத்தால்தான் படகில் ஏற வேண்டாம்ன்னு நீ சொல்லிட்டியா? சண்டாளா! நான் வனஜாவைக் காண வேணுமென்று ஏங்கிக்கிடக்கிறேனே....? அதை இக்கரைக்கு கொண்டு வந்து விட்டால், அவளை எங்கு நான் கண்டு கொள்வேனே என்கிற பயம் உனக்கு ஏற்பட்டுது போல் இருக்குது....! துரோகி, என் கண்முன்னே நில்லாதே.''

- இங்கே காளன்;
- அங்கே சொக்கன்;
- இடையில் புயல்....!

என்று கண்டபடி மனம் போன வாறு திட்டினன் காளன்.

உறவு வேறு; பாசம் வேறல்லவா....?

* * *

நான்கு ஆண்டுகள் உருண்டோடின, காலதேவனின் கருணையினல்.

ஒருநாள் சாயந்திரம் ஆறு மணிக்கு காளனின் படகில் அக்கரை போவதற்கு ஆறு பிராயணிகள் ஏறிக் கொண்டனர். வயது வந்த ஒரு பெண்ணும் பெரியவர் ஒருவரும் படகோட்டியின் பக்கத்தில் உட்கார்ந்திருந்தனர்.

''மாமா, ஐந்து வருஷத்துக்கு முன்னே என்னை நீங்க பட்டிணத்திலே பார்த்திருக்கா விட்டால், இன்னும் அந்தப் படகோட்டி காளன் வீட்டில்தானே வளர்ந்து கொண்டிருப்பேன்? போயும் போயும் என்னைக்கொண்டு போய் அவன் வீட்டில் விடும்படி விதி சதி செய்ததே? அதைத்தான் சொல்ல வேண்டும்,'' என்ருள் அப்பெண்.

''வனஜா, நீ என் தங்கை பெண். நீ என் சொத்து. உன் அப்பா அம்மா காலராவில் இறந்த செய்தி கேட்டு நான் பட்டணம் வந்தேன். அங்கே உன்னைக் காண வில்லை. மறுபடியும் மதுரைக்கு வந்தேன். பல வருடங்கள் கழித்து உன்னை மறுபடியும் சென்னையிலே சந்தித்தேன். என் சொத்தை நான் எடுத்து வளர்க்கும் பாக்கியத்தை பகவான் அருளி யிருக்கிருர்,'' என்ருர் பெரியவர்.

இதைக் கேட்டுக் கொண்டு வந்த காளனுக்கு, உணர்ச்சி வெள்ளம் நாவிற்குத் தடை போட்டது. 'வனஜாவா இப்படிப் பேசினள்? நம்பவே முடியாது; நம்பவே முடியாது. என் உயிருக் குயிராய் இருந்த வனஜாவா என்னைப் பிரிந்து இவ்வாறு பேசுகிருள்? நடு வழியில் கிடைத்த ஆஸ்தி வனஜா. அது தன் சொந்தக்காரரிடம் போய்ச் சேர்ந்தது. இதற்காகவா என் ஒரே மகனை வீட்டை விட்டுப் போகும்படி ஏசிப்பேசி விட்டேன்? நாலு வருஷமாக என் மகன் எங்கே அலைகிருனே? என்ன துரோகம் செய்து விட்டேன்!' என்று அவன் மனம் உள்ளுக் குள்ளே கொந்தளித்துக் கொண்டே இருந்தது.

அவனுடைய கைகள் மாத்திரம் யந்திரம் மாதிரி படகை வலித்துக் கொண்டிருந்தன. அவனது கண்கள், வனஜா இறங்கிச் சென்ற வழியை நாடி அகல விரிந்தன.

* * *

உடம்பு நெருப்பாகக் கொதித்துக் கொண்டிருந்தது.

''சொக்கா, என்னை தள்ளாத காலத்திலே தனியா விட்டுட்டு எங்கே போனே? நான் உன் மனசைப் புண்படுத்திட்டேனு?'' என்று பிதற்றிக் கொண்டிருந்தான் காளன்.

''நயனு, இதோ வந்திட்டேன். சொல்லிக்காமல் போனதற்கு கோவிச்சுக்காதே. உன் வளர்ப்புப் பெண் விலாசத்தையும் கொண்டாந்திட்டேன். இந்த ஊரில் தான் வனஜா தன் புருஷனுடன் குடித்தனம் பண்ணிக் கொண்டிருக்குது. நாற்பத் தொன்பதாம் நம்பர் வீடு....மேல் மாசி வீதி....'' என்ருன் சொக்கன்.

சூன்ய வெளியில் காளனின் கண்கள் நிலைத்தன.

''மகனே, வனஜா எங்கேயாவது நல்லாயிருக்கட்டும். அது ஒண்ணுதான் என் ஆசியும் ஆசையும்! இந்தத் தள்ளாத வயதில் நீயும் என்னை விட்டுட்டுப் போயிடாதே. உனக்கு ஒரு பெண் பார்த்து வச்சிருக்கிறேன். உன்னேட நல்ல வாழ்க்கைதான் இனி என்னேட லட்சியம்...! நீ என் பக்கத்தில் உட்காருடா, என் ராஜா!'' என்று கூறிப் பக்கத்தில் உட்கார்ந்த சொக்கனை அன்போடு அணைத்துக் கொண்டான் காளன்.

விண்முகம் நிர்மலமானது! ○

ஆண்டு அறிக்கை

உலகக் கண்ணோட்டத்தை ஈர்க்கும் வகையில் 'ஸாகித்ய' என்ற சம்ஸ்கிருதச் சொல்லையும் 'அகாடமி' என்ற கிரேக்க வார்த்தையையும் இணைத்துக்கொண்டு உருவாகியுள்ள இந்தத் தேசிய இலக்கிய நிறுவனத்தின் தொண்டு பற்றியும் 1955–56 ஆண்டு அறிக்கை குறித்தும் விளக்கம் தரும் சிறு நூல் இது.

வெளியீட்டகம்: 'ஸாஹித்ய அகாடெமி'; புது டில்லி.

தமிழரசுக் கழகத் தலைவர்களின் வாழ்க்கைப் பாதையில்....

தமிழரசுக் கழகத் தலைவர்களின் வாழ்க்கையில் நடந்த சுவையான சம்பவங்களின் விவரத்தையும், பிரமுகர்களின் வாழ்க்கை வரலாற்றையும் திரு வேலாயுதம் சிறப்பாக எழுதியிருக்கிறார்.

தலைவர் ம. பொ. சி, கவி ஷெரீப், ஆசிரியர் ஜி. உமாபதி, பி. எஸ். மணி, ந. சஞ்சீவி, சின்ன அண்ணமலை, கு. சா. கி, கலைஞர் நாகராஜன் போன்ற பெயர்கள் இப்புத்தகத்தின் உள்ளுறைக்குப் பெருமை தருகின்றன.

'இந்தத் தொகுப்பு நூல் மிகவும் பாராட்டத் தக்கது' என்று நாமக்கல் கவிஞர் குறிப்பிட்டுள்ளார்.

ஆசிரியர்: என். ஏ. வேலாயுதம், **வெளியீடு:** அன்பு நிலையம், நாகர்கோயில், **விலை:** ரூ. 0–12–0.

சித்திரகவி மாலை

கீர்த்தனை அரசு ஜனாப் அப்துல் கபூர் சாஹிப் அவர்கள் 'ஔவை' சண்முகம் அவர்கள்மீது இயற்றிய பாமாலைத்தொகுப்பு இது. கிள்ளைவிடு தூது போன்ற வெவ்வேறு பிரிவுகளில் பாடப்பட்டிருக்கும் இப்பாடல்கள் இனிமையாகவும் சிறப்பாகவும் ஒலிக்கின்றன.

ஆசிரியர்: ஆசுகவி பி. வி. அப்துல் கபூர் சாஹிப் புலவர், **வெளியீடு:** அவ்வையகம், சென்னை-6. **விலை** ரூ. 2.

இன்கவித் திரட்டு

நடிகமணிகளான டி. கே. எஸ். சகோதரர்களின் குருவாக அமைந்த திரு சங்கரதாஸ் சுவாமிகள் இயற்றிய கவிதைகளைத் திரட்டி நூல் வடிவில் வெளிக்கொணர்ந்திருக்கின்றனர் அவ்வையகத்தினர். பக்தி ரசக் கீர்த்தனைகள் முதல் பகுதியில் இடம் பெறுகின்றன. திருமதி கே. பி. எஸ், மாரியப்ப சுவாமிகள் போன்றோர் இப்பாடல்களைப் பாடி வருவது குறிப்பிடத் தக்கது.

ஆசிரியர்: சங்கரதாஸ் சுவாமிகள், **வெளியீடு:** அவ்வையகம், சென்னை-6; **விலை** ரூ. 0–4–0.

தமிழ் இனம்

தமிழ் இனத்தின் தனிப்பெரும் தலைவர் திரு ம. பொ. சி. அவர்களின் உருவப் படத்துடனும் அவரைப் பற்றிய கட்டுரை ஒன்றுடனும் ஆரம்பமாகியுள்ளது, இந்த மாதம் இருமுறை ஏடு. 'ஏன் இந்த இன முழக்கம்?' என்ற முதல் தலையங்கம் சிறப்பானது. மகிழ்ச்சியுடன் வரவேற்று வாழ்த்துக் கூறுகின்றோம்.

நிர்வாக ஆசிரியர்: வ. மாணிக்கவேலு, **ஆசிரியர்:** இதயவேந்தன், **முகவரி:** 16, கல்மண்டபம், சென்னை-1. **விலை:** அணா ஒன்று.

பிறை

திரு ஏ. எம். மீரான் இதன் ஆசிரியர். முதல் இரண்டு இதழ்களிலும் அறிமுகமானவர்கள் எழுதியிருக்கிறார்கள். அவர்களின் 'சரக்கு' விலை போகக் கூடியதாகும். இயன்ற அளவுக்குப் பொது நலக் கண்ணோட்டம் கொண்டு பணி புரியுமென்று நம்புகிறோம்.

அலுவலகம்: அங்கப்ப நாய்க்கன் தெரு, சென்னை-1. **விலை** ரூ. 0–6–0. —'பிறைசூடி' ★

வாழ்க்கையே

"இந்திரா, நாளையோடு நம் கஷ்டங்களெல்லாம் விடிந்து விடுமென்று நினைக்கிறேன். காலையில் தண்டையார்பேட்டைக்குப் புறப்பட வேண்டும். படத் தயாரிப்பாளர் சிவநேசன் அவர்களைச் சந்திக்க வேண்டும். இப்பொழுது அவர் பிடித்துக்கொண்டிருக்கும் படம் முடிந்ததும், வேறு படத்துக்குப் பூஜை போடப் போகிறார்களாம். என்னை ஒரு கதை எழுதித் தரச் சொல்லியிருக்கிறார். சென்ற முப்பது நாற்பது நாட்கள் இரவு பகலாக உழைத்ததற்குப் பலன் கிடைக்காமல் போகாது. எல்லாம் அந்த ஆண்டவன் செயல்தான்,'' என்று விவரித்து நிறுத்தியது தான் தாமதம்; தன் கணவர் ராமமூர்த்தியின் முகத்தையே கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டேயிருந்தாள் இந்திரா.

''ஏன்னா, முதலிலே பணம் வந்தவுடன் நாமெல்லாம் டாக்ஸி பிடித்து இண்டி எக்ஸிபிஷனுக்குப் போய் வருவோம். டெலிவிஷன் கூட காட்டறாங்களாம்.... இன்னும் நாலைஞ்சு நாள் வரையிலே தானாம்!....'' என்றாள் வீட்டுத் தலைவி.

அன்பான மனைவியை ஏற இறங்கப் பார்த்தார் ராமமூர்த்தி. ''பலே, உங்கள் பேச்சையே என் கதாநாயகனுக்கோ கதாநாயகிக்கோ பேசாமல் கொடுத்திடலாம் போலிருக்கே!

வாழ்க்கை...!

கே. பொன்னம்மாள்

கதையை இன்னிக்கு ராத்திரி பூர்த்தி பண்ண வேணும். இது முதல் விஷயம். அடுத்தது, காலையில் அதைக் கொண்டுபோய் ப்ரொட்யூஸர் கையில் சமர்ப்பிக்க வேணும். அப்புறம் அவர் கதை வசனத்தைப் படித்துப் பார்த்து முடிவு சொல்லவேணும். பணம் காசெல்லாம் அந்தப் புண்ணியவான் இரும்புப் பெட்டியில் அல்லவா இருக்கிறது! பொறுங்கள், சற்றே பொறுங்கள்!'' என்று கூறிச் சிரிக்கலானர் இல்லறத் தலைவர்.

படத் தயாரிப்பாளர் சிவநேசன் அவர்கள், வசன கர்த்தா ராமமூர்த்தி கொடுத்த 'குடும்பச் சுடர்' கதை வசனத்தில் மூழ்கிப் போயிருந்தார்.

ராமமூர்த்திக்கு நெஞ்சம் 'படக், படக்' கென்று அடித்துக் கொண்டிருந்தது. அவரது எதிர் காலமே அந்தக் கைப்பிரதியில்—அல்ல, பட முதலாளி சொல்லும் அம்முடிவில் அல்லவா இருக்கிறது!

மூன்று மணி நேரத்துக்குப் பிறகு, திரைப்பட உரிமையாளர் மூக்குக் கண்ணுடியைக் காதிலிருந்து கழற்றி விட்டு, ஒருமுறை கதாசிரியரைப் பார்த்தார். ''மிஸ்டர் ராமமூர்த்தி, நீங்கள் இப்போது கொடுத்த கதை, அதாவது, கதையும் வசனமும் அவ்வளவு எடுப்பாக அமையவில்லை!'' என்ருர்.

ராமமூர்த்தியின் கண்களில் கண்ணீர் வந்துவிடும் போலிருந்தது.

'' அப்படியென்ருல் வேறு ஏதாவது எழுதித் தரட்டுமா?....குடும்ப நிலை ரொம்பவும் சீர் கெட்டுப் போயிருக்கிறது, ஸார்!''

''பாவம், உங்களுக்காக ரொம்பவும் அனுதாபப் படுகிறேன். எவ்வளவுதான் எழுதுவீர்கள்? ஆனால், நீங்கள் நேற்று உங்கள் பையன் மூலம் கொடுத்தனுப்பிய கதைச் சுருக்கம் வெகு சிறப்பாக அமைந்து விட்டது. இந்தக் காலத்தில் ரொம்பவும் எடுபடும். அது பெண்களுக்குப் பிடித்தமான கதை. இப்போதெல்லாம் பெண்கள் மார்க்கெட்டைப் பிடிக்கத் தானே படங்களெல்லாம் பாடுபடுகின்றன!...'' என்ருர் அவர்.

ராமமூர்த்திக்குக் கேட்பது தூக்கத்தில் அல்ல என்பது ஊர்ஜிதமாயிற்று. அவர் கண்களைத் துடைத்துக் கொண்டு திரும்பிய போது—

''இந்தாருங்கள் ஆயிர ரூபாய்க்கு செக். இது முன்பணம். நீங்கள் எழுதியிருக்கும் முதல் கதையான 'வாழ்க்கையோ, வாழ்க்கை'க்கே வசனத்தையும் எழுதி விடுங்கள். தினமும் எங்கள் கார் உங்களை இங்கு கொண்டு வந்து சேர்க்கும். நாளை ஒப்பந்தம் செய்து கொள்வோம். இந்தாருங்கள் உங்கள் கதை....!''

'வாழ்க்கையோ, வாழ்க்கை!' கதைக் குறிப்பில் இருந்த தன் பெயர், தன் விலாசத்தைக் கண்டதும், எழுத்தில் கவனம் செலுத்திஞர் எழுத்தாளர். அவருடைய கண்களிலே ஆனந்தக் கண்ணீர் இருந்தது.

'பாவம், என் இந்திரா எனக்காகக் கஷ்டப்பட்டிருக்கிருள். ஒரு வேளை ஒரு கதைக்கு இரண்டாகத் தயாரித்தால், ஏதாவது ஒன்று இல்லாவிட்டாலும், இன்னென்று வது பயன்படுமே என்ற நினைப்பில் அவள் செய்த காரியம் நல்ல பலனைத்தான் காட்டி யிருக்கிறது. என்னைத் திகைக்கச் செய்ய எண்ணிய அவளைப் பதிலுக்கு நானும் திகைக்கச் செய்ய வேண்டாமா?'

ராமமூர்த்தி சிரித்தார்! ★

விமரிசனம் :

எங்கள் வீட்டு மஹாலக்ஷ்மி

திருமதி அங்கமுத்துவிற்கு இந்தப் படத்தில் லக்ஷ்மி என்று பெயர் சூட்டப்பட்டிருக்கிறது. ஆனால், 'எங்கள் வீட்டு மகாலக்ஷ்மி' என்ற இப்படத்தின் பெயருக்கும், முன்னால் அறிமுகப் படுத்திய உப பாத்திரத்திற்கும் யாதொரு சம்பந்தமும் கிடையாது. இந்தப் பாத்திரம் சத்தம் செய்தால், நாம் சிரிக்க வேண்டும். அவ்வளவுதான் நிபந்தனை!

அடுத்தபடியாக, இந்தத் திரை ஒவியத்தில் இன்னொரு விசேஷமும் உண்டு. அதாவது, பெரிய பெரிய நட்சத்திரங்கள் நம்முடைய கைதட்டலுக்குப் பாத்திரமாவதற்குப் பதிலாக, ஒரு நாய் நம்முடைய கரகோஷத்தையெல்லாம் தட்டிக்கொண்டு போய் விடுகிறது. நன்றி மிகுந்த பிராணி நாய் என்பதைப் படத் தயாரிப்பாளர்கள் மறந்து விடவில்லை.

மிஸ்டர் 'ரூட்'டிற்கு ஒரு ஜே போட வேண்டும்.

திரு நாகேஸ்வரராவ் மறுபடியும் ஒரு தேவதாஸாக வேஷம் புனைந்தால்தான் ரசிகர்களின் நெஞ்சங்களில் அழியாத இடம் பெற முடியுமோ, என்னவோ? 'மாதர் குல மாணிக்க'த்தில்கூட இவர் அவ்வளவு எடுபடவில்லை; இதிலும் அப்படித்தான். தமிழைச் சரிவர உணர்ச்சி பூர்வமாகப் பேச வந்து விட்டால்கூடப் போதும். நடிப்பும் தூக்கலாகக் காணப்படும். இவருக்கு ஜோடி திருமதி சாவித்திரி. கதையில் சுசிலா. இவரையொட்டித்தான் படத்திற்குப் பெயர் இடப்பட்டிருக்கிறது. இவரையே லக்ஷ்மியாகவும் கூப்பிட்டிருக்கலாமே! இல்லற ஜோதியின் சுடரொளி அற்புதமாக, ஆனந்தமாக, அமைதியாக வீசக் காண்கிறோம்—இவர்கள் வீட்டு மகாலக்ஷ்மியின் முகத்திலே. உணர்ந்து, ஒன்றி நடித்திருக்கின்றார்.

— சம்பூர்ண ராமாயணம்

திருமதி கண்ணாம்பா என்றவுடன், பொது மக்களுக்கு ஒரு 'கண்ணகி'யும் ஒரு 'மனோகரா'வும் மட்டுமே நினைவு வந்தால், அப்புறம் திருமதி நாகபூஷணத்தின் பாடு ஆபத்தாகி விடும்; அதைவிட, படாதிபதிகளின் நிலையும் தர்ம சங்கடமாகப்போகும். இப்படத்தில் பாசம், அன்பு முதலான குண நலன்களின் உருவாகக் காட்சி தந்து, அதன் நன்மை தீமைச் சக்திகளால் அலைக்கழிக்கப் படும்போது, தான் அழுவதுடன்

நம்மையும் அழ வைக்கிருர். 'பயல்' வெகு நேர்த்தி! குடும்பம் பிரிந்து, கண்ணும்பாவிடம் விடை பெற்றுச் செல்லும்பொழுது இவனுடைய நடிப்பு, பத்து வயசுச் சிறுவஞ என்ற ஆச்சரியத்தை எழுப்புகிறது. மறந்து விடாமல், டைரக்டருக்குப் பாராட்டுதல்கள் சொல்லவேண்டும்.

திரு ரங்காராவ் இப்போது நமக்கெல்லாம் அடிக்கடி பேட்டி தருகிருர். களி தெலுங்கைத்தான் இவர் பேசும் தேமதுரத் தமிழிலே கேட்க முடிகிறது. இவருக்குப் பாடம் பண்ண எழுதிக் கொடுத்த வசனங்களில் சிரிப்பு வழிகிறது. வாழ்க இவருடைய ஞாபக மறதி! இவரது தம்பி திரு தங்கவேலு. பட்டிக்காட்டான் என்ருலும், ஒண்ணும் நம்பர் பட்டிக் காட்டான்தான். வயிறு வலிக்கிறது. இவர் தான் குற்றவாளி! திருமதி சுந்தரி பாய்க்குப் புதுமாதியான பாகம் தரப்பட்டிருக்கிறது.

திரு நம்பியாரைப் பற்றிப் பேச்சில்லை. திருமதி ராஜசுலோசஞவின் சதங்கைகளுக்கு வேலை அதிகம். கதையை வளர்த்திச் சென்ற பெருமைக்குரியது இப்பெயர். ஈ. வி. சரோஜா நடனமும் இதில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

'உடுமலை'யின் பாட்டுக்களுக்குரிய பின்னணி செவிக்கு விருந்தாக அமைந்திருக்கிறது.

— இரு சகோதரிகள்

— மக்களைப் பெற்ற மகராசி

படம் என்ருல், கதையென்ருல் திருப்பங்கள் வேண்டாமா? 'டெம்போ' தேவையில்லையா....?

அவசியம் குடும்பம் குடும்பமாக—மாமியார் மருமகள் சகிதம்—ஒரு தரத்திற்கு இரண்டுதரமாகப் பார்க்கத் தகுந்த படம் இது.

அண்ணன்—தம்பி; மாமியார்—மருமகள், வஞ்சம், பாசம், அன்பு—இத்தகைய சின்னச் சின்ன வார்த்தைகளுக்குக் கதை அமைத்துத் தந்த பெருமை ஒரு வங்காளிக் கதைக்குக் கிடைக்கிறது. தமிழில் இதைவிடச் சிறந்த கதைகள் ஏராளமாக இருக்கின்றனவே....!

—'பைரவி' ★

குடும்பக் கட்டுப்பாடு

கர்ப்பத்தடை

இம்மாத்திரைகளை 12 தினங்கள் உட்கொண்டால் கர்ப்பக்கட்டுப்பாட்டுக்குப் பாதுகாப்பளிக்கிறது

முழு சிகிச்சைக்கான 24 பில்லைகள் பாக்கிங் விலை ரூ. 12/- வி. பி. பி. தனி

இந்தியாவிலும் வெளிநாடுகளிலுமிருந்து பலதுறைகளிலுமுள்ள இதை உபயோகித்த எண்ணற்றவர்களிடமிருந்து ஏராளமான நற்சாட்சிப் பத்திரங்கள் கிடைத்துள்ளன.

அரங்கில் "ஸ்பெக் டாப்லெட்டுகள்" (ரிஜிஸ்டர்டு) பெண்மணிகள் வாயில் போட்டு சாப்பிடுவதற்கு வழங்கப்படுகிறது.

ஏங்கும் கிடைக்கும்

தந்தி "ORCAS" (ஸ்தாபிதம் 1946) போன் 55357

சீனு அண்ட் கோ., 28, R. தாண்டவராய கிராமணி தெரு, மதராஸ்-21.

கிளை சிங்கப்பூர்-8. (சிலோன்) ஏஜன்டுகள் N. C. M. ஸ்டோர்ஸ் 82 மெயின் தெரு-கொழும்பு-11. (ADVT. PERMITTED UNDER G.O. MS. NO. 1121, HEALTH)

தி. தி. ஏகப்ப செட்டி அண்டு ஸன்,

(உலோக வியாபாரம்)

அரசாங்கப் பதிவு செய்யப் பெற்ற

இரும்பு எஃகு விற்பனையாளர்

துவக்கம்: 1860

செயலகம்: 116, நைனியப்ப நாய்க்கன் தெரு, சென்னை - 3.

உரிமையாளர்:

தி. தி. குப்புசுவாமி செட்டியாரும் அவர் புதல்வர்

தி. தி. சண்முக வடிவேலும்

எல்லா வகைப்பட்ட இரும்பு, எஃகு, கம்பி, தகடு, முதலியவைகளும், செம்பு, பித்தளைத் தகடுகளும் எங்களிடம் கிடைக்கும்.

உங்கள் அதிருஷ்டம் 1957க்கு

உங்கள் பெயரும், முழு விலாசமும் கொண்ட ஒரு தபால் கார்டில் ஏதாவது ஒரு புஷ்பத்தின் பெயரை எழுதி எங்களுக்கு அனுப்புங்கள். ரூ. 1-4-0-க்கு (தபால் செலவு தனி) வரப்போகும் 12-மாதங்களுக்கு நாங்கள் உங்களுக்கு எதிர்கால பலன் எழுதி அனுப்புகிறோம். வியாபாரத்தில் லாப நஷ்டம், உத்தியோக உயர்வு, உத்தியோக மாற்றல், விவாகம், குழந்தை பிறப்பு, சுக துக்கங்கள் ஆகியவை பற்றிய விவரங்களையும், இன்னல்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ளும் மார்க்கத்தையும் தெரிவிக்கிறோம்.

Shree Swami **SATNARAIN JYOTISH ASHRAM**
(U.M.) HOSHIARPUR (Pb.)

17220

ஆஸ்த்மாவா ?
ஒரு நொடியில் அதை ஒழிப்பது
மல்ட்டிமிக்ஸ்
தாராளமாக மூச்சு வரச் செய்து, தொண்டைக்கு இதமாக இருந்து, மூச்சடைப்பையும் இருமலையும் போக்குகிறது.
MULTIMIX
இந்தோ-ப்ரெஞ்ச் பார்மஸூடிகல் கோ.,
காதோலிக் ஸென்டர், மதராஸ்-1

Pilot
WORLD FAMOUS
PILOT INK
PILOT INK
FOUNTAIN PEN
AND INK
THE PILOT PEN CO., (INDIA) LTD.
OFFICE: CATHOLIC CENTRE, ARMENIAN ST, MADRAS-1. FACTORY RED HILLS, MADRAS.

சென்னையில் சிறந்து விளங்குவது!

அசோகா மார்க்

பட்டணம் பொடி

ஒரே சிமிட்டா பொடியில் உற்சாகமளிப்பது

காரம், மணம், குணம் நிறைந்தது.

தயாரிப்பவர்: **M.** சின்னப்பா,

2/278, தங்கசாலை தெரு, சென்னை–1.

மாத விடாய் தாமதமா?

"தேவி பில்ஸ்"
முக்கியமாக தாமதித்த, குறைவான, வலியுடன் கூடிய, தடைப்பட்ட மாதவிடாய் இவைகளுக்கு மிகச் சிறந்தது

இயற்கை தவறிவிட்டால் பிரசித்தமான தேவி பில்ஸ்களை உபயோகிக்கத் தொடங்கவும்

1. எல்லா சந்தர்ப்பங்களிலும் துரிதமாக திறமையாக குணமளிக்கிறது.
2. எந்த நிலைமையிலும் ஆரோக்கியத்திற்கு தீங்கு விளைவிக்காது.

எங்கும் கிடைக்கும்

விலைகள்
முழுகோர்ஸ்
28 மாத்திரைகள் ரூ.11/-
அரைகோர்ஸ்
14 மாத்திரைகள் ரூ 6/8.
வி.பி. தனி

SEENU & CO., (ESTD. 1946) 28, R. THANDAVARAYA GRAMANI STREET, MADRAS-21.

BRANCH – SINGAPORE - 8. AGENTS. – N. C. M. STORES, 82, MAIN STREET, COLOMBO-11. (ADVT PERMITTED UNDER G.O. MS. NO. 1121, HEALTH)

மாய மோதிரம்! ரொக்கப் பரிசு ரூ. 1,000!

(அபூர்வ சக்தியுடையது)

இந்த மோதிரம் மாயா ஜாலத்தாலும், மெஸ்மரிஸ சக்தியாலும் தயாரிக்கப்பட்டது. யாராவதொருவர் இம்மோதிரத்தை அணிந்து கொள்ளுங்கள்; உங்கள் காரியங்களில் வெற்றியோ, அல்லது, உங்களிடம் பணிவோ ஏற்படச் செய்யும். உங்களை எல்லாவித ஆபத்துக்களிலிருந்தும் இது காப்பாற்றும். துர்தேவதைகள் உங்களிடம் அணுகாது. இந்த மாய மோதிரத்தை அணிந்து கொண்டவர்களிடம் ஆண், பெண் அடங்கி நடப்பார்கள். இவர் பெயரைக் கேட்டாலே நடுங்குவர். காணமற் போனவர்களைக் கண்டறியலாம். நீங்கள் காதலில் வெற்றியும், கோர்ட்டு வழக்குகளிலும், உத்தியோக உயர்விலும், அதிகப் பணம் சம்பாதிப்பதிலும் வெற்றி யடைவீர்கள். சுருங்கச் சொன்னால் இம் மோதிரம் ஒரு பாதுகாப்பாளனைப் போன்றது. ஒரு முறை பரீக்ஷியுங்கள். முதல் இரவிலேயே பலன் காண்பீர்கள். இதன் விலை ரூ. 1-15-0. ஸ்பெஷல் ரூ. 3-0-0. ஸ்பெஷல் அதிக சக்தி வாய்ந்தது ரூ. 3-15-0. தபால் செலவு தனி. பலன் இல்லையென்றால் பணம் வாபஸ் செய்யப்படும்.

Principal: THE BENGAL MESMERISM HOUSE

(U. M.) **NAKODAR, (P. B)**

அச்சிட்டு வெளியிடுபவர், ஆசிரியர்: ஜி. உமாபதி, உமா பிரிண்டர்ஸ், 4/32, தாதா முத்தியப்பன் தெரு, சென்னை-1 (தமிழ் நாடு) போன்: 2200.

அன்னையின் உற்ற தோழி
ஐயோ பாவம்! குழந்தைக்கு மறுபடி சளிப்பு
அச்..ச அச் அச் அச
நல்ல முடக்கு வாதம்! வலி தாங்கமுடியவில்லை இன்றைக்கு ஆபீஸுக்குப் போனாற்போல் தான்.
அம்மா! என் கால் சுளுக்கிண்டுடுத்தே. இன்னிக்கி எப்படி மாட்ச் ஆடுவேன்.
டாக்டரின் அறையில்
...ஆமாம். அம்மா! தலைவலிக்கு மட்டுமல்ல. லிட்டில்ஸ் ஓரியண்டல் பாம், சுளுக்கு, பிடிப்பு, வாதம் மற்றும் எல்லா வலிகளுக்கும் மிகச்சிறந்தது. சளிக்கும், இருமலுக்கும், இணையற்ற நிவாரணி. நீங்கள் எப்பொழுதும் கைவசம் வைத்திருக்க வேண்டும்.
சில நாழிகைக்குப்பின்
ஓரியண்டல் பாம் தான் உங்களை இவ்வளவு சீக்கிரம் குணப்படுத்தியது.
ஆமாம். நான் ஆபீஸுக்குக் கிளம்பியாச்சு! இலையைப்போடு
நானும் கூட இன்றைக்கு மாட்ச்லே சக்கை போடு போடப் போகிறேன் அப்பா!
ஒவ்வொரு வீட்டிலும் லிட்டில்ஸ் ஓரியண்டல் பாம் அவசியம் இருக்க வேண்டும்
ORIENTAL BALM
லிட்டில்ஸ்
ஓரியண்டல் பாம்
எல்லா சளி, வலி, நோவுகளுக்கும்